





பூகம்ப அதிர்வு 9
வரவிட மாட்டோம் 10
பொலிஸார் 11 பேர் சாவு 11
ஆறுதல் அதிரடியானது 24



விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 58

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 09 திங்கட்கிழமை (23/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


# தெரிவுக்குழு தாமதமாவதால் மீண்டும் சர்வகட்சிக் குழு

## மாற்று வழி குறித்து ஆலோசிக்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஜன.23

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமது பிரதிநிதிகளின்பெயர்களைப் பரிந்துரைப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கை கடைப்பிடிக்கும் பட்சத்தில், சர்வகட்சி குழுவொன்றை அவசரமாக அமைத்து அதனூடாகத் தீர்வுத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்குமாறு பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய கட்சிகளுக்கு அரசு பலமுறை அழைப்பு விடுத்ததும் அதனை அந்தக் கட்சிகள்

» 27

## அந்தியேட்டிக் கிரியைக்குச் சென்றவர் கீரிமலை கடலில் சாவு

அளவெட்டி, ஜன.23

கீரிமலைக் கடலில் அந்தியேட்டிக் கிரியை செய்வதற்காகக் கடலில் நீராடியவர் அதில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த மயிலு மகாதேவன் (வயது-64) என்பவரே மரணமானவராவார்.

நேற்றுநண்பகல் பேரப்பிள்ளை ஒருவரின் அந்தியேட்டிக்கிரியையை நிகழ்த்துவதற்காக கடலில் நீராடியபோது இவர் மூழ்கியதாகவும் உறவினர்களால் மீட்கப்பட்டுத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது அவர் இடைவழியில் மரணமானார் என

» 27

## தங்கம் கடத்திய இந்தியர்கள் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சட்டவிரோதமாக தங்கம் எடுத்துச் செல்ல முனைந்த வெளிநாட்டவர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் சென்னை நோக்கி பயணிக்கத் தயாரான இரண்டு இந்தியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களிடம் இருந்த ஐந்து தங்க பிஸ்கட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அந்த தங்க பிஸ்கட்டுகளின் பெறுமதி 33 லட்சத்து 75 ஆயிரம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

## மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கச்சதீவு அருகே இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்பிடித்துகொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களைச் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதில் மூன்று படகுகள் சேதமடைந்துள்ளன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கு விஜயம் செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள நிலையில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தரமுயர்த்தப்படும் போர் விமானங்கள்

இலங்கை விமானப் படையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சீனாவிடம் வாங்கப்பட்ட மூன்று போர் விமானங்களை 6 மில்லியன் டொலர் செலவில் இலங்கை அரசாங்கம் தரமுயர்த்தவுள்ளது. கே-8 ரகத்தைச் சேர்ந்த மூன்று போர் விமானங்களே முதற்கட்டமாக தரமுயர்த்தப்படவுள்ளன. இந்தப் போர் விமானங்களில் நவீன கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

## பொலிஸாரின் கட்டாய வகுப்பு

முறையற்ற விதத்தில் வீதியை கடக்கும் பாதசாரிகளை போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்குவதற்கான விசேட வகுப்புகளில் பங்குபற்றச் செய்யும் திட்டத்தை போக்குவரத்து பொலிஸார் நடைமுறைப்படுத்துகின்றனர். மஞ்சள் கடவை மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகளை புறக்கணித்துவிட்டு வீதியை கடப்பவர்களை போக்குவரத்து பொலிஸார் மறித்து, அவர்களின் விவரங்களை பதிவு செய்வதுடன் வகுப்புகளுக்கு சமுகமளிப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்கின்றனர்.

## போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் ஒபாமாவின் உயர்தூதர் இலங்கை வருகை

கொழும்பு, ஜன.23

அரசு, எதிர்க்கட்சி மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் உயர்மட்டக் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக அமெரிக்காவின் உயர் மட்டத் தூதுவர் ஒருவர் எதிர்வரும் வாரங்களில் இலங்கைக்கு வரவுள்ளார்.

போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் தூதுவராகப் பணியாற்றும் ஸ்டீபன் ராப் என்ற உயர் மட்ட அமெரிக்க அதிகாரியே கொழும்பு வரவுள்ளார்.

இவர், 2007இல் சியராலியோனில் நிறுவப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் முன்னாள் லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லர் உள்ளிட்டோரால் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்கு எதிரான வழக்கில் சட்டவாளராகப் பணியாற்றியவராவார்.

அத்துடன் ருவான்டா இனப்படுகொலைகள் குறித்த போர்க்குற்ற விசாரணைகளிலும் இவர் பங்கேற்றுள்ளார்.

இவரது பயணம், ஜெனிவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரி

» 27

## முன்னாள் போராளிகள் 73 பேர் விடுதலை



மட்டக்களப்பு, ஜன.23

மட்டக்களப்பு, வெலிக்கந்தை, சேனபுர புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் 73 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்போது, 62 ஆண்களும், 11 பெண்களும் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். விடு

» 27

## சிறுபான்மையினரின் பிரச்சினையை செனட் சபை மூலம் தீர்க்க முடியாது

கொழும்பு, ஜன.23

சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை, கையாலாகாத செனட்சபை மூலம் ஒருபோதும் தீர்க்கமுடியாது என்று அடித்துக் கூறுகின்றார் கல்முனை மாநகரசபையின் முன்னாள் தலைவரும், செனட்டருமான மசூர் மௌலானா.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் மீண்டும் செனட் சபை அமைக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதுதொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே செனட்டர் மசூர் மௌலானா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்ப

» 27

## இலங்கையின் திட்டத்தை நிராகரித்தது இந்தியா

கொழும்பு, ஜன. 23

மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க அனைத்துலக கடல் எல்லையில் கூட்டு ரோந்துப் பணியை மேற்கொள்ளும் இலங்கை அரசின் திட்டத்தை இந்தியா நிராகரித்துவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடந்த இந்திய, இலங்கை கூட்டுக் குழுக் கூட்டத்தின்போது, மீனவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு எல்லையில் இரு நாட்டுக் கடற்படைகளும் இணைந்து கூட்டு ரோந்து செல்லும் திட்டம் முன்வைக்கப்பட்டது.

ஆனால், இந்தத் திட்டத்தை இந்தியத் தரப்பு நிராகரித்து விட்டது எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கூட்டு ரோந்து உள்ளிட்ட மூன்று விடயங்களில் இணக்கப்பாட்டை எட்ட இரு[illegible] தவறி விட்டன என இலங்கை கடற்றொழில் அ[illegible] இந்திரா ரணசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## சன்னார் கிராமத்தில் அரச தரப்பினர் அத்துமீறிப் புகுந்து வீதிகள் அமைப்பு

### குடியிருப்பவர்களை வெளியேறுமாறும் மிரட்டல்

மன்னார், ஜன.23

மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தினரும் பிரதேச சபையினரும் இணைந்து சட்டவிரோதமான முறையில் காணி அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதியில் வாழும் தமிழ்க் குடும்பங்கள் உதயனிடம் தெரிவித்துள்ளன.

சன்னார் கிராமத்தில் [illegible] ஏற்பட்ட தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 900 பேர் வசித்து வருகின்றனர். இவர்களை இந்தப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தால் தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது.


எனினும் தாங்கள் கடந்த 1986ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பகுதியில் வசிப்பதாகவும் இதற்கான காணி வரைபடங்களும் பதிவுகளும் தம்மிடம் இருப்பதாகவும் கூறி அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறாது தாம் வசித்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று கனரக வாகனங்கள் சகிதம் வந்த உதவி அரசாங்க செயலகத்தினரும் மாந்தை பிரதேச சபையின் அரச சார்பு உறுப்பினர்களும் அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக வீதிகளை அமைத்ததுடன் அந்த மக்களை உடனடியாக வெளியேறுமாறும்

» 27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கியின் ஐம்பதாண்டு நிறைவு நேற்று நடைபெற்ற சிறப்பான கலைவிழா




யாழ்ப்பாணம், ஜன.23

மக்கள்வங்கியின்50ஆவது ஆண்டு நிறைவையொட்டி வன்னி, யாழ்.பிராந்திய கலை வட்டத்தினால் நடத்தப்பட்ட கலைவிழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இதன்போது யாழ்.பிராந்திய, வன்னிப் பிராந்திய ஊழியர்களுக்கிடையிலும் அவர்களின் பிள்ளைகளுக்கு மத்தியிலும் கட்டுரை, கவிதை, பாடல், நடனம், சித்திரம், ஒளிப்படம் எடுத்தல் மற்றும் கலை இலக்கியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம், வன்னி, கொழும்பு, அம்பாறை ஆகிய பிராந்திய தமிழ், முஸ்லிம், சிங்கள ஊழியர்களினால் தில்லானா நடனம், பௌத்த, இந்து கலாசாரத்தை வெளிப்படுத்தும் நடனம், நாடகம், கோலாட்டம், கண்டியன் நடனம், சிறுவர்களின் நடனம் என்பனவும் அங்கு சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெற்றிருந்தன.

இதன்போது கருத்துரை வழங்கிய மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் என். வசந்தகுமார் நீண்ட இடைவெளியின் பின்னர் இப்படியொரு கலைநிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்துவதையிட்டுப் பெருமையடைவதாகவும் சாதி, மத, இன பேதங்கள் அற்ற இந்தக் கலை நிகழ்வுகளின் மூலம் தாம் அனைவரும் ஒன்றிணைந்திருப்பதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் தேசிய கீதம் இசையில் ஒலிபரப்பப்பட மக்கள் வங்கிக் கீதம் சிங்களத்தில் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ கருணாஜீவ, மக்கள் வங்கிப் பொதுமுகாமையாளர் என். வசந்தகுமார், யாழ்.மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-ரி-86-311)

## மட்டு. சிறைச்சாலை பொங்கல் விழாவில் கைதிகளில் சிலர் எதிர்ப்புக் கோஷம்

தமிழ் இளைஞர்களை சிறையில் அடைத்து விட்டு பொங்கல் விழாவை நடத்துவது நியாயமா என கேட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள தமிழ் கைதிகள் சிலர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவின் போது சப்தமிட்டு கோஷங்களை எழுப்பினர் என்று தெரியவருகிறது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கு கேட்கக்கூடியதாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் மேல் மாடியில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் சிலர் சப்தமிட்டு கோஷங்களை எழுப்பினர். என்று கூறப்படுகிறது.

தமிழர்களாகிய எங்களை சிறைக்குள் பூட்டி அடைத்து விட்டு எங்களுடைய தைப் பொங்கல் விழாவை நடத்துவது நியாயமா?, நாங்கள் அமைச்சர் மற்றும் பிரதியமைச்சருடன் பேச வேண்டும், நத்தார் தினத்தன்று; உறவினர்களை பார்ப்பதற்கு அனுமதித்த சிறைச்சாலை அதிகாரிகள் பொங்கலன்று எங்களை பார்க்க எங்களின் உறவினர்களை அனுமதிக்கவில்லை மற்றும் இங்கு எங்களுள்ள பிரச்சினைகளை தீர்த்து தாருங்கள் என்று அவர்கள் கோஷங்களை எழுப்பினராம்.

இதையடுத்து அமைச்சர் கஜதீர, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் இவர்களைச் சந்தித்து குறைகளை கேட்டறிந்து கொண்டனர்.

இவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கஜதீர இதன்போது கைதிகளிடம் உறுதியளித்தார். என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

## வன்னேரிக்குளத்தின் புனரமைப்புத் தாமதம்

கிளிநொச்சி, ஜன. 23

வன்னேரிக்குளம் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அங்கு கண்ணிவெடிகள் அகற்றப்படாமையால் அது தாமதமடைவதாக கரைச்சிப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தின்போது மேற்படி குளத்துக்கான புனரமைப்புப் பணிகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

அதில் வன்னேரிக்குளத்தின் கலிங்கிப் பகுதிகளில் பெருமளவான வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் இவை அகற்றப்பட்டால் தான் மேற்படி குளத்தின் புனரமைப்பை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-6)

## தினமும் 20 இணையங்கள் புதிதாக பதியப்படுகின்றன

கொழும்பு, ஜன. 23

எல்.கே.டொமேன் பெயரில் பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைக் கடந்துள்ளது.

நாளாந்தம் குறைந்தபட்சம் 20 இணையத்தளங்கள் புதிதாக பதிவு செய்யப்படுகின்றன எனவும் இதற்கான கேள்வி அதிகரித்துச் செல்கிறது எனவும் எல்.கே.டொமேன் பதிவாளர் பேராசிரியர் கிஹாண் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இருந்து இணையத்தளங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கின்றன என அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இணையத்தள இயக்குநர்களை தத்தமது இணையத்தளங்களை பதிவு செய்தே இயக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளதுடன் இணையத்தளங்களுக்கென சில விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் விதித்துள்ளது. இதற்கமைய இணையத்தளங்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## தமிழகத்தில் இருந்து நீந்திவந்த 2 பேர் கைது

கொழும்பு, ஜன.23

இந்தியாவில் இருந்து இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் புலிச்சந்தேக நபர் ஒருவர் உட்பட இரண்டு பேரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

வாடகைக்கு அமர்த்தப்பட்ட படகு மூலம் பயணித்த இவர்கள் 8ஆம் 9ஆம் மணல்திட்டுக்களுக்கு இடையில் நீந்திக்கொண்டிருந்தபோதே ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் கடந்த 2005ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலி உறுப்பினராகப் பயிற்சி பெற்றவர் எனவும் 2006ஆம் ஆண்டு இந்தியாவுக்கு இவர் தப்பிச்சென்றார் எனவும் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

மன்னாரைச் சேர்ந்த 44 வயதான மீனவர் கைதுசெய்யப்பட்ட மற்றைய நபர் ஆவார் எனவும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஒ-சி)

## கிளிநொச்சி நகர குடிதண்ணீர் தாங்கி பழைய இடத்தில் அமைப்பதற்கு தடை

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி நகருக்கான குடிதண்ணீர் தாங்கியை அமைப்பதற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. ஜப்பான் அரசு நிதி உதவியுடன் ஜெய்க்கா நிறுவனத்தினால் 700 மில்லியன் ரூபா செலவில் இந்த நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான புதிய இடம் கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு போரின்போது கிளிநொச்சி நகருக்கான நீர்த்தாங்கி சேதமாக்கப்பட்டது. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு மீண்டும் புதிய நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு அதுவும் இறுதிப்போரின் போது தகர்க்கப்பட்டது.

இந்த நிலையில் நீர்வழங்கல் வாடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு அண்மையில் உள்ள காணி பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு அது போர் நினைவிடமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிய குடிதண்ணீர் தாங்கியை அமைப்பதற்கு இரத்தினபுரம் பகுதியில் அரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

பழைய இடம் நீர்த்தாங்கி அமைப்பதற்காக கோரப்பட்டபோதும் அது வழங்கப்படாத நிலையில் இந்தப் புதிய இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

பழைய இடத்தில் கிளிநொச்சி குளத்தின் கீழ் நீரைப் பெற்று சுத்திகரிப்பதற்கான நீர்த்தொட்டிகள் மற்றும் இயந்திரங்கள் உள்ளபோதும் நீர்த்தாங்கி அமைப்பதற்கு அனுமதி கிடைக்காததால் புதிய இடத்தில் எல்லாவற்றையும் புதிதாக அமைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் திட்டம் 2014இல் நிறைவு செய்யப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10-6)

# சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தின் இணையத்தளம் நேற்று அங்குரார்ப்பணம்





யாழ்ப்பாணம், ஜன.23

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத்தினரால் முதன் முறையாக 'சிவானந்தம்' எனும் ஆன்மீக சஞ்சிகை வெளியிடப்பட்டது. இந்த ஒன்றியத்துக்கான 'ஜெப்னா பிறீஸ்ற்' (www.jaffnapriest.org) எனும் இணையத்தளமும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தவிர இவ் ஒன்றியத்துக்கென 'ஒன்றிய கீதம்' ஒன்று உருவாக்கப்பட்டு இசைக்க விடப்பட்டது.

இந்த நிகழ்வுகள் யாழ். ஆனைப்பந்தியில் உள்ள சர்வதேவ இந்துகுருமார் ஒன்றியத்தில் நேற்றுப் பிற்பகல் வெகுசிறப்பாக நடைபெற்றன.

சர்வதேச இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரையை வழங்கியிருந்தார்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் நந்திக் கொடியேற்றியும் சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி அத்வந்தனீய சிவஸ்ரீ ஜம்புமகேஸ்வர சிவாச்சாரியார் ஒன்றியக் கொடியை ஏற்றியும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். இந்த நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவப் பேராசிரியர் கந்தையா தேவராஜாவும் கௌரவ விருந்தினராக சட்டத்தரணி பிரம்மஸ்ரீ மு.பாலசண்முகசர்மாவும் கலந்து கொண்டனர்.

பிரம்ம ஸ்ரீ நா.ஜனார்த்தனசர்மாவினால் வடிவமைக்கப்பட்ட இணையத்தளத்தைப் பிரதம விருந்தினரான திருமதி இமெல்டா சுகுமார் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அதேபோன்று 'சிவாணந்தம்' சஞ்சிகை முதற்பிரதியை பிரதமவிருந்தினர் வெளியிட்டு வைக்க மயிலணி சிவநெறி சோமாஸ்கந்தக்குருக்கள் அதனைப் பெற்றுக்கொண்டார்.

சஞ்சிகை வெளியீட்டுரையை வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயரும் சிறப்புரையை பிரதிப் பதிவாளர் நாயகம் பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயரும் நிகழ்த்தினர். இணையத்தள உரையை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ந.குகபரன் ஆற்றினார். ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக் குருக்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வுகள் ஒன்றிய வித்வசபை உறுப்பினரான சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் வாழ்த்துரையுடன் நடைபெற்று ஒன்றிய உறுப்பினர் சிவஸ்ரீ இ.விக்னேஸ்வரக் குருக்களின் நன்றியுரையுடன் நிறைவுற்றது. (ஒ-4-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பின்னாலே ஒரு திட்டத்துடன் முற்கூட்டியே வரும் பாடல்

விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு இரண்டு வருடங்களும் எட்டு மாதங்களும் கழிந்து விட்டன. 2009 மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் இறுதிச் சமர் இடம்பெற்று 30 வருடகால ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இறுதிப் போரின் போது படையினரிடம் சரண் அடைந்த அல்லது படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான போராளிகள் அரச முகாம்களில் புனர்வாழ் வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரக் கணக்கானோர் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுப்பு முகாம் களிலும் உள்ளனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக் கப்பட்டோர் குறித்து இதுவரை வன்முறைகள் குறித்து ஒரு முறைப்பாடும் செய்யப்படவில்லை. சமூகத்துடன் இணைந்து இயல்பு வாழ்க்கை வாழ்கின்றனர். புலிகள் இயக்கப் போராளி கள் நாட்டில் மறைந்திருப்பதற்கான அறிகுறியும் இல்லை. புலிகளின் கொலைப்பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்கள் எல்லாம் நாட்டில் தற்பொழுது சுதந்திரமாகத் திரிகிறார்கள்.

இத்தகைய நிலையில், புலிகள் இயக்கம் நாட்டில் மீண்டும் தலைதூக்குவதாக சமீப காலமாகத் தெரிவிக்கப்பட்டு வரு கிறது. அரச உயர் மட்டத்தில் இருந்தே இப்படியான கருத்துக் கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்கள இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவிக்கையில், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு பயங்கரவாதத்தைப் போதித்து மீண்டும் நாட்டில் அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவிக்க ஜே.வி.பி. கிளர்ச்சிக்குழு முயற்சிக்கிறது என்று குற்றஞ்சாட்டி இருந்தார். அதற்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற, 'எதிர்காலத்தில் இலங்கை முகம் கொடுக்கும் தேசிய பாதுகாப்புச் சவால்கள்' என்ற கருத்தரங்கில் பாதுகாப்புச் செயலாளர் உரை நிகழ்த்து கையிலும், புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்கும் ஆபத்துக் குறித்து எச்சரித்திருந்தார். புலிகள் மீண்டும் தோற்றம் பெறு வதற்கான சாத்தியப்பாடு போரின் பின்னர் நாடு எதிர்நோக் கும் மிகப்பெரிய சவாலாக உள்ளது என்று அவர் வர்ணிக்கவும் தவறவில்லை.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவும், யாழ். பல்கலைக்கழகத்தில் உரையாற்றுகைல், இதேபோன்ற கருத்தையே கூறி இருந்தார். நாட்டில் மீண்டும் ஓர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு தென் இலங்கைப் பல் கலைக்கழக மாணவர் குழு ஒன்று திட்டமிடுவதாகவும், குறிப் பிட்ட மாணவர் குழு புலிகளுடன் தொடர்புள்ளவர்களோடு இணைந்து அதனை நடத்தத் திட்டமிடுகிறது என்றும் அந்த மாணவர் குழு ஜே.வி.பியின் கிளர்ச்சிக் குழுவுடன் அரசியல் தொடர்புகளை வைத்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார்.

ஜே.வி.பியில் இருந்து பிரிந்த கிளர்ச்சிக்குழு புலிகளுடன் இணைந்து ஆயுதப் போராட்டம் ஒன்றுக்குத் திட்டமிடுகிறது என்ற கருத்தையே இந்தக் குற்றச்சாட்டுக்கள் பூடகமாக முன்னிலைப்படுத்துகின்றன.

ஜே.வி.பி. இயக்கம், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் 1971ஆம் ஆண்டிலும், பிரேமதாஸவின் ஆட்சியில் 1988 - 89ஆம் ஆண்டுகளிலும் ஆயுதப் போராட்டம் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டது. பல்லா யிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் அதில் உயிரிழந்தனர். அந்த இரண்டு போராட்டங்களும் தனித்து தென்னிலங்கையை மட்டும் மையப்படுத்தி நடத்தப்பட்டன.

ஆயுதப் போராட்டம் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி தோல்வி கண்ட பின்பு, ஜனநாயக வழியில் தேர்த லில் போட்டியிட்டு அதிகாரத்துக்கு வரும் முயற்சியில் அது ஈடு பட்டது. அதிலும் தோல்வி அடைந்த நிலையில் கட்சி இன்று உடைந்துவிட்டது.

கடந்த கால ஆயுதப் போராட்டத் தோல்விகளைக் கருத் தில் கொண்டு, வடக்கு , கிழக்கிலும் தமது ஜனநாயகச் செயற் பாடுகளை முன்னெடுக்க ஜே.வி.பி. நடவடிக்கை எடுத்துவரு வது தெரிகிறது. இத்தகைய நிலையிலேயே முன்னாள் புலிப் போராளிகளை ஜே.வி.பியின் கிளர்ச்சிக்குழுவுடன் இணைத் துப் பேசுகிறது அரசு.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தை தொடர்ந்து வைத்திருப் பதற்கும் -

இராணுவ முகாம்களை விஸ்தரிப்பதை நியாயப்படுத்தவும் -

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட பல்லா யிரக்கணக்கான முன்னாள் போராளிகளின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி அவர்களைப் பாதுகாப்புப் பிடிக்குள் வைத்திருக்கவுமே - இத்தகைய கருத்துக்கள் திட்ட மிட்டுச் சோடிக்கப்பட்டு தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஆதாரம் எதுவும் இன்றி இப்படியான கருத்துக்களைத் தெரிவிப்பதை அரச உயர்மட்டத் தலைவர்கள் நிரந்தரக் கீத மாக இசைக்கத் தொடங்கி விட்டனர். புலிகள் இயக்கம் நாட் டில் மீண்டும் தலைதூக்குவதாகக் காட்டும் அவசியம் அரசுக் குத்தான் உண்டு. அதன் வெளிப்பாடுதான் தென் இலங்கைத் தலைவர்களின் கருத்துக்கள்.

ஆயுதப் படையினரை வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக் கையில் நிரந்தரமாகக் காலூன்றச் செய்து, அந்த விரிப்பின் கீழே, தமிழ் மக்கள் தமக்குரிய ஜனநாயக உரிமைகளை முழு அளவில் அனுபவிக்கவும் தம்மைத் தாமே ஆளவும் இடங் கொடாது தடுக்கும் சூழ்ச்சியின் முதல் நிலைப் பேரங்கமே இது.

பின்னாலே ஒரு பேரினவாதத் திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு, முற்கூட்டியே இசைக்கப்படும் பாடல் என்றும் இதனைக் கொள்ளலாம்.

# நொத்தாரிசு, ஆவணப் பதிவு கட்டளைச் சட்டங்களில் மாற்றம்

### இனி உள்ளூராட்சிச் சபைகளின் வருமானத்தை மாதாந்தம் அறிந்துகொள்ள முடியும்

யாழ்ப்பாணம், ஜன.23

நொத்தாரிசு கட்டளைச் சட்டம், ஆவணப்பதிவு கட்டளைச் சட்டம் ஆகியனவற்றில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

இந்த மாற்றத்தின் மூலம் உள்ளூ ராட்சி சபைகள் தமக்குரிய மாதாந் தக் கட்டணங்களை அறிந்து கொள்வ தற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு, மேலதிக பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் உதயனுக் குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

நொத்தாரிசு கட்டளைச் சட்டம், ஆவணப்பதிவு கட்டளைச் சட்டம் ஆகிய இரண்டு சட்டங்களிலும் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டின் 48, 47 ஆம் இலக்கச் சட்ட மூலம் திருத்தம் செய் யப்பட்டுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் 24 ஆம் திகதி நாடாளு மன்றத்தில் இந்தச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**காணி உறுதி எழுதும் போது ஆதன அட்டவணையில் காணி அமைந்துள்ள பிரதேச செயலர் பிரிவு அல்லது உதவி அரச அதிபர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, உள்ளூராட்சிப் பிரிவு, காணி அமைந்துள்ள வீதியின் பெயர், வருமான வரி இலக் கம் என்பன குறிப்பிடப்படவேண்டும்**

கடந்த வருடம் நவம்பர் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்த மானிப் பத்திரிகையில் இந்த விட யம் வெளியாகியுள்ளது.

காணி உறுதி எழுதும் போது ஆதன அட்டவணையில் காணி அமைந்துள்ள பிரதேச செயலர் பிரிவு அல்லது உதவி அரச அதிபர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு, உள்ளூராட் சிப் பிரிவு, காணி அமைந்துள்ள வீதி யின் பெயர், வருமான வரி இலக்கம் என்பன குறிப்பிடப்படவேண்டும்.

அத்துடன் நொத்தாரிசு உறுதிப் படுத்தும் காணி அமைந்திருக்கும் உள்ளூராட்சி சபைக்கு மாதாந்தப் பட்டியலின் பிரதி ஒன்றை அனுப் பிவைக்க வேண்டும்.

இதன் மூலம் உள்ளூராட்சி சபை கள் தமது வருமானத்தை இலகு வாக அடையாளம் காணவும், அத னைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

வடக்கில் மாகாணசபை அமைக் கப்படாததன் காரணமாக உள்ளூ ராட்சி சபைகள் இந்தப் பணத்தை திறைசேரி மூலமே மீளப் பெற வேண்டியுள்ளது.

ஏனைய மாகாணங்களில் மாகாண சபைகள் அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக வருமானத்தை நேரடி யாகப் பெறக்கூடியதாக இருக்கிறது. - என்றார். (ம-14)

### அராலி தண்ணீர்த் தாங்கி நாளை திறந்துவைப்பு

இழுபறி நிலையில் இருந்த வலி. மேற்கு அராலி தண்ணீர்த் தாங்கித் திட்டம் நாளை திறந்துவைக்கப்பட வுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலை வர், உறுப்பினர்களின் ஏகோபித்த முடி வுக்கு இணங்க இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளது. உலக தரிசனம் நிறுவ னத்தின் நிதிப் பங்களிப்புடன் இந் தப் பெரியளவான நீர்த்தாங்கி அமைக் கப்பட்டு நீண்ட பல மாதங்களாகத் திறக்கப்படாது இழுபறியில் இருந் தது.

தற்போது வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்களின் இறுக்க மான தீர்மானத்தைத் தொடர்ந்து பாரம்பரிய சிறுகைத்தொழில் அபிவி ருத்தி அமைச்சர், ஆளுநர், நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா ஆகியோரைக் கொண்டு இந்த நீர்த்தாங்கியைத் திறப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# மாதத்தின் முதல் வாரத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டம்

கொழும்பு, ஜன.23

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் உள்ள கட்சித் தலைவர் களின் கூட்டத்தை ஒவ்வொரு மாத மும் முதல் வாரத்தில் வரும் புதன் கிழமைகளில் நடத்துவதற்கு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித் துள்ளார்.

இதற்கமைய ஒவ்வொரு மாதத் திலும் வரும் முதல் வாரத்தின் புதன் கிழமைகளில் கூடும் அமைச்சர வைக் கூட்டத்துக்கு முன்னர் கட்சித் தலைவர்களின் கூட்டம் இடம் பெற வுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பைச் சேர்ந்த கட்சிகளுக் கிடை யில் நிலவும் பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் தொடர் பாகக் கலந்துரையாடி பொதுவான முடிவுகளை எட்டுவது சமகால அரசி யல் காரணிகள் பற்றி கலந்துரை யாடுவது என்பவற்றை இலக்காகக் கொண்டு இக் கட்சித் தலைவர்க ளின் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கடந்த வாரத்தில் ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் ஒவ் வொரு மாதத்திலும் கட்சித் தலை வர்களின் கூட்டத்தை நடத்துவது பற்றி யோசனைகள் முன்வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-22)

# கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி கோரும் இந்திய நிறுவனங்கள்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

கிராமங்களை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் எனும் நோக்கத்துடன் பல நிறுவனங்கள் அனுமதி கேட்டுள்ளன.

குறிப்பாக இந்தியாவைச் சேர்ந்த நிறுவனங்கள் பொதுமக்களின் அபி விருத்திக்கான சேவையை வழங்க முன்வந்துள்ளன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் இவ்வாறு தெரி வித்தார்.

இந்தியன் வங்கி யாழ்.கிளை யின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த் தும் போது தெரிவித்ததாவது:

இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட் டில் காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு, யாழ்.ரயில் நிலைய புனரமைப்பு, ஐயாயிரம் வீடுகள் புதிதாக அமைத்தல் போன்ற திட் டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் மீனவர்கள் பாதிப்ப டையாத வகையில் தொழிலை மேற் கொள்வதற்கான மாற்றுத் திட்டங் களை அறிமுகப்படுத்துவதற்கும் ஏற் பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்வு செய்யப்பட்ட மக் கள் வீடு, அடிப்படை வசதி, தொழில் வாய்ப்பு இவற்றை வழங்கவேண் டும் என எதிர்பார்க்கிறார்கள்.

இதன் முதற் கட்டமாக 100 வீடு களை அமைப்பதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத னைவிட மானிய அடிப்படையில் மின் சாரம் வழங்குவதால் இயந்திரங்க ளைப் பயன்படுத்தி விவசாயத்தில் அதிக லாபமடைவதை இந்தியாவில் காணக்கூடியதாக இருந்தது.

அதனைப் போன்றதொரு அபிவி ருத்தியை யாழ்.மாவட்டத்திலும் இந் தியன் வங்கி மேற்கொள்வது வர வேற்கத்தக்கது.

மீளக்குடியமர்வு செய்யப்பட்ட மக்களுக்குக் கடன் உதவிகள் முக்கிய தேவையாக உள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல திட்டங்கள் முன்னெடுக்கப் படவேண்டும். - என்றார். (ம-313)

## நிகழ்வுகள் இன்று

**திறப்பு விழா**

யாழ்.இந்துக் கல்லூரியின் பிரார்த் தனை மண்டபத் திறப்புவிழா பிற் பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ''அறிவி யல் சமூகத்தின் தோற்றம்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார். (ம-313)

**உபகரணம் கையளிப்பு**

யாழ்.போதனா வைத்தியசா லைக்கு வைத்திய உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலையின் இதய ஆய்வுகூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

**அடிக்கல் நடல்**

பருத்தித்துறை பொது நூல் நிலை யத்துக்கு மாடிக்கட்டடம் அமைப்ப தற்கான அடிக்கல் நடும் நிகழ்வு பிற் பகல் 4.15 மணிக்கு நடைபெற வுள்ளது. (ம-236)

**அபிவிருத்திக் கூட்டம்**

யாழ்.மாநகர சபையினால் நடத் தப்படும் ஜே-63 கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கான கிராம அபி விருத்தித் திட்டமிடல் கூட்டம் பிற் பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய கட்ட டத்தில் நடைபெறும். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவு அகற்றலில் நெருக்கடியில் சிக்கியுள்ள பிரதேச சபையினர்

கிளிநொச்சி, ஜன.23

கழிவுகளை அகற்றும் வாகனங்களை இராணுவ முகாம்களின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் கரைச்சி பிரதேச சபை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனங்களையும், ஊழியர்களையும் இராணுவம் தமது முகாம்களின் கழிவுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்துவதனால் ஏனைய கழிவகற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் பல்வேறு நெருக்கடிகளைப் பிரதேச சபை எதிர்கொள்வதாக பிரதேச சபை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கழிவுகளை அகற்றும் வாகனங்களை இராணுவ முகாம்களின் தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் கரைச்சி பிரதேச சபை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச சபை மிக நீண்டு பரந்த ஒரு பிரதேசத்தினைக் கொண்ட பகுதியாகவும், அதிக கட்டுமானங்களைக் கொண்ட இடமாகவும் காணப்படுகின்றது. அதற்கேற்ப பிரதேச சபையில் போதிய வளங்கள் மற்றும் ஆளணி இல்லாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் கழிவு உறிஞ்சி வாகனம் ஒன்றே பிரதேச சபையில் உள்ளது. இதன் மூலம் வைத்தியசாலை, பொதுச் சந்தை, அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற திணைக்களங்களின் கழிவுகளை அகற்ற வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தினர் தமது முகாம்களில் உள்ள கழிவுகளை அகற்றுவதற்குப் பிரதேச சபையின் வாகனங்களையும், ஊழியர்களையும் பயன்படுத்துவதுடன் அதற்கான கட்டணங்களைச் செலுத்தாது இருந்தும் வருகின்றனர். இதனால் பிரதேச சபையின் கழிவகற்றல் செயற்பாடுகளால் பெரும் நட்டம் ஏற்படுவதுடன் சிரமங்களும் தோன்றியுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச சபைத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரால் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

(க-6)

## விற்பனையில் சந்தேகம்

நெடுங்கேணி, ஜன.23

கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சில உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குமுழமுனை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எழுதியுள்ள கடிதத்தில்; கரைதுறைப்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் குமுழமுனைக் கிளையில் பல ஆண்டுகளாக இருந்த இரு நெல் அவிக்கும் பொயிலர்கள், பெரிய இயந்திரம் என்பன இரும்பு விலைக்கு விற்கப்பட்டுள்ளன.

இந்த விற்பனைக்குப் பொதுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் பகிரங்க ஏலமும் கோரப்படவில்லை. ஒரு நாளிலேயே இந்த விற்பனை மிகவும் சூசகமாக நடந்தேறியுள்ளது.

**பகிரங்க ஏலமும் கோரப்படவில்லை. ஒரு நாளிலேயே இந்த விற்பனை நடந்தேறியது.**

இதனால் இந்த விடயம் தொடர்பாகப் பல்வேறு சந்தேகங்கள் தோன்றியுள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பாக ஆராய்ந்து உண்மை நிலையை மக்களுக்குத் தெளிவாக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

(க-435)

## சுகாதார சீர்கேட்டுடன் பொது மலசல கூடம்

வவுனியா, ஜன.23

வவுனியா நகரத்தில் அமைந்துள்ள பொதுமலசல கூடம் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்றது.

வட மாவட்டங்களை ஒன்றிணைக்கும் முக்கிய கேந்திர நிலையமாக வவுனியா திகழ்கின்றது. வெளியிடங்களிலிருந்து தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் இங்கு வந்து செல்கின்றனர். இவர்கள் தமது அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தப் பொது மலசல கூடத்தையே நாடுகின்றனர்.

ஆனால் உள்ளே சென்ற சிலர் முக்கையும், வாயையும் பொத்தியவாறு வெளியே அவசரமாகச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

அவசர தேவைகளை நிறைவேற்றச் செல்பவர்கள் அசூசையைச் சுமந்த வண்ணம் வெளியேறுகின்றனர். அந்த அளவுக்கு இந்தப் பொது மலசலகூடம் சுகாதாரச் சீர்கேடுகளுடன் காணப்படுகின்றது.

இந்த மலசல கூடத்தில் பொருத்தப்பட்டுள்ள தண்ணீர்க் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு நீர் உள்ளே செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இதைவிட வெற்றுப் போத்தல்கள், காலி செய்யப்பட்ட மதுபானப் போத்தல்கள் என்பனவும் மலசல கூடத்தினுள் தாறுமாறாக எறிந்த நிலையில் காணப்படுகின்றன.

**உபயோகிப்பவர்களிடமிருந்து 5 ரூபா கட்டணமாகப் பெறப்பட்டது. தற்போது இந்தத் தொகை 10 ரூபாவாக உயர்ந்துள்ளது. கட்டண உயர்வுக் கேற்ப மலசல கூடத்தின் தூய்மையும் மேம்படுத்தப்பட வேண்டும்.**

ஆரம்பத்தில் இதனை உபயோகிப்பவர்களிடமிருந்து 5 ரூபா கட்டணமாகப் பெறப்பட்டது. தற்போது இந்தத் தொகை 10 ரூபாவாக உயர்ந்துள்ளது. கட்டண உயர்வுக் கேற்ப மலசல கூடத்தின் தூய்மையும் மேம்படுத்தப்பட வேண்டுமென இதனை உபயோகிப்பவர்கள் கூறுகின்றனர்.

(க-421)



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள் விழாவின்போது மாணவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். பிரதம விருந்தினர் மங்கல விளக்கு ஏற்றுகின்றனர்.

## இடமாற்றம்

முல்லைத்தீவு, ஜன.23

ஒட்டுசுட்டானில் இயங்கி வந்த பதிவாளர் அலுவலகம் இடம் மாறியுள்ளது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இயங்கி வந்த பதிவாளர் அலுவலகம் தற்போது பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள ஒட்டுசுட்டான் கிராம அலுவலர் அலுவலகம் அமைந்துள்ள வீட்டில் தொடர்ந்து இயங்கவுள்ளது. பதிவை மேற்கொள்வோர் அங்கு சென்று பதிவுகளை மேற்கொள்ள முடியுமென மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகத்தில் வேறு பணிகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் இந்த இடமாற்றம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## வீதிப் புனரமைப்பு

அக்கராயன், ஜன.23

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டியிலிருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெறுகின்றன.

நீண்டகாலமாக இந்த வீதி புனரமைப்பு எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இருந்தது. தற்போது தான் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம்பெறுகின்றன.

இதேவேளை, கிளிநொச்சி கிழக்குப் பகுதியிலுள்ள வீதிகள் பருவமழை காரணமாக அதிகளவில் சேதமடைந்து காணப்படுகின்றன. முழங்காவிலிருந்து கிளிநொச்சி வரையான 50 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியின் பெரும் பகுதி குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது.

குறிப்பாக முழங்காவில் மருத்துவ மனையிலிருந்து கிளிநொச்சி மருத்துவ மனைக்கு மேலதிக சிகிச்சைக்குச் செல்லும் போது வீதியின் சீரின்மையால் அதிக தாமதம் ஏற்படுகின்றது.

(க-410)

## தீர்ந்தது பிணக்கு

முல்லைத்தீவு, ஜன.23

இரு பொது அமைப்புக்களின் காணிப்பிணக்கு சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இரு பொது அமைப்புக்களுக்கிடையே நீண்ட காலமாகவே காணிப் பிணக்கொன்று நிலவி வந்தது. இந்தப் பிணக்கு அமைச்சர்கள் மட்டம் வரை சென்ற போதும் தீர்வு காணப்படவில்லை.

இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் இரு பகுதியினரையும் அழைத்து நன்கு ஆராய்ந்து ஒரு சுமுகமான தீர்வைக் கண்டுள்ளனர்.

இரண்டு பொது அமைப்புக்களும் பொதுநோக்குடன் வாதாடியதைக் கருத்தில் கொண்டு அவர்களின் ஏகமனதான சம்மதத்துடன் பிரதேச செயலர் ஒரு நல்ல முடிவை எட்டியுள்ளனர். பிரதேச செயலரின் இந்த முன்மாதிரியான செயலை இங்குள்ள மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

(க-500)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

பூநகரி, ஜன.23

பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் இங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் எடுத்துக் கூறப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-207)

# மன்னாரில் வாழ்வு எழுச்சி கண்காட்சி

மன்னார், ஜன.23

மன்னாரில் முதல் தடவையாக வாழ்வு எழுச்சிக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றுள்ளது.

கைத்தொழில், வணிக அமைச்சு, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சு, மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு ஆகியவை இணைந்து மேற்படி கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கண்காட்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ஆரம்பமானது. தொடர்ந்து இந்தக் கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வரை இடம்பெற்றது.





குறித்த கண்காட்சியின் போது குடிசைக் கைத்தொழில் தொடர்பான அறிமுகம், இயந்திர உபகரணக் கண்காட்சி, நிதி மற்றும் சந்தைப் படுத்தல் மற்றும் இதர சேவைகளுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**குடிசைக் கைத் தொழில் தொடர்பான அறிமுகம், இயந்திர உபகரணக் கண்காட்சி மற்றும் இதர சேவை களுக்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.**

சுமார் பத்து லட்சம் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சிறந்த தொழில் முயற்சியாளராக வர முயல்வோருக்கு அரிய வாய்ப்பாக இந்த வாழ்வு எழுச்சி மாவட்டக் கண்காட்சி அமைந்திருந்தது. அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, றிஸாட் பதீயுதின், டக்ளஸ் தேவானந்தா, பௌசி, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட அரச அதிபர், அரச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். இவர்களுடன் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் ஆயிரக்கணக்கான பொது மக்களும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றமையை அவதானிக்க முடிந்தது. (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைமுகாம் இடமாறவுள்ளதால் மீள்குடியமராத மக்கள் அவலம்



தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் நவாலி அரசடி மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலை முன்பகுதியில் சிரமதானத்தில் ஈடுபட்டுள்ளனர். (ம-100)

## அரச அதிபருக்கு மகஜர்

**கடந்த வருட நடுப்பகுதியில் நலன்புரி நிலையம் மூடப்பட்டதை அடுத்து பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு பல்வேறு தரப்புகளிடம் கோரிக்கை விடுத்திருந்தன.**

யாழ்ப்பாணம், ஜன.23

வரணிப் பகுதியில் உள்ள இராணுவ முகாமை கொடிகாமம், அல்லரை வடக்கு நலன்புரி நிலையம் இருக்கும் இடத்தில் அமைக்கப் போவதாக படையினர் கூறிய தகவலை அறிந்து அந்தப் பிரதேசத்தில் இதுவரை மீளக்குடியமர்வு செய்யப்படாத 45 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிர்க்கதியில் உள்ளனர்.

இராமாவில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டிருந்த பிரதேசத்தைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர காணி உறுதிகளையும் வைத்துக் கொண்டு மீளக்குடியமர்வு செய்ய முடியாமல் ஏனைய பிரதேசங்களில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த வருட நடுப்பகுதியில் நலன்புரி நிலையம் மூடப்பட்டதை அடுத்து பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு பல்வேறு தரப்புகளிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனையடுத்து கடந்த வருடம் நவம்பர் மாதம் வீடுகள், காணிகள் மீளளிக்கப் போவதாக இராணுவத்தினரால் காணி உறுதிப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் தற்போது இரண்டு மாதங்கள் கழிந்தும் மீண்டும் மீள்குடியமர்வு தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்பாக நலன்புரி முகாமுக்கு அருகில் வசிக்கும் குடும்பம் ஒன்றை இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறுமாறு கூறியுள்ளனர்.

இது தொடர்பாக காரணம் கேட்டபோது வரணியில் இருக்கும் இராணுவ முகாமை இராமாவில் நலன்புரி நிலையம் இருக்கும் இடத்தில் அமைக்கப் போவதாகக் கூறியுள்ளனர். இதனால் 45 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியமர்வு செய்ய முடியாததையிட்டு விரக்தியடைந்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-313)

## குறிகாட்டுவானிலிருந்து காலை 8.30 இற்கு சேவை

யாழ்ப்பாணம், ஜன.23

குறிகாட்டுவானில் இருந்து இடம்பெறும் காலை 9 மணிப் படகுச் சேவை இன்று திங்கட்கிழமை முதல் காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

ஏனைய படகுச் சேவைகள் வழமை போல் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து புறப்படும் படகுச் சேவையில் வடதாரகை II காலை 6.15 மணிக்கும் தனியார் படகுச் சேவை காலை 7 மணிக்கும் குமுதினி படகுச் சேவை முற்பகல் 10.30 மணிக்கும் வடதாரகை II படகுச் சேவை பிற்பகல் 2 மணிக்கும் குமுதினி படக்குச் சேவை பிற்பகல் 3.30 மணிக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அத்துடன் குறிகாட்டுவானில் இருந்து குமுதினி படகுச் சேவை காலை 8.30 மணிக்கும் வடதாரகை II முற்பகல் 10 மணிக்கும் குமுதினி படகுச் சேவை பிற்பகல் 12.30 மணிக்கும் தனியார் படகுச் சேவை பிற்பகல் 4 மணிக்கும் வடதாரகை II படகுச் சேவை மாலை 5 மணிக்கும் சேவையில் ஈடுபடும்.

இதேவேளை, காலநிலை பாதகமாக இருப்பின் வடதாரகை சேவையில் ஈடுபடுத்தப்பட மாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது. (ம-313)

## ஊர்காவற்றுறை பிரதேச சபை கட்டடத் திறப்பில் இழுபறி

யாழ்ப்பாணம், ஜன.23

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை தலைமை அலுவலகக் கட்டட திறப்பு விழா மூன்று தடவைகள் அழைப்பிதழ் வழங்கப்பட்டுப் பிற்போடப்பட்டுள்ளது.

இதனால் பிரதேச சபை நிர்வாகம் கவலை அடைந்துள்ளது.

பிரதம அதிதிகளாக அழைக்கப்படவிருக்கும் விருந்தினர்களின் நேரமுகாமைத்துவ பிரச்சினையும் அனைவரும் ஒன்றிணையாமையுமே இந்த ஒத்திவைப்புகளுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மேம்படுத்தல் உட்கட்டுமான திட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு அபிவிருத்தி நோக்கிச் செல்ல வேண்டிய திட்டமே இவ்வாறு இழுபறியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதான திட்டத்துக்கு நேரம் ஒதுக்குவதற்கு அதிகாரிகளும் ஆளுநரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சரும் ஒருங்கிணைந்த ரீதியில் முன்வந்தால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று கூறப்படுகிறது. (ம)

## புதுப்பொலிவு பெறும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி

**ஜனாதிபதி வருகை தரவுள்ளமையே காரணம்**

தென்மராட்சி ஜன 23

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

வைத்தியசாலையில் பின்லாந்து மற்றும் ஐரிஸ் செஞ்சிலுவைச் சங்கங்களால் அமைக்கப்பட்ட இரு மாடிக் கட்டட விடுதிகள் இரண்டு மற்றும் வைத்திய அதிகாரிகள் வதிவிடம் ஆகியவற்றை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்க ஜனாதிபதி வருகை தரவுள்ளதை முன்னிட்டு வைத்தியசாலை வளாகம் முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் தவிர்ந்த ஏனைய கட்டடங்களுக்கு வர்ணந் தீட்டும் பணிகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

பின்லாந்து மற்றும் ஐரிஸ் நாட்டு செஞ்சிலுவைச் சங்கங்களின் சுனாமி வேலைத் திட்டத்தின் கீழ் 156 மில்லியன் ரூபா செலவில் இரு மாடி ஆண், பெண் விடுதிகளும் வைத்திய அதிகாரிகளுக்கான இரு மாடி வதிவிடக் கட்டடமும் அமைக்கப்பட்டு அவைகளுக்குரிய வைத்திய உபகரணங்களும் தளபாடங்களும் கடந்த டிசெம்பர் மாதம் வைபவ ரீதியாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

இக்கட்டடங்களைத் திறப்பதற்கு ஜனாதிபதியை அழைப்பதற்கான ஏற்பாடுகளை மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மேற்கொண்டுள்ளார்.

சாவகச்சேரி வைத்தியசாலை 2000ஆம் ஆண்டு யுத்த வேளையில் அங்கிருந்த அனைத்துக் கட்டடங்களும் முழுமையாக சேதமடைந்தன.

சுகாதாரத் திணைக்களத்தின் முயற்சியால் உலக வங்கியின் நிதி உதவியுடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் வைத்தியசாலைக்கான நிர்வாக அலகுக் கட்டடமும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் பிரசவ விடுதியும் ஜப்பானிய அரசால் சிறுவர் பூங்காவுடன் கூடிய இரு மாடி சிறுவர் விடுதியும் பின்லாந்து மற்றும் ஐரிஸ் செஞ்சிலுவைச் சங்கங்களால் இரு விடுதிகளும் வைத்திய அதிகாரிகள் வதிவிடங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடிக்கத் திடீர் தடை

**விசனத்தில் கடற்றொழிலாளர்கள்**

தென்மராட்சி ஜன.23

சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடிக்கத் தயாரான கடற்றொழிலாளர்களை கரையோர படையினர் கடலுக்குச் செல்லவிடாமல் தடுத்துள்ளனர்.

இதனால் தொழிலுக்குச் செல்ல தயாரான 17 மீன்பிடிப் படகுகளும் கரைக்கு இழுத்து விடப்பட்டு தொழிலாளர்கள் வீடு திரும்பினர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கோவில் குடியிருப்பு கடற்கரையில் இடம்பெற்றது.

இதனால், கடற்றொழிலுக்குச் செல்ல ஆயத்தமான 17 படகுகளின் தொழிலாளர்கள் பாதிப்படைந்தனர்.

இந்த விடயம் தொடர்பாக கோவில் குடியிருப்பு கடற்றொழிலானர்சங்கப் பிரதிநிதிகள் படையினருடன் தொடர்பு கொண்டபோது, அல்லாரை தம்புதோட்டத்தில் உள்ள படையினருக்கு துப்பாக்கிப் பயிற்சி வழங்குவதற்காக தொழிலுக்கு செல்ல விடாமல் தடுத்ததாகவும் இது போன்று மாதத்தில் ஐந்து நாள்கள் பயிற்சி வழங்கப்படுமெனவும் அவ்வாறான தினங்களில் கடலுக்குள் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

பிரதி வியாழக்கிழமை களில் இந்தத் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதில்லையென வும் அவ்வாறான தினங்களில் பயிற்சியை வழங்கலாமென சங்கத்தினர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது.

முன்னைய காலங்களில் தம்பு தோட்டத்திலுள்ள படையினருக்கான துப்பாக்கிப் பயிற்சிகள் கடற்கரையிலிருந்து கடலேரியில் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனவரி பத்திரங்கள்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த மூன்று வாரங்களில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகன வரிப் பத்திரங்களை வழங்கியுள்ளனர். ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வாகனவரி பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து வார நாள்களுடன் சனிக்கிழமைகளிலும் வாகனவரி வழங்கும் பிரிவை இயக்கி துரிதமாக விநியோகம் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் 20 ஆம் திகதிவரை 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு வாகனவரி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. வருடாந்தம் 9 ஆயிரம் வாகன வரி பத்திரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் இவ்வருடம் 45 வேலை நாள்களுக்குள் விநியோகிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## பாதுகாப்பு நிலையத்தை இடமாற்றக் கோரிக்கை

தென்மராட்சி ஜன 23

சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையம் வைத்தியசாலையின் தோற்றத்தை மறைப்பதால் இதனை வேறு இடத்திற்கு மாற்றுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலை ஏ-9 வீதியுடன் இணைந்துள்ளதால் தினமும் இவ் வீதி வழியாக செல்வோர் வைத்தியசாலை முன்பாக உள்ள பாதுகாப்பு நிலையம் மறைப்பதால் வைத்தியசாலை இருக்கும் இடம் தெரியாமல் இடம் மாறிச் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வைத்தியசாலை முன்பாக உள்ள பாதுகாப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும் என மக்கள் தெரிவித்தனர். (ம-207)

## தேசிய நுளம்பு கட்டுப்பாடு முழுமையான அனுஷ்டிப்பு

**தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை அனுஷ்டிக்கத் தவறுவோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.**

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை தென்மராட்சி பிரதேச மக்கள் முழுமையாக அனுஷ்டித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தத்தமது காணிகளையும் குடியிருப்பு பகுதிகளையும் துப்புரவு செய்வதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை அனுஷ்டித்து வருகின்றனர். மழை காலத்தின் பின்னர் வளவுகள் குடியிருப்புப் பகுதிகளில் காணப்பட்ட புற்களையும் பற்றைகளையும் துப்பரவு செய்து வருகின்றனர்.

இதேவேளை தேசியநுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை அனுஷ்டிக்கத் தவறுவோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அச்சுவேலி பஸ் நிலையத்தில்

# சுரண்டல் சுவீப் விற்பனை போக்குவரத்து நெருக்கடி

**அச்சுவேலிச் சந்தையில் வாகனத் தரிப்பிடத்துக்கான வேறுபடுத்தப்பட்ட அமைவிடம் இல்லாமையால் மக்கள் வங்கி வாடிக்கையாளர்களின் வாகனங்கள், சைக்கிள்கள் என்பனவும் குறித்த இடத்திலேயே தரித்து நிற்கின்றன.**

அச்சுவேலி, ஜன.23

அச்சுவேலி பஸ் நிலையத்தில் நிரந்தரமான சுரண்டல் சுவீப் விற்பனை நிலையம் ஒன்று இயங்குவதால் பஸ் நிலையப் பிரயாணிகளும் அச்சுவேலி சந்தைக்கு செல்லும் பொது மக்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் சுரண்டல் சுவீப் விற்பனை நிலையம் செயற்படுவதால் மக்கள் கணிசமான அளவு கூடுகின்றனர்.

அச்சுவேலி பொதுச் சந்தை முன்றிலும் அச்சுவேலி பொதுச் சந்தைப் பகுதியும் எந்தவிதமான எல்லை வரையறை இன்றித் திறந்த வெளியில் உள்ளன.

அச்சுவேலிச் சந்தையில் வாகனத் தரிப்பிடத்துக்கான வேறுபடுத்தப்பட்ட அமைவிடம் இல்லாமையால் மக்கள் வங்கி வாடிக்கையாளர்களின் வாகனங்கள், சைக்கிள்கள் என்பனவும் குறித்த இடத்திலேயே தரித்து நிற்கின்றன.

நாளாந்தம் பெருமளவில் மக்கள் கூடும் இடத்தில் பொருத்தமான அமைப்பு ரீதியிலான வேறுபாடு இன்றி திறந்த நிலையில் பஸ் நிலையமும் பொதுச் சந்தையும் வாகனத் தரிப்பிடமும் ஒரே கட்டமைப்பில் இருப்பதால் வாகன விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஏதுவான நிலை காணப்படுகின்றது.

அத்துடன் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் சிரமங்களுக்கும் ஆளாவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் வலி. கிழக்குப் பிரதேச சபையும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை நிர்வாகமும் ஏன் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-11)

# நாகர் கோயில் வீதியை புனரமைக்கக் கோரிக்கை

தென்மராட்சி, ஜன.23

ஏ-9 வீதியிலிருந்து எழுதுமட்டுவாழ் தெற்கு ஊடாக நாகர்கோயிலுக்குச் செல்லும் வீதியைப் புனரமைத்துத் தருமாறு எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாய சம்மேளனத்தினர் யாழ். அரச அதிபரையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரையும் கேட்டுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவு அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஏ-9 வீதியில் பயணிக்கும் வடமராட்சிப் பிரதேச மக்கள் எழுதுமட்டுவாழ் தெற்கு ஊடாகச் செல்லும் வீதியைப் பயன்படுத்துவது குறுகிய தூரம் என்பதால் அவர்களின் நேர விரயத்தையும் பண விரயத்தையும் குறைக்க முடியும்.

அத்துடன் இந்தப் பிரதேச அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும்.

இதேவேளை, இந்த வீதியில் விழுவளைப் பகுதியில் உள்ள பாலம் முழுமையாகச் சேதமடைந்துள்ளதால் தற்போது இந்த வீதியைப் பயன்படுத்துவோர் பாலத்துக்கு அருகில் உள்ள வயல்களின் ஊடாகவே பயணிக்க வேண்டியுள்ளது.

ஏ-9 வீதியிலிருந்து நாகர் கோயிலுக்குச் செல்லும் வீதியில் இந்தப் பாலம் அமைந்துள்ளதால் இந்த வீதியை வாகனங்கள் செல்லக் கூடிய வகையில் புனரமைத்து வழங்குமாறு கேட்டுள்ளனர்.

அத்துடன் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக செயற்பட்டு அண்மையில் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள பல வீதிகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றன. எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் உள்ள நாவலடி வீதி, சிவன் கோயில் வீதி, விழுவளை அம்பாள் வீதி, கொள்ளைக்கட்டி வீதி, பனிக்கியடி வீதி, கரம்பகம் ஊரெல்லைத் தெரு, பாடசாலை வீதி போன்றவையும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த வீதிகளை வடக்கின் மீள் எழுச்சித் திட்டம் 'நிக்கொட்' மீள் எழுச்சித் திட்டம் போன்றவற்றின் மூலமாவது புனரமைப்புச் செய்து தருமாறு விவசாய சம்மேளன செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை உரிய அதிகாரிகளிடம் கேட்டுள்ளார். (ம-207)

## டெங்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜன.23

டெங்கு ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஊர்காவற்றுறை சுகாதாரப் பணிப்பாளர் அருணா புண்ணியமூர்த்தி தலைமையிலான சுகாதாரக் குழுவினர் நெடுந்தீவில் உள்ள வீடுகளுக்குச் சென்று டெங்கு ஒழிப்பு குறித்து அறிவுரைகளை வழங்கினர்.

அத்துடன் சுற்றாடலைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் அறிவுறுத்தல் விடுத்ததுடன் காணிகள் துப்புரவு செய்யப்படாவிடில் தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தினர். (ம-7)



புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 01 வகுப்பின் கால்கோள் விழா அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் எஸ்.யோகராஜனும், கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்விக்குரிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் இரஞ்சனிதேவி இராமநாதனும் கலந்து கொண்டனர். நிகழ்வில் புத்தூர் சிவன் தேவஸ்தானப் பிரதம குரு சிவஸ்ரீ சாமி.சோமசுந்தரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். நிகழ்வில் பெற்றோர்,நலன் விரும்பிகளும் கலந்து கொண் டனர். இதில் மேடையில் அமர்ந்துள்ளனர். மாணவி ஒருவர் உரையாற்றுகிறார். (ம-38)

# நெடுந்தீவு கடற்கரையில் அணைக்கட்டு அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

நெடுந்தீவு தென்மேற்குக் கடற்கரைப் பகுதியில் கடல் நீர் உட்புகாதவாறு தடுப்பு அணை கட்டப்பட்டு வருகின்றது. மேற்கு சாமிப்பிட்டி பகுதியில் இருந்து வெல்லைவரை இந்த அணையைக் கட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கனவே கட்டப்பட்டிருந்த அணை சேதமடைந்ததை அடுத்து இந்தப் புதிய அணை கட்டப்படுகின்றது. (ம-7)

# டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை

### 6 பேர் மீது சட்ட நடவடிக்கை

அச்சுவேலி, ஜன.23

அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்கள் என்ற வகையில் ஆறு பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.


டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு பொதுமக்கள் குடியிருப்பாளர்களின் ஒத்துழைப்புத் தொடர்பாக வீடு வீடாக மேற்பார்வை நடவடிக்கை அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத் துணைப் பொறுப்பதிகாரி ஹெட்டி ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவும் சுகாதாரப் பரிசோதர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் மருத்துவத் தொண்டர் அணியினரும் வீடு வீடாகச் சென்று வீடுகளின் சுற்றுப்புறச் சூழல் சுத்தத்தை கண்காணித்து வீடுகளின் உரிமையாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்தக் கண்காணிப்பு நடவடிக்கையின் போது ஆறு குடும்பத்தினர் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காத வகையில் இருப்பது கண்டறியப்பட்டது.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்காத குடும்பத்தினருக்குப் பொருத்தமான அறிவுறுத்தல் ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைக்குமாறு கூறியதோடு அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அச்சுவேலி பொலிஸார் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ம-11)

# கழிவுகளால் நிரம்பி வழியும் கைதடி பொது நூலக வீதி



கைதடி, ஜன.23

கைதடி பொது நூலகத்துக்கு அண்மையாகவுள்ள வீதி ஒன்று தற்போது கழிவுகள் கொட்டப்படும் இடமாக மாறி வருவதாக அந்தப் பிரதேச மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி கடந்த சில வருடங்களுக்கு முன் சமுர்த்தி அதிகாரசபையின் கருத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனையில் இருந்து வருகிறது. ஆனால், கடந்த சில மாதங்களாகச் சிலர் தமது வீட்டுக் கழிவுகள் உள்ளிட்ட பல தேவையற்ற பொருள்களை இந்த வீதியில் கொட்டுகின்றனர். இதனால் இங்கு துர்நாற்றம் வீசுவதுடன் கழிவுகள் பெருகி வீதியால் பயணம் செய்வதிலும் தாம் பெரும் அவலங்களைச் சந்திப்பதாகவும் இந்த வீதியால் பயணிப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரிப் பிரதேச சபையும் கைதடியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களும் ஒன்றிணைந்து இந்தப் பகுதிகளில் கழிவுகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுத்து இந்த வீதியை மக்கள் போக்கு வரத்துக்குரியவாறு சீர் செய்து தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ம-288)

# கரையோரப் பகுதிகளில் நுளம்பு பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.கரையோரப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் மிக அதிகரிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர், கொய்யாத்தோட்டம், ஈச்சமோட்டை, சுண்டுக்குளி போன்ற பிரதேசங்களில் இந்த நுளம்பின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் உள்ள கழிவு நீர் ஓடும் கால்வாய்கள் துப்புரவு செய்யப்படாமைதான் இந்த நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பதற்கு காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இப்பகுதிகளில் கழிவு நீர் ஓடும் அனேகமான வடிகால்வாய்கள் துப்புரவு செய் யப்படாமல் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன.

அத்துடன் வடிகால்வாய்களில் இருந்து துர்நாற்றமும் வீசுகின்றது. தற்போது டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் இந்த சமயத்தில், இப் பகுதியில் வடிகால்கள் துப்புரவு செய்யப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனைக் கவனத்தில் எடுத்து வடிகால்களைத் துப்புரவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-17)

# சாவகச்சேரி நகரசபை கண்டனம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் கடற்படையினரால் தாக்கப்பட்டமைக்கு சாவகச்சேரி நகர சபையினால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைத் தலைவரும் உறுப்பினர்களும் நாட்டில் அபாய நிலையை உருவாக்கியுள்ள டெங்கு பரம்பலைத் தடுக்க மேற்கொள்ளும் முயற்சியை தடுக்கும் வகை யில் கடற்படையினர் கீரி மலை சேந்தாங்குளம் பகுதி யில் தாக்கிய சம்பவம் கண்டிக்கத்தக்க விடயமாகுமென தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை பிரேரணையை சபையில் முன் மொழிந்தார்.

இந்தப் பிரேரணையை சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் ஆதரித்ததுடன் இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது எனவும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினர். (ம-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பிரச்சினைகளுக்கு முறையற்ற செயற்பாடே காரணம்

**தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொழிலாளர் சங்கத் தலைமைக்கே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. இது வேதனையளிக்கும் செயற்பாடாகும் என்று ஊவா மாகாண முன்னாள் பிரதித் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.**

தியத்தலாவை, ஜன. 23

தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாள் குறைப்பு மற்றும் சம்பளக் குறைப்பு போன்ற செயற்பாடுகளுக்கு தோட்டத் தொழிற் சங்கங்களின் முறையற்ற செயற்பாடே காரணம் என்று ஊவா மாகாண முன்னாள் பிரதித் தலைவர் கே.விஸ்வநாதன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற முன்னாள் தோட்டத் தலைவர்களின் ஒன்றுகூடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் தோட்டத் தலைவர்களாக இருந்த காலத்தில் அடிக்கடி தோட்டக் குழுக் கூட்டங்களைக் கூட்டுவோம். அங்கு தோட்டங்களில் இடம்பெறும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை மாவட்டத் தோட்டக் குழுக் கூட்டத்துக்குச் சமர்ப்பிப்போம்.

அங்கும் அது நன்கு ஆராயப்பட்ட பின்னர் பிராந்திய வாரியாக ஆராயப்பட்டு அது அப்படியே தோட்டத் தொழிலாளர் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பின்னர் தொழிலாளர் சங்கத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், பிராந்திய மாநிலத் தலைவர்களை அழைத்து கூடி ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், தற்போது அந்த நிலைமை மாறிவிட்டது. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொழிலாளர் சங்கத் தலைமைக்கே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. இது வேதனையளிக்கும் செயற்பாடாகும்.

எனவே, தொழிற்சங்கத் தலைமைகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவது காலத்தின் தேவை. -என்றார். (ச)

# 100 வருடங்களின் பின் மின்சாரம் பெற்ற மக்கள்

மட்டக்களப்பு,ஜன.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 100 வருடத்துக்கு மேலாக மின்சாரம் வழங்கப்படாத எட்டு கிராமங்களுக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

சின்னப்புல்லுமலை, கோப்பாவெளி, கரடியனாறு, மாவடிச்சேனை, பலாச்சோலை, கிரான், சல்லித்தீவு, கதிரவெளி, மதுரங்கேணிக்குளம் ஆகிய கிராமங்களுக்கான மின் விநியோகங்களே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

போர்க் காலத்திலும், அதற்கு முன்னரும் ஏனைய பிரதேசங்களுக்கு மின்சார விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்தப் பிரதேசங்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்தன என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கிராமங்களில் மீள்குடியமர்வு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சரிடம் இதுதொடர்பில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க இந்த மின்விநியோகத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மின்சார சபை அதிகாரி தெரிவித்தார். (ச)

# முன்னாள் போராளிகளை காட்சிப்படுத்துகிறது அரசு

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜன.23

முன்னாள் போராளிகளைக் காட்சிப்படுத்தும் அரசின் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. எமது தமிழ்ச் சகோதரர்களை வைத்து இந்த அரசு சுயலாபம் தேடுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் போராளிகளும் தமிழ்த் தாயின் மடியில்தான் பிறந்தவர்கள். அவர்களும் எங்களைப் போன்ற மனிதர்கள்தான். அவர்கள் எங்கள் தமிழ்ச் சகோதரர்கள்.

அவர்களை அரசு விடுதலை செய்வதை நாம் வரவேற்கின்றோம். ஆனால், அவர்களை இந்த அரசு விடுவிக்கும் விதம்தான் பிழையானது என்று அவர் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளை வைத்து அரசு நாடகம் ஆடுகின்றது. ''உங்கள் பிள்ளைகள் விடுவிக்கப்படவுள்ளனர். எனவே, அந்த விடுவிப்பு நிகழ்வில் தாங்கள் சமுகமளிக்கவேண்டும் என்று அரசு பெற்றோருக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்த நிகழ்வுகள் பலவற்றில் கலந்துகொண்ட பெற்றோர் பலர் ஏமாந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் போராளிகளை வைத்து கலைநிகழ்வுகளை அரசு அரங்கேற்றிய பின்னர் சிலரே விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இது குறித்து பெற்றோர்களில் பலர் எம்மிடம் முறையிட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அண்மையில் நாடாளுமன்றத்துக்கும் முன்னாள் பெண் போராளிகளை அரசு அழைத்துச் சென்று நாடகம் காட்டியுள்ளது. அந்தப் பெண்களுக்கு மொட்டையடித்து அழைத்துச் சென்று அவர்களைக் கேவலப்படுத்தியுள்ளது.

இந்தச் செயல் தமிழர் நெஞ்சங்களில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அரசு முன்னாள் போராளிகளை விடுவிப்பதை நாம் வரவேற்கிறோம். ஆனால், அவர்களை உரிய முறையில் விடுவிக்கவேண்டும்.

முன்னாள் போராளிகளை வைத்து தெருக் கூத்துக்காட்டாமல் அவர்கள் அனைவரையும் உடன் விடுவிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தேயிலையுடன் இருவர் கைது

நுவரெலியா,ஜன.23

குண்டசாலைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை போக்குவரத்து அனுமதிப்பத்திரம் மற்றும் தரச் சான்றிதழின்றி ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட தேயிலையைக் கொண்டு சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தேயிலை கழிவுத் தேயிலையா என்று உறுதிசெய்வதற்கான பரிசோதனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேயிலையை சட்டவிரோதமாக கொழும்புக்குக் கொண்டு செல்லும்போதே தாம் அதனைக் கைப்பற்றியதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

# பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் மீட்பு

கண்டி,ஜன.23

கண்டி, ரஜபஹில்ல மாவத்தையிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து, இந்தப் பகுதியிலிருந்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கண்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கொன்ஸ்டபிளான அனுர (வயது 40) என்பவரது சடலமே சிவில் உடையில் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். இந்தச் சடலத்தின் தலைப் பகுதியில் காயங்கள் காணப்படுவதால் இது கொலைச் சம்பவமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



சிறைச்சாலைகள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மட்டத்திலான தைப்பொங்கல் விழா மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அபிவிருத்தி

மூதூர், ஜன.23

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேதத்தீவு பகுதியை சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்வதற்கு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கிராமத்தில் 39 வீடுகளும், 10 பொதுக் கிணறுகளும், 32 வீட்டுக்கிணறுகளும், 39 மலசல கூடங்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன. (ச)

# உண்டியல் திருட்டு

ஹாலிஎல, ஜன.23

ஹாலிஎல, வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உண்டியல் திருடப்பட்டு அதிலிருந்த பணம் கொள்ளையிடப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினரால் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்யப்பட்டுள்ளது.

திருடப்பட்ட உண்டியலில் சுமார் 20,000 ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்திருக்கலாம் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பான மேலதிகவிசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

# மொழிபெயர்ப்பாளர் சத்தியசீலன் இனந்தெரியாதோரால் கடத்தல்

திருகோணமலை,ஜன.23

நாடாளுமன்றம், கொழும்பு மாநகரபை உள்ளிட்ட பல நிறுவனங்களின்மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி வந்த சத்தியசீலன் பாக்கியராஜ் (வயது 34) என்பவர், இனந்தெரியாதோர் சிலரால் திருகோணமலையில் வைத்து கடத்தப்பட்டுள்ளார் என்று திருகோணமலை துறைமுகப் பொலிஸில் அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கடத்தல் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக சத்தியசீலனின் மனைவியின் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

திருகோணமலை, நீதிமன்ற வீதியில் அமைந்துள்ள தனது வீட்டை நோக்கி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புறப்பட்டுக்கொண்டிருந்தபோது தன்னை சிலர் கடத்தியதாக அவர் தனது மனைவிக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியுள்ளார்.

அந்த அழைப்பை அடுத்து கணவரின் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டதாக சத்தியசீலனின் மனைவியின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மலையக சமூகம் ஓரணியில் திரண்டு உரிமையை வென்றெடுக்க வேண்டும்

**அனாவசிய தேவைகளுக்குச் செலவு செய்யும் பணத்தைத் தங்களது குழந்தைகளின் கல்விக்காக செலவுசெய்து கல்வியறிவு நிறைந்த சமூகமாக உருவாக்கவேண்டும் என்று இ.தொ.கா. உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

மஸ்கெலியா, ஜன.23

வடபகுதியில் அரசியல்வாதிகள் ஒரு குடையின் கீழ் அணி திரண்டிருப்பதால் அவர்களது பிரச்சினை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அதேபோல் மலையக சமுகமும் ஓரணியில் திரண்டு தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்று இ.தொ.கா. உதவிச்செயலாளரும், அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினருமான செல்லையா சிவசுந்தரம் தெரிவித்தார்.

மொக்கா தமிழ் வித்தியாலயத்துக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டங்களை தனியாருக்குப் பிரித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவேறி வருகின்றன. இது நிறைவேறும் பட்சத்தில் தொழிலாளர்கள் பண்ணை அடிமைகளாக வாழவேண்டிய நிலை ஏற்படும்.

இதிலிருந்து மீட்சிபெற வேண்டுமானால், எதிர்கால சமூகம் கல்வி கற்ற சமூகமாக உருவாகவேண்டும்.

அனாவசிய தேவைகளுக்குச் செலவு செய்யும் பணத்தைத் தங்களது குழந்தைகளின் கல்விக்காக செலவுசெய்து - கல்வியறிவு நிறைந்த சமூகமாக உருவாக்கவேண்டும்.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நடந்த முப்பெரும் விழா

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் மற்றும் மாணவ சமூக எழுச்சி இயக்கம் ஆகியன இணைந்து நடத்திய முப்பெரும் ஆண்டு விழா நேற்றுப் பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெற்ற இந்த நிகழ்வில் காலை அமர்வு சமூக முன்னேற்றக் கழகத்தின் தலைவர் இ.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. பாராட்டு அரங்கில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் மற்றும் அரச பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் உடுவை எஸ். தில்லைநடராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதில் கலைத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயற்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சமூகப் பற்றாளர் விருதுகள் சி.இரத்தினகுமார், க.பொன்னுத்துரை, சந்தியாப்பிள்ளை அன்ரன் இராசநாயகம், க.தங்கவேலு, சி. குணரத்தினம், ஞா.பொன்ராசா ஆகியோருக்கு வழங்கப்பட்டன. சமூக முன்னோடி விருதுகளின் வரிசையில் கல்விக்கதிர் விருதுகள் திருமதி இராசலட்சுமி செல்லத்துரை, திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லம்மா ஆகியோருக்கும், சிவநெறியாளர் விருது க.நாகராசா, மு.குமாரசுவாமி ஆகியோருக்கும், துறைசார் வித்தகர்களுக்கான விருதுகள் ஐவருக்கும் வழங்கப்பட்டன. இதில் வித்தியா ஜோதி விருது சீனிவாசகம் பத்மநாதனுக்கும், மேலாண்மை வித்தகர் விருது டொமினிக் திலீபனுக்கும் கமநல வித்தகர் விருது கணபதி வீரசிங்கத்துக்கும், கவிமணி விருது தம்பிராசா பரமலிங்கத்துக்கும் - எழுச்சித் தலைவருக்கான விருது எஸ். நாகலிங்கத்துக்கும் வழங்கப்பட்டன. தொடர்ந்து தேசிய டிப்ளோமா பட்டம், இளமாணிப் பட்டம், உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பிற்பகல் அமர்வு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாச பொதுக் கல்விச் சேவை அங்கத்தவர் ச.அசோக் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் க. இராமநாதன் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில், க.பொ.த சாதாரண தரம் ஆகியவற்றில் சித்தியடைந்து தந்தையை இழந்தவர்களுக்கும் கல்வி உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன் இது தொடர்பான போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஒ-319,311,ரி)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண் மகிழ 04.10.1948



கண் நெகிழ 25.12.2011

### தம்பிஐயா சிவராசா

எமது குடும்பத் தலைவரின் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (24.01.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்.* — குடும்பத்தினர்.

## குடத்தனையில் குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்பு

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். சடலம் பிரேத பரிசோதனையின்பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. குடத்தனையைச் சேர்ந்த வைரவப்பிள்ளை தவக்குமார் (வயது 35) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே மரணமானவர் ஆவார். (ஒ-319)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை இராசரத்தினம்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசரத்தினம் நேற்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.செல்லத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் சின்னப்பா - தங்கம்மா (சிறுப்பிட்டி) தம்பதியரின் மருமகனும் பிறேமாவின் அன்புக் கணவரும் சற்குணாம்பிகை, பொன்குணரத்தினம், வரதரத்தினம் (கொழும்பு), கிமாலயரத்தினம் (கனடா), Dr.கிருபாரத்தினம், பத்மாம்பிகை (ஆசிரியர், யா/சில்லாலை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மூர்த்திரத்தினம் (பொறியியலாளர், டென்மார்க்), குணரத்தினம், கஜரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசகுலேந்திரன் (மருந்தாளர், இளவரசன் மருந்தகம்), திலகவதியார் (உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி), சாந்தினி (ஆசிரியர், கொழும்பு ஹம்சா முஸ்லிம் ம.வி.), சிவலக்குமி (கனடா), அகிலவல்லி (ஆசிரியர், யா/மகாஜனக் கல்லூரி), சிற்சபேசன் (ஆசிரியர், கிளி/பரந்தன் இந்து ம.வி.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.* — தகவல்: சகோதரர்கள்.

### கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (அப்பு)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் காளிகோயிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (21.01.2012) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - மனோரஞ்சிதம் தம்பதியரின் மருமகனும் நகுலேஸ்வரியின் (இந்தியா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கிரிதரன், சசிதரன், ஜெயதரன் மற்றும் ஜீவதரன் (பிரான்ஸ்), முரளீதரன் (சுவிஸ்), கருணாகரன் (நோர்வே), மலர்விழி, கயல்விழி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெனனி (பெல்ஜியம்), நளினி (பிரான்ஸ்), அனுஷா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனும் டிலக்சன் (பெல்ஜியம்), அபிநயா, சகானா, அக்ஸவின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி, சங்கானை.* — தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னப்பா தம்பிராசா



புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் தம்பகாமம், பளையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னப்பா தம்பிராசா நேற்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் சரவணமுத்து, காலஞ்சென்ற கனகசபை மற்றும் சிவக்கொழுந்து, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், திருநாவுக்கரசு, சிவஞானசுந்தரம் மற்றும் கேதீஸ்வரநாதன், அம்பலவாணர் (அதிபர், யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), கந்தசாமி, விக்னேஸ்வரன் (ஆசிரியர், யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), மகேஸ்வரன், பீதாம்பரன் (நூலக உதவியாளர், சாவகச்சேரி பிரதேச சபை), இராசலட்சுமி (ஆசிரியை, யா/சாவகச்சேரி றோ.க.த. பாடசாலை), யோகலட்சுமி (இத்தாலி), அன்னலட்சுமி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்வதி, கமலாதேவி, சந்தானலட்சுமி, கலைவாணி, புஸ்பராணி (ஆசிரியர், யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), இதயனி (ஆசிரியர், யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி), தர்சினி (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மயில்வாகனசிங்கம் (விரிவுரையாளர், ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, சுன்னாகம்), கேதாஸ்வரன் (லண்டன்), கருணா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும் சந்திரகுமார் (லண்டன்), ஆனந்தகுமார் (இத்தாலி), அனுசியா (இத்தாலி), அசோக்குமார் (வயம்ப பல்கலைக்கழகம்), கமலகாந்தன், டயாழினி, ஜனகசிவசுதன், மதுரவேணி, சுபதாரணி, விதுசனா, கீதன், கேதீசன், ஐதுவினா, அபிஷாத், அபிஷன், கபிஷனன், ஹம்சவர்சன், மாதுளா, கார்த்திகன், காவியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஹரிஷன், அனுவின், மதுசா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2012) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அக்கினி வைரவர் கோயிலடி,*
*நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.* — தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைரவப்பிள்ளை தவக்குமார்



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் குடத்தனை மேற்கு, குடத்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவப்பிள்ளை தவக்குமார் நேற்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வைரவப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் கிருஸ்ணானந்தன் - சரோஜாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சோபனாவின் அன்புக் கணவரும் தசாயினி (இளவாலை பெண்கள் பாடசாலை), அரனியா, கிருஸ்ணபிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் மல்லிகாதேவி, பவிக்குமார் (லண்டன்), வசந்தகுமார் (சுவிஸ்), சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடத்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குடத்தனை மேற்கு.* — தகவல்: சோபனா (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளை எங்களிடமே தாருங்கள்

## - ஆர்ஜென்ரீனா மக்கள் போராட்டம்-

போக்லாந்து தீவுகளை ஒப்படைக்குமாறு ஆர்ஜென்ரீனாவின் தலைநகரான புவனர்ஸ்அயர்ஸில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் பிரிட்டனின் கொடியை எரித்து மக்கள் போராட்டம் நடத்தினர்.

ஆர்ஜென்ரீனாவுக்குச் சொந்தமாயிருந்த போக்லாந்து தீவுகளை பிரிட்டன் அதனது ஆளுகைக்குள் கொண்டு வர விரும்புகிறது. போக்லாந்து தீவுகளில் வாழும் மக்கள் பிரிட்டனின் ஆட்சியையே விரும்புகின்றனர் என்று தொடர்ந்தும் பிரிட்டன் தெரிவித்து வருகின்றது.பாக்லாந்து தீவுகளில் வாழும் மக்களின் முடிவுக்கு எதிராக ஆர்ஜென்ரீனா அதைப் பெற நினைப்பது காலனி ஆதிக்கமாகும் எனவே இந்த அடக்கு முறையைத் தடுப்பதற்காக இராணுவத்தை போக்லாந்தில் நிறுத்தப் போகின்றோம்- என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அண்மையில் கூறியிருந்தார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஹெலிகப்டர் மீட்புப் படையின் இராணுவப் பயிற்சியை மேற்கொள்வதற்காக இளவரசர் வில்லியம் இந்தத் தீவுக்கு வருகை தரவிருக்கிறார். இவ்வாறு இராணுவ ஒத்திகைகளைச் சாட்டாக வைத்து, பிரிட்டன்இங்குதனது இராணுவத்தை நிறுத்தி வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியும், தமது தீவுகளைத் தம்மிடமே ஒப்படைக்குமாறு கோரியுமே ஆர்ஜென்ரீனா மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

**தமது தீவுகளைத் தம்மிடமே ஒப்படைக்குமாறு கோரி ஆர்ஜென்ரீனா மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.**

போக்லாந்துத்தீவுக் கடற்பரப்பில் பிரிட்டன் நிறுவனங்கள் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டி வருகின்றன.அங்கு ஏராளமான எண்ணெய் கிடைக்கும் என்றஆசையினாலேயே போக்லாந்தை பிரிட்டன் ஒப்படைக்க மறுக்கின்றது என்று ஆர்ஜென்ரீனா குற்றம் சாட்டியுள்ளது. ஆர்ஜென்ரீனாவின் பிரதமர் கிறிஸ்டினா பெர்னாண்டெஸ் தங்களின் இயற்கை வளங்களை பிரிட்டன் வலிந்து அபகரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

லத்தீன் அமெரிக்கா நாடுகளிடம் இருந்து ஆர்ஜென்ரீனா ஆதரவைத் திரட்டி வருகின்றது.அடுத்து வரும் நாள்களில் பிரிட்டனுக்கு எதிரான போராட்டங்கள் வலுவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ங)

# பூகம்ப அதிர்வு ஈரான் மீளும்



ஈரானின் நெய்ஸ்பூர் நகரில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 230 ஆக அதிகரித்துள்ளதாக ஈரான் அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இவர்களில் 30 பேர் படுகாயமடைந்ததால் அவர்கள் இன்னமும் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருவதாகவும், ஏனையோர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பூகம்பத்தால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. பூகம்பத்தால் இடிந்து வீழ்ந்துள்ள கட்டடங்களை அகற்ற இன்னும் ஒருவாரத்துக்கு மேல் தேவைப்படும் என்று கூறப்படுகின்றது. எனினும் இந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் எவரும் சிக்கவில்லை என்றும், பூகம்ப அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு சிலகாலம் தேவைப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ங)

# மீண்டும் திறந்தது பாதை

ஆப்கானிஸ்தானில் நிலை நிறுத்தப்பட்டுள்ள நேட்டோ படைகளுக்கான பொருள்கள் செல்லும் பாதையை மீண்டும் திறக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. அவ்வாறு செல்லும் வாகனமொன்றுக்கு தலா ஆயிரம் டொலர் வீதம் சுங்க வரி வசூலிக்கவும் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் இருந்த போது செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ஆப்கானில் உள்ள நேட்டோவுக்கு பாகிஸ்தான் ஊடாக பொருள் விநியோகம் நடத்தப்பட வேண்டும் என்பதும் ஒன்று.அதன்படி நேட்டோவுக்குத் தேவையான பொருள்கள் கப்பல் மூலம் பாகிஸ்தான் தலைநகர் கராச்சியை வந்தடைந்து பாகிஸ்தான் வழியாக எல்லையைக் கடந்து ஆப்கானுக்குச் செல்லும் நடைமுறை இருந்தது. இந்தப் போக்குவரத்துக்கு எவ்வித சுங்க வரியும் முஷாரப் காலத்தில் வசூலிக்கப்படவில்லை. எனினும் கடந்த வருடத்தில் இருந்து இந்தப் போக்குவரத்துக்கு பாகிஸ்தானின் மத்திய வருவாய்த் துறை மூலம் சுங்க வரி வசூலிக்கப்பட்டது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் நேட்டோப் படை பாகிஸ்தான் படையினர் மீது நடத்திய தாக்குதலில் கோபமடைந்த பாகிஸ்தான் அரசு, இந்தப் பாதையூடான போக்குவரத்தை தடைசெய்து விட்டது. இதனால் நேட்டோவுக்கான பொருள் விநியோகத்துக்கு அமெரிக்கா பெருந்தொகையைச் செலவிட நேர்ந்தது.

**கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நேட்டோப் படை பாகிஸ்தான் படையினர் மீது நடத்திய தாக்குதலில் கோபமடைந்த பாகிஸ்தான் அரசு, இந்தப் பாதையூடான போக்குவரத்தை தடைசெய்தது விட்டது.**

இந்தநிலையில் நேட்டோவுக்கான பொருள் விநியோகத்துக்கான பாதையை மீண்டும் திறந்து விட பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. அதேவேளை ஒரு வாகனத்திற்கு ஆயிரம் டொலர் வீதம் வரியாக வசூலிக்கப்படும் எனவும், இதனை வருவாய்த் துறை வசூலிக்காமல் இராணுவத்தின் தேசியப் போக்குவரத்து பிரிவே வசூலிக்கும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ங)

# தொடரும் வன்முறைகளால் நைஜீரியாவில் 150 பேர் சாவு

நைஜீரியாவில் தொடரும் வன்முறைகளால் அப்பாவிப்பொதுமக்கள் 150 பேர் பலியாகியுள்ளனர். ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளனர். வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நைஜீரியாவின் கானோ நகரில் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

நைஜீரியாவில் எரிபொருள் விலை உயர்வைக் கண்டித்து ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சிகள், கட்டுங்கடங்காத வன்முறைகளாகப் பெருகியுள்ளன. குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூடுகளால் நைஜீரியா முழுதும் பதற்றநிலை நீடிக்கின்றது. கடந்த சனிக்கிழமை கனோ நகரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தில் 120 பேர் உயிரிழந்தனர், மேலும் பலர் காயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் உள்ளூர் ஊடகவியலாளர், 3 பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் அடங்குவர்.சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டவர்களில் சிலர் வெளிநாட்டவர் என்பது தெரியவந்துள்ளது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தவிர நைஜீரியாவின் ஏனைய நகரங்களுக்கும் கிளர்ச்சியாளர்களால் வன்முறைகள் நிகழ்த்தப்படுகின்றது.இவற்றில் சிக்கி அப்பாவிப் பொதுமக்களே அதிகளவில் உயிரிழந்து வருகின்றனர். வன்முறைகளைக் கட்டுப்படுத்த இராணுவத்தை நைஜீரிய அரசு களமிறக்கியுள்ளது. இராணுவத்தினர் கிளர்ச்சியாளர்கள் என்ற பெயரில் அப்பாவிப் பொதுமக்களையே துன்புறுத்துவதாகவும் குற்றம் சுத்தப்பட்ட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் நைஜீரியாவின் அபுஜா நகரில் ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதில் 26 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின்போது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

15 கோடி மக்கள் தொகை கொண்ட நைஜீரியாவில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். இங்கு தொடரும் வன்முறைகள் கிறிஸ்தவ மக்களை இலக்கு வைத்தே நடத்தப்படுவதாகவும், இதனால் இந்த வன்முறைகள் மதக்கலவரமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அச்சம் தெரிவிக்கப்படுன்றது. (ங)

# குழந்தையின் பிறப்புறுப்பை வெட்டியெறிந்த சீனத்தாய்

சீனாவில் தான் பெற்ற மகனின் பிறப்புறுப்பை வெட்டிய தாய் ஒருவருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள யான்செங் நகரத்தைச் சேர்ந்தவர் ஜியோ மெங்(வயது- 23). இவருக்கு பெண் குழந்தை மீது அளவுகடந்த ஆசை.தனக்கு பெண் குழந்தையே பிறக்குமென இவர் நம்பினார். ஆனால், அதற்கு மாறாக ஜியோவுக்கு ஆண் குழந்தையே பிறந்தது. அதனால் அவர் கவலை அடைந்தார். குழந்தைக்கு யயா என்று பெயர் வைத்தார்.

இந்தநிலையில், பெண் குழந்தை பிறக்கவில்லையே என்ற கோபத்தில், அண்மையில் அவர் தனது ஆண் குழந்தையின் பிறப்புறுப்பை வெட்டி எறிந்துள்ளார்.குழந்தையின் அலறல் கேட்டு கணவன் ஸான், மாமியார் ஆகியோர் ஓடிச் சென்று பார்த்துள்ளனர். அங்கு இரத்த வெள்ளத்தில் குழந்தை துடிப்பதைப் பார்த்து பதறினர். உடனடியாகக் குழந்தையை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சைக்கு பின் குழந்தை பிழைத்து கொண்டது. ஆனால், குழந்தை யயாவுக்கு ஆண்மைத் திறன் போய் விட்டது என்று டாக்டர்கள் கூறியுள்ளனர்.இதனால் ஸான் மிகவும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.

குழந்தையை அடிக்கடி ஜியோ அடிப்பாள், பெண் குழந்தை பிறக்காத ஆத்திரத்தில் செய்கிறாள்.. மன அழுத்தம் அதிகரித்திருக்கும் என்று நினைத்தேன். ஆனால், இப்படிக் கொடூரமாக நடந்து கொள்வாள் என்று எதிர்பார்க்கவில்லை என்று ஸான் கண்ணீருடன் கூறியுள்ளார்.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஜியோவுக்கு 5 வருடசிறைத் தண்டனை விதித்துள்ளது. தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். (ங)



மெக்ஸிக்கோ நகரில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் பாதாள உலகக் குழுவினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவ ரோந்து மெக்ஸிக்கோவில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# வயிற்றைக் கிழித்து குழந்தை திருட்டு

தென்னாபிரிக்காவில் கர்ப்பிணி ஒருவரின் வயிற்றை கிழித்து, குழந்தையைத் திருடிச் சென்ற பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த அதிர்ச்சிச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது-

தென்னாபிரிக்காவின் ஜோக்கன்னஸ்பர்க் மேற்கு பகுதியில் உள்ள ரேண்ட் போடின் நகரத்தைச் சேர்ந்த 34 வயது கர்ப்பிணிப் பெண்ணொருவர் பிரசவத்துக்காக வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தார்.

இதேவிடுதியில் தங்கியிருந்த 29 வயதுடைய இளம் பெண் ஒருவர், குறித்த கர்ப்பிணியின் வயிற்றை கத்தியால் கிழித்து, உள்ளிருந்த குழந்தையை வெளியில் எடுத்துள்ளார்.அதன் பிறகு கர்ப்பிணியை இரத்த வெள்ளத்தில் விட்டுவிட்டு குழந்தையுடன் மாயமானார். இரத்தப்போக்கால் கர்ப்பிணி பரிதாபமாக இறந்துள்ளார். இதுகுறித்து தகவல் அறிந்து பொலிஸார் விரைந்து சென்று தீவிர விசாரணை நடத்தினர். அதன்பின், கொடூர செயலில் ஈடுபட்ட அந்தப் பெண்ணைப் பொலிஸார் கைது செய்தனர்.

முதலில் அதிக இரத்த போக்கால் கர்ப்பிணி இறந்ததாக கூறப்பட்டது. தீவிர விசாரணையில் அவருடைய வயிற்றை கிழித்து குழந்தை திருடப்பட்டது தெரிந்தது.கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளோம். அவர் மீது கொலை, கடத்தல் உட்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணிடம் இருந்து மீட்கப்பட்ட குழந்தை தற்போது நலமாக உள்ளது. தென்னாபிரிக்காவில் பிறந்த குழந்தைகளைத் திருடும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவிட மாட்டோம்

## - கிலானி திட்டவட்டம்-



பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் நாடு திரும்ப ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் கிலானி உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கிலானி கூறுகையில், முஷாரப் கிட்டத்தட்ட 10 வருடங்கள் சர்வதிகார ஆட்சி செய்தார்.ஆனால் அந்தக் காலகட்டத்தில் பாகிஸ்தான் எந்தவிதமான வளர்ச்சியும் அடையவில்லை. மாறாக அவரது ஆட்சிக் காலத்தில் ஊழல் பெருகியது.வறுமை தலைவிரித்தாடியது.ஜனநாயகம் மறுக்கப்பட்டது. உலகநாடுகளின் பார்வையில் பாகிஸ்தானின் முகத்தையே மாற்றியவர் முஷாராப்.அதனால் தான் பல மேற்குலக நாடுகள் பாகிஸ்தானை தமது எதிரி நாடு போல நோக்கும் நிலை தோன்றியது.அத்துடன் தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க எதுவும் செய்யத் தயங்காதவர் அவர். எனவே முஷாரப்பை மீண்டும் நாடு திரும்ப அனுமதித்தால் பாகிஸ்தானில் திரும்பவும் இருண்டயுகம் ஏற்பட அவர் வழி செய்து விடுவார். மக்களினதும் நாட்டினதும் நன்மை கருதி, அவரைப் பாகிஸ்தானுக்குள் நுழைய விடுவதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளது. - என்றார்.

தற்போது பாகிஸ்தான் அரசியலில் குழப்பநிலை நீடித்து வருகின்றது. அரச நிர்வாகத்துக்கும் இராணுவத்துக்கும் இடையே முறுகல் நிலை முற்றியுள்ளது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையே நீடிக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தானில் தான் இல்லாதது மக்களுக்கு பேரிழப்பு என்றும், விரைவில் நாடு திரும்பப் போவதாகவும் முஷாரப் தெரிவித்திருந்தார்,

பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானி, முஷாரப்பின் தீவிர விசுவாசியாக இருந்தவர். எனவே கயானியும் முஷாரப்பும் கூட்டுச் சேர்ந்து தங்கள் ஆட்சிக்கு உலை வைத்துவிடுவார்களோ என்ற பயத்திலேயே கிலானி முஷாரப்பின் வருகையைத் தடை செய்யத்தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது. (ந)

# தேடப்படுவோர் 75 ஆயிரம் பேர்

மொஸ்கோ ஜன, 23:

சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்ரர்போலில் குற்றவாளிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 50 சதவீதம் அதிகரித்தது. ஒரு நாட்டில் குற்றங்களில் ஈடுபட்டு வேறு நாட்டுக்கு தப்பிச் சென்றவர்களை கைது செய்யும் பணியில் இன்டர்போல் என்ற சர்வதேச பொலிஸ் அமைப்பு ஈடுபட்டுள்ளது. தேடப்படும் குற்றவாளிகள் குறித்த விவரங்களை இன்ரர்போலுக்கு பல்வேறு நாடுகள் வழங்கு வருகின்றன. இவ்வாறு வழங்கப்பட்ட பட்டியல்களில் உள்ள குற்றவாளிகளின் எண்ணிக்கை 2010ஆம் ஆண்டில் சுமார் 50,000 ஆக இருந்தது. ஆனால் அந்த எண்ணிக்கை 2011ஆம் ஆண்டு 50 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது 2011இல் 75,000 குற்றவாளிகளைத் தேடிப்பிடித்து தரும்படி இன்ரர்போலிடம் பல நாடுகள் கோரியுள்ளன. இந்தக் குற்றவாளிகளில் 26 ஆயிரம் பேருக்கு எதிராக எச்சரிக்கை அறிவிப்பு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இன்ரர்போல் தெரிவித்துள்ளது.

(ந)

# தலிபான்கள் – அமெரிக்கா இரகசிய உடன்பாடு?

அமெரிக்க அரசுடன் தலிபான்கள் இரகசிய உடன்பாடு செய்து கொள்ள வாய்ப்பு உள்ளது என ஆப்கான் இராணுவத் தளபதி அப்துல் கரீம் குர்ராம் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

தலிபான்களுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கட்டாரில் அலு வலகம் ஒன்றைத் தலிபான் கள் திறப்பதற்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது.

உண்மையில் இந்த அலுவலகத்தை ஆப்கானிஸ்தானில் திறக்கவே நாங்கள் விரும்பினோம். ஏனெனில் தலிபான்களுடனான போர் முடிவுக்கு வரவேண்டும் என்ற விருப்பத்திலேயே நாங்கள் அதனை ஆதரித்தோம். ஆனால் எம்முடைய விருப்பத்துக்கு மாறாக கட்டாரில் அந்த அலுவலகத்தை தலிபான்களின் விருப்பப்படி திறக்க அமெரிக்கா அனுமதி கொடுத்துள்ளது.

அத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்க அரசு ஆப்கான் அரசுக்கு சரியான தகவல்களையும் அளிப்பதில்லை.

பாகிஸ்தானில் வசித்து வரும் சில தலிபான் தலைவர்கள் கட்டாரிலிலுள்ள அலுவலகத்துக்குச் சென்று வருகின்றனர். இதற்கு பாகிஸ்தான் அதிகாரிகள் உதவி புரிகின்றனர். தலிபான்களுடனான அமைதிப் பேச்சுசில் பாகிஸ்தான் பங்கேற்கிறதா என்பது குறித்து அமெரிக்கா எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆனால் இதுவரை அமெரிக்கா இதற்கான பதிலை அளிக்கவில்லை. இதனால் எம்மைத் தவிர்த்துவிட்டு , தலிபான்களுடன் அமெரிக்கா இரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தலிபான்களுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தானை ஒரு தரப்பாகக் கொள்ளாவிட்டால் அது ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தையாக அமையாது - என்றார். (ந)

தலிபான்களுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் ஆப்கானிஸ்தானை ஒரு தரப்பாகக் கொள்ளாவிட்டால் அது ஆக்க பூர்வமான பேச்சாக அமையாது என்று இராணுவத் தளபதி அப்துல் கரீம் குர்ராம் தெரிவித்தார்.

## கவர்ச்சி காட்டியவருக்கு ஈரானில் நுழையத் தடை



ஈரானைச் சேர்ந்த நடிகையான கோல்ஷிப்டே பராஹனி(வயது-28) லியானோர்டோ டிகேப்ரியோவின் கவர்ச்சிப் புகைப் படங்களை பிரான்ஸ் நாட்டு பத்திரிகை அண்மையில் வெளியிட்டிருந்தது. இதற்கு பராஹானி அனுமதி கொடுத்திருந்தார்.

அத்துடன் அந்த படத்தை பேஸ்புக்கிலும் வெளியிட்டதால் அதை உலகில் ஏராளமானோர் பார்த்தனர். இதை விட இன்னும் பல இதழ்களுக்கு அவர் தன்னைக் கவர்ச்சியான புகைப்படங்களை எடுக்க அனுமதி கொடுத்து வருகிறார். இதற்கு ஈரானில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.


தற்போது பிரான்ஸில் வசிக்கும் பராஹனி கூறுகையில்,

ஈரான் அரசு அதிகாரிகள் என்னை தொடர்பு கொண்டு, ஈரானுக்கு வரவேண்டாம் என்று கூறினர்.ஈரானில் மத பழமைவாதத்தை எதிர்த்து குரல் கொடுக்க போகின்றேன். - என்றார். (ந)

# மரண அறிவித்தல்

## கனகசபாபதி வரதராசன்

**(முன்னாள் உரிமையாளர், வரதன் ரேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் )**



காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இல.42, B.A தம்பிலேனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி வரதராசன் 20.01.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் பிரபல வர்த்தகர் (யாழ்ப்பாணம், ஆஸ்பத் திரி வீதி,) ஆ.க. கனகசபாபதி (A.K.K.) அன்சன்ஸ் உரிமையாளர்) கனகசபாபதி – சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காரைநகர், சின்னாலடியைச் சேர்ந்த குமர கோட்டம் பாலசுப்பிரமணியம் – தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சோதியாம்பாளின் அன்புக் கண வரும் பிரதீபன் (கொழும்பு, தனியார் நிறுவனம்), சதீஸ்தீபன் (சுவிஸ்), கல்ப்பனா (A/L 2009 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தயாதீசன் (யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட முகாமைத்துவபீட மாணவன்), மைதிலி (A/L 2013, வர்த்தகப் பிரிவு, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, காலஞ்சென்ற சிவகுமாரன், விஜய ராணி (கனடா), சறோஜினி, வசந்தா, கிருஸ்ணரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலைவாணி, விக்கினேஸ்வரன் (கனடா), காலஞ்சென்றவர்களான கிருபாகரன், சந்திரன் (சங்கர் அரிசி ஆலை உரிமையாளர்) மற்றும் சிவகுமார் (அம்பாள் அரிசி ஆலை உரிமையாளர்), சிவபூசனி, சிவநேயச்செல்வி (சுவிஸ்), கலாநிதி சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2012) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.42 B.A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## கனகசபாபதி வரதராசன்

(முன்னாள்உரிமையாளர், வரதன் ரேடர்ஸ் )

எமது நிறுவனத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய கனகசபாபதி வரதராசன் அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்,
தேனு களஞ்சியம்,
EG - 2 சென்ரல் வீதி, கொழும்பு - 12.
இல.29, நவீன சந்தை உட்புறம், திருநெல்வேலி.

(13402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னா குழு மீது காலணி வீச்சு

தேர்தல் பிரசாரம் செய்யும் போது அன்னா குழுவினர் மீது காலணி வீசியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தியாவில் ஐந்து மாநிலங்களின் சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்ய சமூக சேவகர் அன்னா ஹசாரே குழுவினர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்வாரில் பிரச்சாரத்தை ஆரம்பித்தார். அப்போது கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் தனது காலில் அணிந்திருந்த காலணியைக் கழற்றி அன்னா குழுவின் முக்கிய உறுப்பினரான அரவிந்த் கெஜ்ரிவாலை நோக்கி வீசினார். ஆனால் அவரின் மீது காலணி படவில்லை.

இந்தக்கூட்டத்தில் அர்விந்த் கெஜ்ரிவாலுடன், கிரண்பேடி உட்பட மற்ற உறுப்பினர்களும் இருந்தனர். உடனே உத்தரகாண்ட் பொலிஸார் தாக்குதல் நடத்த முயன்றவரைக் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது. (வ)

## கண்ணிவெடித் தாக்குதல் பொலிஸார் 11 பேர் சாவு



இந்தியாவில் ஜார்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகளின் அட்டூழியம்

இந்தியாவில் ஜார்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகள் நடத்திய கண்ணி வெடித்தாக்குதலில் சிக்கி பொலிஸார் 11 பேர் உயிரிழந்தனர். ஜார்கண்ட் மாநிலம் பண்டாரியா காட்டுப் பகுதியில் ஆய்வுப் பணிக்காக பொலிஸாரை ஏற்றிக் கொண்டு வாகனம் ஒன்று புறப்பட்டது.

காட்டுப்பகுதியில் வாகனம் சென்ற போது மாவோயிஸ்ட்டுகளால் புதைக்கப்பட்ட கண்ணி வெடி மீது வாகனம் ஏறும் போது பலத்த சத்தத்துடன் வாகனம் வெடித்துச் சிதறியது.

சம்பவ இடத்திலேயே கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கி பொலஸார் 11பேர் உயிரிழந்தனர் என்று அந்த மாவட்ட பொலிஸ் அதிகாரி மைக்கேல் ராஜ் தெரிவித்தார். (வ)

# ஈழத்தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு தேவை

### காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன்



சென்னை, ஜன.23

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா தமிழர்களுக்காக வழங்கும் நிதியை இலங்கை அரசு தவறாகப் பயன்படுத்த முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகனின் பிறந்த நாளான நேற்றுமுன் தினம் நிருபர்களுக்குப் பேட்டியளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் காங்கிரஸை பலம் வாய்ந்த கட்சியாக மாற்றுவதே எமது முதலாவது பணியாகும். சென்னைக்கு வரும் மத்திய அமைச்சர்கள் சத்திய மூர்த்தி பவனில் தொண்டர்களைச் சந்தித்து கட்சி வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி நெல்லையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். அதன் பின்னர் கட்சியை வலுப்படுத்துவதற்காக மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் செய்யவுள்ளேன். அப்போது அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அங்கு நடைபெறும். அதில் கட்சி வளர்ச்சி குறித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இலங்கையில் வீடுகளை இழந்த தமிழர்களின் பெயர் விவரம் ஐ.நா. சபை மூலம் கணக்கெடுக்கப்படுகிறது.

அவர் தெரிவிக்கும் தகவல்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு வங்கி வழியாக நேரடியாகப் பணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசு இந்திய தமிழர்களுக்காக வழங்கும் நிதியைத் தவறாகப் பயன்படுத்த முடியாது.

இது தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி. விரைவில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு மத்திய அரசு நிரந்தரத் தீர்வுகாணும். - என்றார். (வ)

## சல்மான் ருஷ்டி பொலிஸாருக்குக் கண்டம்



ராஜஸ்தான் மாநில பொலிஸாருக்கு சல்மான் ருஷ்டி கண்டனம் தெரிவித்துள்ளார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப் பூரில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க சல்மான் ருஷ்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி சல்மான் ருஷ்டி இந்தியப் பயணத்தை ரத்துச் செய்தார். ஆனால் மும்பைப் பொலிஸார் சல்மான் ருஷ்டி உயிருக்கு ஆபத்து இல்லை என்று கூறினர். அவர் கூறிய கருத்துக்களையும் மறுத்தனர். இந்த நிலையில் ராஜஸ்தான் மாநில பொலிஸாருக்கு சல்மான் ருஷ்டி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

என்னைக் கொலை செய்ய நடந்த சதித் திட்டத்தை ராஜஸ்தான் மாநில பொலிஸார் கண்டுபிடித்தனர். நான் விசாரித்த வரையில் என்னிடம் பொய் கூறப்பட்டதை உண்மையாகியுள்ளது. இதனால் நான் பொலிஸார் மீது கடும் கோபத்தில் உள்ளேன். இதற்கான உத்தரவுகளை யார் பிறப்பித்தது என்று தெரியவில்லை. - என்றார். (வ)



தை அமாவாசை தினமான நேற்று ராமேஸ்வரம் கோயிலில் முன்னோர்களுக்கு பிதிர்க்கடன் தீர்க்க வந்திருந்த மக்கள்.

## இணையத்தளத் தணிக்கை நீக்கம்

இணையத்தளத் தகவல்களை தணிக்கை செய்யும் திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இணையத்தள தகவல்களுக்குக் கட்டுப்பாடு வேண்டும் என்ற கருத்து மீதான விவாதங்கள் வலுப்பெற்று வரும் நிலையில், அரசு இந்த முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சமயங்களுக்கு இடையே வெறுப்பைத் தூண்டும் வகையிலும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும் தகவல்களை வெளியிட்டதாகக் கூறி கூகுள், யாஹூ, மைக்ரோசாப்ட் உள்ளிட்ட 21 இணையத்தள நிறுவனங்கள் மீது, டில்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு வழக்குத் தொடர்ந்திருந்தது. (வ)

# ஊழல் முறையீட்டிலிருந்து தப்பிக்க கிருஸ்ணா ருத்ர ஜெபம்

கரூர், ஜன.23

தன் மீது சுமத்தப்பட்ட சுரங்க ஊழல் முறைகேட்டு முறைப்பாட்டைத் தகர்த்தெறிய, நெரூர் சதாசிவம் பரமேந்திரள் கோயிலில் ருத்ர ஜெபம் நடத்தத் திட்டமிட்டிருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா திடீரென டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றதால் அவரது கரூர் பயணம் ரத்தானது.

நெரூர் சதாசிவம் பரமேந்திரால் கோயிலில் ருத்ர ஜெபம் நடத்தத் திட்டமிட்டதால் கிருஷ்ணாவின் கரூர் பயணமும் ரத்தானது

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா 1999-2003 ஆம் ஆண்டில் கர்நாடக முதல்வராக இருந்த போது 'பிளாக் லிஸ்டில்' இருந்த பல சுரங்க நிறுவனங்களுக்கு அனுமதி அளித்ததாக கர்நாடக 'லோக் ஆயுக்தா' பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

தன் மீதான வழக்கை ரத்துச்செய்யக் கோரி, கர்நாடக உயர்நீதிமன்றில் மத்திய அமைச்சர் கிருஷ்ணா தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது.

இதற்கிடையே கரூரை அடுத்த நெரூரில் காசி விஸ்வநாதர் கோயிலில் உள்ள சதாசிவம் பரமேந்திராள் அதிஷ்டானத்தில் அவர் நேற்றுமுன்தினம் 'ருத்ர ஜெபம்' நடத்துவதாக இருந்தது. ஆனால், திடீரென அவர் டில்லிக்குப் புறப்பட்டுச் செல்ல நேர்ந்ததால் கிருஷ்ணா அங்கு வர வில்லை.

அவருக்குப் பதிலாக, அவரது உதவியாளர்கள் ருத்ர ஜெபத்தில் பங்கேற்றனர். கர்நாடக மாநிலத்திலிருந்து பழங்கள் மற்றும்



பூஜைக்குத் தேவையான பொருள்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. காசி விஸ்வநாதர் மூலவருக்குப் பின்புறம் அமைந்துள்ள சதாசிவம் பரமேந்திராள் ஜீவசமாதியில், இந்தப் பூஜை நடந்தது.

கிருஷ்ணா வருகையை முன்னிட்டு கரூர் ஆயுதப் படை மைதானத்திலிருந்து நெரூர் வரை 250 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அமைச்சர் வராததால், பாதுகாப்புப் பணிக்கு வந்த பொலிஸார், சுவாமி தரிசனம் செய்து விட்டுச் சென்றனர். (வ)

## பதவி விலகவேண்டும் பா.ஜ.க. வலியுறுத்து

டில்லி, ஜன.23

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மீதான சுரங்க முறைகேடு வழக்கை லோக் அயுக்தா விசாரிக்க கர்நாடக நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதையடுத்து, அவர் பதவி விலகவேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளது.

எஸ்.எம்.கிருஷ்ணா கர்நாடக முதலமைச்சராக இருந்த போது, சுரங்க அனுமதி வழங்குவதில் ஊழல் செய்ததாக எழுந்த முறைப்பாடு குறித்து விசாரிக்க அந்த மாநில லோக்அயுக்தா நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து எஸ்.எம்.கிருஷ்ணா மீது வழக்குப் பதிவு செய்து லோக்அயுத்தா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணைக்கு தடை கோரி கர்நாடக உயர்நீதிமன்றத்தில் எஸ்.எம்.கிருஷ்ணா தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. (வ)

# இராணுவத் தளபதியின் மனு நிராகரிப்பு




வயது விவகாரத்தில் இந்திய அரசுக்கு எதிராக இந்திய இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்தது.

இந்திய தலைமை ராணுவ தளபதியாக பதவி வகித்து வரும் வி.கே.சிங் மெட்ரிகுலேஷன் சான்றிதழில் பிறந்த திகதி 1951 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இராணுவப் பயிற்சிக் கல்லூரிப் பணிக்காக அவர் மத்திய பணிக்குழு தேர்வு எழுதிய போது வி.கே.சிங்கின் பிறந்த திகதி மே மாதம் 10, 1950 ஆம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திகதி யின்படி கணக்கிட்டால் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வி.கே.சிங் ஓய்வு பெற வேண்டும். வயது பிரச்சினையில் கடந்த சில மாதங்களாக அவருக்கும் மத்திய அரசுக்கும் இடையே இழுபறி நிலை நீடித்து வந்தது. இதற்கு தீர்வுவேண்டி இராணுவத் தளபதி வி.கே. சிங் திங்கட்கிழமை உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். ஆனால் மத்திய அரசுக்கு எதிராக இராணுவத் தளபதி வி.கே.சிங் தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.எச்.கபாடியா தலைமையிலான குழு நேற்று முன்தினம் நிராகரிப்புச் செய்தது.

"இது முற்றிலும் ஒரு சேவை சம்பந் தபட்ட விடயம் என்பதால், இந்த வழக்கு ஒரு தவறான முன்னுதாரணமாகி விடும். குழப்பத்தை ஏற்படுத்துவோருக்கு இது ஒரு பொழுது போக்காகி விடும்," என்று உச்சநீதிமன்ற குழு கடுமையான கருத்தை வெளியிட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணுக்கு பெண் சமமே...



■ சந்தியா

காதல் வசப்பட்ட ஆண் ஒருவன் தன் இனிய துணையிடம் ''பெண்ணே உன்னை ஏன் இவ்வளவு அழகுள்ளவளாகக் கடவுள் படைத்திருக்கிறார்?'' என்று கேட்டான். ''அப்போதுதான் உங்களைப் போன்ற ஆண் ஒருவன் என்னைக் காதலிப்பான் என்ற காரணத்தால்'' என்று பதில் சொன்னாள் காதலி. அடுத்த விநாடி ஆணுக்கே உரிய ஆணவத்துடன் ''இவ்வளவு அழகாகப் பெண்ணைப் படைத்தவர் ஏன் இப்படி அடி முட்டாளாகப் படைத்துவிட்டார்?'' என்று கேலி செய்தான். ''நாங்கள் முட்டாள்களாக இருந்தால் தானே உங்களைப் போன்ற ஒருவனையும் பெண்களால் நேசிக்க முடியும்'' என்று பதிலடி கொடுத்தாள் அவள்.

ஒவ்வோர் ஆணும் பெண்ணைவிடத்தான் அதிக அறிவாளி என்கின்ற பெருமிதத்தில் இருக்கிறான். இது உண்மை அல்ல. இது பிழையான புரிதல். எப்போதும் பெண் இதயத்தை முதன்மைப்படுத்தி வாழ்வைச் சாதிக்கிறாள். ஆணோ வாழ்வை ஒரு லாப நஷ்ட வியாபாரம் போலவே கணக்குப் பார்க்கிறான். அந்த அணுகுமுறையை அறிவு என்றும் அறிவித்துக் கொள்கிறான்.

ஒரு புடைவையில் வண்ணம், வேலைப்பாடு, முந்தானை உள்ளிருக்கும் வடிவங்கள் என்று தேடித் தேடிப் பெண் தேர்வு செய்கிறாள். ஆனால் அந்தப் புடைவையின் ஓரத்தில் உள்ள அழகே இல்லாத விலைப் பட்டியலைப் பார்த்தே ஒப்புதல் தருகிறான் ஆண். எனினும் இந்தப் பழக்கங்கள் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்பட வேண்டிய அளவுக்கு மோசமானவை அல்ல. ஆண் இதற்காகப் பெண்ணைக் கேவலப்படுத்தவோ அல்லது பெண் கவலையுறவோ அவசியம் இல்லை. எனவே 'ஆண்' என்ற மிடுக்குடன் பெண்ணை அடிமைப்படுத்த வேண்டியதில்லை. பெண்ணும் அடிமைப்பட்டு வாழ வேண்டும் என்ற அவசியம் இல்லை. எதிலும் ஆணுக்கு நிகராகச் செயற்படத் தயங்கக்கூடாது.

# இது கதையல்ல 9

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



கௌரியும், சங்கரியும் திருமணமாகாமலே கருவுற்று அந்தக் கருவுக்கு காரணமானவர்களைத் திருமணம் செய்ய முடியாது போனவர்கள்தான். ஆனால் இருவரது கதைகளும் வெவ்வேறானவை.

சங்கரி இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாள். இத்தகைய நிலை நம் நாட்டில் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் செய்யாத தவறுக்குத் தண்டிக்கப்படக் கூடாது. அவர்களது, ஒரு பாவமும் அறியாத குழந்தைகள் நல்ல வகையில் வளரவேண்டும் என்று நான் கூறியதை என் மகள் கௌரியின் கதையிடையே சுட்டிக் காட்டியது என்னைச் சிந்திக்கவைத்தது.

சங்கரி போன்றவர்கள் வாழவைக்கப்பட வேண்டும். அல்லது இளம் விதவைகளை மறுமணம் செய்ய இளைஞர்கள் முன்வர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி அவர்களுக்கேற்பட்ட பாதிப்புக்கள், அவர்களுக்கு இருக்கும் பாலியல் உணர்வுகள் போன்றவற்றை விவரிக்கப்போக அது கௌரி போன்றவர்கள் உருவாக உதவுகிறதோ என்ற அச்சம் மனதை வாட்டியது.

நிச்சயமாக இந்த வேறுபாட்டை விஜிதாவுக்கு விளக்க வேண்டிய கடமை எனக்கிருப்பதாக நான் உணர்ந்தேன்.

"சங்கரியக்காவை இழுத்துக் கொண்டுபோன கதையெல்லாம் உனக்குத் தெரிந்ததுதானே விஜி. கௌரியை ஒருத்தரும் அப்படிச் செய்யேல்லைத் தானே?"

"நரேனும் ஏமாத்தித்தானே அவள் இப்படி ஆகிட்டாள்."

என் வாய் மூடும் முன்பே பட்டென்று விஜிதா கேட்டாள்.

''கௌரி மாட்டேனெண்டு சொல்ல நரேன் ஹோட்டலுக்குத் தூக்கிக்கொண்டு போனவனோ?''

என் கேள்விக்கு எதுவும் கூற முடியாமல் விஜிதா அமர்ந்திருந்தாள்.

"உனக்கு நடந்தது தெரியுமோ? கௌரி சொன்னாள். நரேன் சொன்னானாம், தன்னிலை நம்பிக்கையில்லையோ? நம்பிக்கையிருந்தால் என்னோட வா. நம்பாட்டால் இனிமேல் கதைக்கவே மாட்டேன் எண்டு."

"அதுதான் பாவம் அவள் போயிருக்கிறாள். எப்படியோ அவன் திருமணம் கட்டுவானெண்டு தானே அவள் நம்பியிருப்பாள். அவளுக்குப் பின்னாலையே திரிஞ்சவனல்லோ"

விஜிதா கௌரிக்காக உருகிப் பேசுவதைக் கேட்டதும் 'இந்த வயதுப் பிள்ளைகள் பலர் இப்படி யோசனை செய்வதால் தான் இவ்வாறு கெட்டழிகிறார்கள். ஏன் வேறு வகையில் இவர்களின் சிந்தனை செயற்படுவதில்லை? பருவக்கோளாறோ?' என என் மனம் கேட்டுக் கொண்டது.

"என்ன விஜி கதைக்கிறாய்? அவள் காதலிக்க மாட்டாளெண்டு சொன்ன காலம் முழுவதும் பின்னாலை திரிஞ்சவன் அறைக்கு வரமாட்டனெண்டஉடனே கதைக்காமல் விடுவனெண்டால் அவன் சுத்தித்திரிஞ்சது இதுக்காகத்தான் எண்டு விளங்க வேண்டாமே? உண்மையாய்க் காதலிச்சால் இதுக்காக விடுவனோ? கதைக்காமல் இருக்க முடியுமோ? இதை அவள் சிந்திச்சிருக்க வேணும். இப்படிச் சிந்திச்சிருந்தால் உண்மை விளங்கியிருக்கும்."

விஜிதா மீண்டும் மௌனமானாள்.

"அவள் இன்னுமொண்டு செய்து அவன்ரை காதலைப் பரிசோதிச்சுப் பார்த்திருந்தால் தப்பியிருப்பாள்" என நான் கூற அது என்னவென வினாவுவது போல் விஜிதா என்னை நோக்கினாள்.

"கலியாணமான பிறகுதான் தொட்டுப் பழகிறது எண்டதுதான் என்ரை விருப்பம். என்னை நீங்கள் காதலிக்கிறது உண்மையெண்டால் என்ரை விருப்பத்தை நிறைவேற்றவேணும் எண்டு சொல்லியிருக்கலாம். இப்ப விளங்குதுதானே சங்கரிக்கும் கௌரிக்குமுள்ள வித்தியாசம். காதல் அது இதெண்டு கௌரியும் உடன்பட்டுச் செய்த பிழை இது. இதை அவள் தவிர்த்திருக்கலாம். சங்கரியாலை அதைத் தவிர்த்திருக்க முடியாது."


ஆழ்ந்து சிந்தித்தபடியே விஜிதா எழுந்து தன் அறைக்குச் செல்ல ஆயத்தமானாள்.

'இரு விஜி. இப்படிச் சொல்லியும் தப்ப முடி [illegible] வேண் [illegible] நான்

எனது சிந்தனை நீண்டது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைச் சீரழிக்கும் சின்னத் திரையே!



சினிமா சினிமா என்று சிலபேர்
சீரழிந்த கதை எத்தனை எத்தனை
தனி மனிதனுக்காய் தங்கள் வாழ்வையே
தவிடுபொடி யாக்கி விட்டு அலைவர்
சினிமா நடிகனைத் தலைவன் ஆகவே
தினமும் அவரில் பைத்தியம் ஆகுவர்
மனிதனை மாற்றி விட்டது சினிமா
மாறும் உலகின் புதுமை இதுவோ

சினிமா மோகம் சின்னத் திரையாய்
சிறிது சிறிதாய் மாற்றம் கண்டது
வனிதையர் மனதைக் கவர்ந்து இழுத்தது
வாழ்க்கைத் தொடரால் உள்ளம் மகிழ்ந்து
கனிந்து வந்தன காதல் கதைகள்
கவலை தீர்க்க மெகாத்தொடர் பலவும்
இனியது எப்ப தொடங்கும் என்று
ஏங்க வைத்தது பெண்கள் மனதை

பெண்கள் வாழ்வில் பெரிய மாற்றம்
பேணிக் காத்த குடும்ப வாழ்வை
எண்ண எண்ணக் கவலை பெருகுது
ஏதோ புதிய மாற்றம் கண்டது
கணவன் மார்களும் பிள்ளை குட்டியும்
கைவிடப் பட்டனர் பெண்களாலே
பண்பாடு ஒழுக்கம் பஞ்சாய்ப் பறந்தன
பார்க்கும் நாடகம் மனதில் பதிந்தது

நெடுந்தொடர் வந்தது நிம்மதி தொலைந்தது
நெருக்க மான குடும்ப உறவைக்
கெடுக்க வந்தது சின்னத் திரையே
கேளிக் கையானது குடும்ப பாசமே
படுக்கக் கூட நேரம் இல்லை
பகலும் இரவும் நாடக மானது
தடுக்கத் திராணி இல்லாக் கணவர்
தடுமாறிப் போனார்கள் இன்று

மதிய உணவை அவசர மாக
மனதில் நாடக எண்ணத் தோடு
புதிய பாணியில் சமைத்து முடிப்பர்
புத்தி எல்லாம் நாடகத் தொடரில்
எதிலும் நாட்டம் இலாது பெண்கள்
இருக்கிறார் நேரம் பார்த்துப் பார்த்து
அதிலும் அவர்கள் அவசரம் எல்லாம்
இருப்பது இந்த மெகாத் தொடர்தான்

உணவைப் பற்றி அக்கறை இல்லை
உற்ற கணவனைக் கவனிப்பு இல்லை
மணவாழ்வு தானும் மாறி விட்டது
மழலைச் செல்வம் ஆதர வின்றித்
திண்டாடும் நிலை தினமும் நடக்குது
தீரா இந்த நாடகத் தாலே
உண்மையில் இந்த நோயைத் தீர்க்க
உடனடி மருந்து தேவை தானே!

■ கவிஞர்.வ.யோ

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# வியனம் கேட்டீர்களா?

← குளம் வற்றும் என்று காத்து குடல் வற்றும் நிலையில் நாம்.. →

அடுத்த வருசமும் பிறந்திட்டுது. தை பிறந்தால் வழி பிறக்கும் எண்ட நம்பிக்கையோடை வாழ்ந்த எங்கடை சனத்துக்கு இப்ப அந்த நம்பிக்கையெல்லாம் போட்டுது. இப்ப எந்த ரி.வியிலையெண்டாலும் எந்த நாடகத்தை யாவது பாக்கிறது, சாப்பிடுறது, சிவனேயெண்டு போய்ப் படுக்கிறது எண்டு தாங்களும் தங்கடை சோலியுமாய் அதுகள் ஒதுங்கியிருக்குதுகள்.

குண்டு,ஷெல், துப்பாக்கிச் சத்தம் கேக்கேல்லை, அதாலை சனம் சாகேல்லை எண்ட நிம்மதியைத் தவிர அதுகளின்ரை மனத்திலையிருந்து பழைய பயம் மாறேல்லை. இன்னும் கடத்தலுகள், காணாமல் போறதுகள்,மர்ம மரணங்கள்,கொள்ளை, அச்சுறுத்தல் எண்டு அதுகளின்ரை பயந்த வாழ்க்கைக்குத் தீனி போடுற சங்கதியளுக்குக் குறைவில்லை.

என்ரை முத்தத்திலை நிம்மதியாய் இளைப்பாறுவம் எண்ட எதிர்பார்ப் போடை இடம் பெயர்ந்த எத்தினையோசனம் அந்தக் கனவோடை மண்ணுக்கை புதைஞ் சிட்டுதுகள்.வயதுபோன சனங்கள் தாங்கள் இறந்தால் இந்த மரத்தைத்தான் நெஞ்சாங்கட்டையாய் வைக்க வேணுமெண்டு வீட்டு முத்தத்திலை பெரிய பூவரசு மரத்தை நட்டு வைக்கிறது சில கிராமத்திலை நடக்கிற வழக்கமாகும். அப்பிடி நட்ட பலருக்கும் அந்தக் 'கொடுப்பினை' கிடைக்கேல்லை.



பல கிராமங்களை விட்டாலும் இன்னும் விட வேண்டிய இடங்களும் கனக்க இருக்குது.விட்ட கிராமங்களிலையும் சுடலையை விடச் சொல்லி அடிபட வேண்டிக் கிடக்குது. அண் மையிலை ஒரு சுடலையை ஒரு நாள் திறந்து போட்டு இனி வரக் கூடாதெண்டு பெரிய முள்ளுக் கம்பி வேலி போட்டு மூடியாச்சுது. சனங்களைக் குடியமரவிட்ட இடத்திலையே அதுகளின்ரை சுடலையிலை அதுகளைச் சுட வழியில்லை. தகரக் கொட்டிலுகளுக்குள்ளை பனியோடையும், காத்தோடையும்,வெயிலோடையும் மல்லாடி வாழுற சனங்களுக்கு குடிதண்ணீரிலையிருந்து மலசல கூடம் வரையிலை பிரச்சினையள். ஒரு பக்கத்திலை அதுகளுக்குத் தீர்வு வந்தாலும் அதுகள் நிம்மதியாய் வாழ இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ தெரியேல்லை.

இந்த இலச்சணத்திலை தை பிறந்தால் வழி பிறக்கும் எண்டு எப்பிடி நம்புறது? சரி, அரசியலிலை ஏதாச்சும் வருமோ எண்டால் அதுவுமில்லை. குடிகாரன் வீட்டிலை புரியன் பெஞ்சாதி அடிக்கடி சண்டையிட்டுப் பிரியிறதும், சேருறதும் போலை எங்கடை கூட்டமைப்பும் அரசாங்க மும் நடத்திற பேச்சு வார்த்தையும் ஓடிக்கொண்டிருக்குது. தை பிறந்தும் அது தொடரும் எண்டு பாத்தால் தெரிவுக் குழுவுக்குப் பெயர் தந்தாத்தான் நாங்கள் பேச வருவம் எண்டு அரசாங்கம் சண்டித்தனம் காட்டுது. இப்ப பேசிறதுக்கான வாசலுகளும் அரசாங்கத்தாலை அடைச்சாச்சு. அதுவும் சரிதான்! சும்மா ஒப்புலகத்துக்குப் பேசிறதை விடப் பேசாமல் இருக்கலாந்தானே!

அடுத்ததாய் கிருஷ்ணா வந்து போயிருக்கிறார். இவர் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் எண்டதுக்காக தமிழர்கள் சார்பான அனுதாபத்தோடை வந்ததெண்டு சொல்லுறார். இப்பிடித்தான் பாருங்கோ குருஷேத்திர காலத்திலை பாண்டவர் சார்பாய் கிருஷ்ணர் கௌரவரிட்டை இராஜ தந்திரியாய்ப் போனார் . அஸ்தினாபுரத்து மன்னன் துரியோதனன் அவரை வரவேற்று, பிரமாதமான விருந்து தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிச்சு விருந்துண்ண அழைச்சார். அதுக்கு கிருஷ்ணர் மூண்டு காரணங்கள் சொல்லி மறுப்புத் தெரிவிச்சாராம்.

✱ ஒண்டு பாண்டவர்கள் என் மீது பக்தி கொண்டவையள். அவர்களுக்குத் தீங்கு செய்யுற உன்ரை விருந்தை ஏற்க முடியாது.

✱ இரண்டு நீ நீதி தவறி நடக்கிறவன். அதனாலை உன்ரை விருந்தை ஏற்க மாட்டேன்.

✱ மூண்டு நான் இப்ப பாண்டவர்கள் சார்பாய் வந்திருக்கிறன். வந்த வேலைதான் முக்கியம். அதை விட்டிட்டு உன்னோடை விருந்துண்ண மாட்டன்.

எங்கடை கிருஷ்ணா எப்படி நடந்து கொண்டார்? என்னவெல்லாம் சொன்னார்? எண்டு பேப்பரைப் பாத்தால், இந்தியாவும் எங்களுக்குக் கிட்ட இல்லை எண்டது கொஞ்சம் விளங்கும் பாருங்கோ! ஆக, குளம் வத்தும் எண்டு நம்பிக் குடல் வத்தக் காத்திருக்கிற கொக்குகளாய் நாங்கள் இருக்கிறம் எண்ட உண்மைதான், இப்ப பேய்க் காத்தாய் முகத்திலை அறையுது பாருங்கோ!

விழிச்சான் குஞ்சு.

# கலைகளைப் போற்றுவதிலேயே கலைஞர்கள் வளர்ச்சியடைவர்

## கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் தெரிவிப்பு

சுன்னாகம்,ஜன.23

கலை தெய்வீகமயமானது. அதனைப் போற்றுவதையே கலைஞர்கள் தமது கடமையாகக் கொள்ள வேண்டும். மாறாக வித்துவச் செருக்கையோ தொழில் சார்பான பொறாமையையோ கொண்டிருக்கக் கூடாது.

வளரத் துடிக்கும் சமூகமாகிய நாம் இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டாலே வளர்ச்சியடைய முடியும் எனக் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் தெரிவித்தார்.

கொக்குவில் கலாபவன பழைய மாணவர்களும் தற்போதைய மாணவர்களும் இணைந்து முன்னெடுத்த கலாகீர்த்தி சாந்தினி சிவனேசனின் மணிவிழா நிகழ்வுகள் கடந்த 3 ஆம் திகதி கொக்குவில் கலாபவன மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தரும் கலாபவன முன்னாள் மாணவருமாகிய ம.தவேந்திரன் தலைமையில் சிறப்புற இடம் பெற்றன. இதன்போது ஏற்புரை வழங்குகையிலேயே கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கலை என்பது உணர்வின் வெளிப்பாடு. அது உணர்தலை வெளிப்படுத்துவதுடன் பிறருக்கும் அவ்வுணர்வை ஊட்டவல்லது. வாழ்வுடன் இணைந்த நிலையில் கலைகள் பேணப்படுகின்றன. இவற்றுள் நாட்டியக் கலை தெய்வீகக் கலையாகப் போற்றப்படுகின்றது.

நடராசர் கலையின் வடிவமாகக் காட்சி தருகின்றார். பாரதப் பண்பாட்டில் முகிழ்த்தெழுந்தாலும் எமது மண்ணுக்குரிய தனித்துவங்களை வெளிக்காட்டும் வகையில் நாட்டியக் கலையை நாம் பேணி வளர்த்தெடுக்க வேண்டும்.

கலைஞர்களுக்குள் போட்டி நிலைமை ஏற்படலாம். ஆனால் பொறாமை கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பது கலையின் தெய்வீகத்தைக் கேள்விக்குரிய தாக்கிவிடுகின்றது.

வித்துவச் செருக்கும் பிறர் மீது கொள்ளும் பொறாமையும் கலைஞனிடம் ஏற்படுமானால் கலை அவரிடம் தங்காது கலைந்து விடும்.

குரு பக்தியும், செயன்முறைத் தேடலும் பரதக் கலைஞர்களிடம் அவசியம் காணப்பட வேண்டும். வெறும் சான்றிதழைப் பெற்றுவிட்டால் மாத்திரம் ஒருவர் கலைஞராகிவிடமுடியாது.- என்றார்.

கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன் யாழ். மண்ணுக்கு நாட்டியக் கலையை அறிமுகம் செய்த முன்னோடிகளுள் ஒருவராகப் போற்றப்படும் ஏரம்பு சுப்பையாவின் புதல்வி என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (38)

# தொடர்ச்சியான வாசிப்பு நடத்தை மாற்றத்தைத் தரும்

## உதவிக் கல்விப் பணிப்பாளர்

சுன்னாகம்,ஜன.23

தொடர்ச்சியான வாசிப்பு ஒருவரிடத்தில் உணர்வு ரீதியான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும். பண்பட்ட மனிதர்கள் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் உருவாகுவார்கள் என வட மாகாண நூலக மற்றும் தொழி நுட்பக் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன் தெரிவித்தார்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலங்கரை சஞ்சிகை வெளியீடு மற்றும் வாசிப்பு மாதப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாவது.

வாசகர் வட்டத் தலைவி செல்வி ப.ஹீரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மேலும் தெரிவிக்கையில்:-

நூல்கள் புத்தாக்கச் சிந்தனையைத் தூண்டுகின்றன. காலங்காலமாக ஓவியம் வரையும் போது மண்ணிறம்,பச்சை ஆகிய வர்ணங்களைப் பயன்படுத்தியே தென்னை மரம் வரையப்படுகிறது.ஆனால் உண்மையில் தென்னை மரம் அவ்வாறு இருப்பதில்லை. காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் இந்த நிலைமையை யாரும் கேள்வி கேட்பதில்லை. ஆனால் நூல்களை வாசித்து, அவற்றில் முன் வைக்கப்படும் புத்தாக்கக் கருத்துக்களை உள்வாங்குபவர் தானும் புத்தாக்கத்தில் ஈடுபட உந்தப்படுவார். எனவே அத்தகையவரால் மரத்துக்கான வர்ணங்களை மாற்ற முடியும். அவ்வாறே கவிதை, கதைகளையும் புதிய சிந்தனைகளுடன் படைக்க முடியும்.

வாசிப்பு பழக்கத்தைப் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்துவதில் பாடசாலைகள் உயிர்ப்புடன் செயற்பட வேண்டும். இப்பாடசாலை வாசிப்பை முதன்மைப் படுத்தி போட்டிகள் நடத்திப் பிள்ளைகளை ஊக்குவித்ததுடன், பிள்ளைகளின் படைப்பாக்க முயற்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் கலங்கரை சஞ்சிகையை வெளியிட்டமையும் சிறப்பான முன்னெடுப்பாகும். இவை எல்லாப் பாடசாலைகளிலும் இடம் பெறுவது அவசியமாகும்.- என்றார்.

வடமராட்சி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.இ.குட்டித்தம்பி, வடமராட்சி வலய ஆசிரிய வள முகாமையாளர் செல்வி இ.சுப்பிரமணியக்குருக்கள், கல்லூரியின் அதிபர் திருமதிஎல்.என்.ஜோசேப் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (எ-38)

# பொதுக்கூட்டம்

மாந்தைமேற்கு பிரதேச சபையின் 2012 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாதாந்த பொதுக்கூட் டம் கடந்த 17 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மடு உப அலுவலகத்தில் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளர், மடு பிரதேச செயலாளர் மற்றும் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது எதிர்காலத்தில் சபையால் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்தி சம்பந்தமான கருத்துக்களுடன் திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. (எ)

## பாராட்டு

நாவாந்துறை ஜே.85 கிராம சேவையாளர் நாகலிங்கம் சுந்தரராசா ஜனாதிபதி விருது பெற்றதையிட்டு கலாசாரப் பேரவையால் பாராட்டப்பட்டார்.

இந்த பாராட்டு விழா கலாசாரப் பேரவையின் காப்பாளர் கலைஞானி யோசப் பிரான்சிஸ் தலைமையில் நாவாந்துறையில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலைஞர் என்.எம் பாலச்சந்திரன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். மேலும் கலைஞர் லிகோரி யாழ். ரெத்தினாதொம்மை அருள் ஆகியோர் நாட்டுக் கூத்து இசையில் கல்வெட்டு சிந்துகளால் பாராட்டினர். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த மனுவல் பவுலின் பொற்கிளி வழங்கினார்.



சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலைவிழா அண்மையில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் மங்கள விளக்கேற்றுகிறார். தென்மராட்சி பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி [illegible] மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (எ-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:** 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

## கலாமின் ஜனநாயகம்

''உங்களது இலங்கைப் பயணத்தை எதிர்க்கக் கூடிய அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களின் விமர்சனங்களுக்கு நீங்கள் பயப்படுகிறீர்களா?'' இந்தக் கேள்வி இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் கேட்கப்பட்டது. இன்று யாழ்ப்பாணம் வரும் அவரிடம் மூன்று நாள்களின் முன்னர் 'தி ஹிந்து' பத்திரிகை இதனைக் கேட்டது.

''எல்லாச் சமூகங்களிடமும் அமைதி, சமத்துவம், நல்லிணக்கம் என்பவற்றுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் இலங்கைக்குச் செல்கிறேன். நோக்கம் அதுதான் என்றபோதும் அதன் மீது விமர்சனங்கள் இருக்கலாம். ஜனநாயகம் என்பது அதுதானே'' என்று, அந்தக் கேள்விக்கு மிகச் சாதாரணமாகப் பதிலளித்துள்ளார் கலாம்.

ஜனநாயகம் என்பதின் கீழ் எதிர்ப்புக்கள், விமர்சனங்கள் குறித்து அக்கறைப்படவேண்டியதில்லை என்று அவர் அர்த்தப்படுத்தியிருக்கிறார்.

கலாமின் இதே போக்கைத்தான், இலங்கையின் இறுதிப் போரின் போது இந்திய அரசும் கைக்கொண்டது. தமிழகத்தில் எழுந்த எந்த எதிர்ப்பையும் அது கண்டுகொள்ளவில்லை. ஏனெனில் இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அது, சிறுபான்மையாக இருக்கக்கூடியவர்களின் எதிர்ப்புக்கள், விமர்சனகங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதில்லை. எனவேதான் இங்கு ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டபோதும் – செய்மதிகள் வழி இந்தியா அதனைக் கண்காணித்துக் கொண்டிருந்தாலும் – புதுடில்லி அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் ஜனநாயக இந்தியாவுக்கு அந்தப் போர் – இலங்கை அரசு சொன்னது போன்று – ஒரு 'மனிதாபிமான மீட்பு நடவடிக்கை'.

ஒரு விடயம் நடக்கும்போது அதன் நோக்கம் நல்லதுதான் என்று கோஷம் எழுப்பப்படும்போது அதற்கு எதிரான எதிர்ப்புகளை, விமர்சனங்களை ஏன் கண்டுகொள்ள வேண்டும் என்பதுதான் இந்திய ஆளும் வர்க்கம் மற்றும் கலாமின் கேள்வி.

விமர்சிப்பதற்கு எதிர்ப்பவர்களுக்கு ஜனநாயகம் உரிமையை வழங்குகின்ற போதும் அதனைக் கண்டுகொள்ளாமல் விடுவதற்கான உரிமையையும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அதே ஜனநாயகம் வழங்குகிறது என்பதே கலாம் போன்றவர்களின் 'புதிய ஜனநாயக விளக்கம்'.

ஜனநாயகம் என்பது இன்று பலராலும் இப்படித்தான் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. எதிர்ப்புகள் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. ஆட்சி மன்றங்களில் பெரும்பான்மைப் பலம் இருந்தால் மக்களின் எதிர்ப்புக்களைப் புறக்கணித்துவிட்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதே இன்றைய ஜனநாயக அரசுகள் எல்லாவற்றினதும் போக்காகவும் இருக்கிறது. மக்களுக்கான மக்கள் ஆட்சியாக அன்றி பெரும்பான்மை மக்களுக்கான பெரும்பான்மை ஆட்சியாகவே இன்றைய ஜனநாயக அரசுகள் மாறிவிட்டன.

அந்தப் போக்கை ஏற்று, அங்கீகரிப்பது போன்றே கலாமின் கருத்தும் அமைந்துள்ளது.

இலங்கையில் மும்மொழிக் கொள்கையை ஆரம்பித்து வைப்பதற்காகவே கலாம் வந்தார். திட்டத்தின் பயன் பற்றிய வெற்றுக் கோஷங்களை மட்டும் அவர் நம்பினார் என்பதை அவரது ''அமைதி, நல்லிணக்கம், சமத்துவத்தை ஊக்கப்படுத்தவே செல்கிறேன்'' என்ற பதில் உணர்த்துகிறது. மும்மொழிக் கொள்கை இந்த நாட்டின் பிரச்சினைகளுக்கான தீர்வின் அடிப்படையாக அமையும், என்பது கேலிக்கூத்து.

ஏற்கனவே இந்த நாட்டில் இரு மொழிக் கொள்கை இருக்கிறது. பாடசாலைகளில் தாய் மொழியும் ஆங்கிலமும் கட்டாய பாடங்களாக மாணவர்களுக்குக் குறைந்தது 8 வருடங்களுக்குப் போதிக்கப்படுகின்றன. தமிழுக்கும் சிங்களத்துக்கும் இடையிலான வெளியை ஆங்கிலம் நிரப்புமாக இருந்திருந்தால், இன்றைக்கு நிலவுவது போன்று மொழிச் சிக்கல் இனங்களிடையே வளர்ந்திருக்காது; இப்போது மும்மொழிக் கொள்கையும் தேவைப்பட்டிருக்காது. பின்னர் எப்படி தமிழும் சிங்களமும் ஆங்கிலத்துடன் சேர்ந்து அதனைச் சாதித்துவிடப்போகின்றன என்பதை கலாம்தான் புரிய வைக்க வேண்டும்.

# ஜனாதிபதி அளித்த வாக்குறுதி இதய சுத்தமானதுதானா?

தொகுப்பு: கோகுலன்

**நேற்று (22.01.2012) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டிருந்த அரசியல் விமர்சனக் கட்டுரையின் ஒரு பகுதி**

பொங்கல் விழாவை ஜனாதிபதி கொண்டாடிய தினம் திங்கட்கிழமை. ஆனால் இந்துக்கள் அதற்கு முதல்நாள்தான் வேளாண்மை அறுவடை தினமாகக் கொண்டாடி இருந்தார்கள். அடுத்த நாள் மாட்டுப் பொங்கலுக்குரியது. இவ்வாறு பொங்கல் தினத்தை ஜனாதிபதி திங்கட்கிழமை கொண்டாடியதற்குக் காரணம் அன்றைய தினம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா வருகை தரவிருந்தமையே.

அலரிமாளிகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் இந்திய அமைச்சரும் கலந்துகொண்டு சிறப்பித்தார். அவரை அந் நிகழ்விற்கு வரும்படி இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸே அழைப்பு விடுத்திருந்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்ளாமை பளிச்சென்று தெரிந்தது. அவர்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைத் தமிழர்களைவிட இந்திய வம்சாவளி தமிழர் பிரதிநிதிகளே அதிகமாகக் காணப்பட்டனர்.

ஜனாதிபதி வருகை தந்திருந்த விருந்தினர் மத்தியில் சரளமாகக் கலந்து நடமாடினார். அப்போது இந்திய பத்திரிகையாளர் ஒருவர் கிருஷ்ணாவுக்கு ஏதும் வாக்குறுதியை ஜனாதிபதி வழங்குவாரா? என்று கேள்வி கேட்டார். அதற்கு ஜனாதிபதி ''அவர் அப்படி ஒரு வாக்குறுதியைக் கேட்கப் போவதுமில்லை. நானும் வாக்குறுதி எதையும் கொடுக்கப் போவதுமில்லை'' என்று நகைச் சுவையோடு பதிலளித்தார். ஆனால் ஆறு மணி நேரத்துக்குப் பிறகு அந்தப் பகிடியானது நேர்மாறான விதத்தில் முடிவடைந்திருந்தமை தெரிய வந்தது. அது பற்றி கிருஷ்ணா கூறியிருந்தமை வருமாறு:

''இலங்கை அரசானது பல தடவைகளிலும், இலங்கை அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக செயற்படுத்துவதிதன் மூலம் அதன் அடிப்படையில் அரசியல் தீர்வொன்றை நோக்கி நகர்வதற்கான அதன் அர்ப்பணிப்பினை எமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அதன்மீது அர்த்தமுள்ள அதிகாரக் கையளிப்பினை அடைவதற்கும் செயல்படப் போவதாக உறுதியளித்திருக்கிறது. பேச்சுவார்த்தைகள் தொடர்பான செயற்பாடுகள் வேகமாகவும் ஆக்க பூர்வமாகவும் நடைபெற வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அரசுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் உத்தேச நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கருத்துக்களை உள்ளடக்கியதாக ஓர் அரசியல் தீர்வுக்கு இட்டுச் செல்லும் என்று எதிர்பார்க்கின்றோம்''

வெளிநாட்டமைச்சால் நிருபர்களுக்கு அளித்த கருத்துரையின் போது இதனை அவர் கூறியிருந்தார். இலங்கை அமச்சரவையில் இடம்பெற்ற இருதரப்புப் பேச்சுக்களின் பின்னர் நடந்த பத்திரிகையாளர்களுக்கான கூட்டத்தில் கிருஷ்ணா கூறியதாவது:

> ''அந்த வாக்குறுதி ஓர் இறைமையான கருத்தாகும். அந்தக் கருத்து இறைமையுள்ள ஒரு நாட்டின் இறைமையுள்ள அரசின் தலைவரினால் வழங்கப்பட்ட உறுதி மொழி யாகும். மணிக்கூட்டின் ''பென்டுலம்'' போல அங்கு மிங்கும் ஆடிய நிலையில் தான் இந்த முடிவுக்கு அரசு வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இன்று காலை ஜனாதிபதியுடன் நான் விவாதித்தேன். 13 ஆவது திருத்தம் அதற்கு மேலும் செல்வதற்கான தமது நிலைப்பாட்டில் உறுதியாக விருப்பதாக எனக்கு உறுதியளித்தார் என்றார்.

ஒரு பத்திரிகையாளர் கேட்டார், திரு கிருஷ்ணா அவர்களே, 13 ஆவது திருத்தம் அதற்கு மேலாகவும் செல்வதற்கு அவர் உறுதியளித்தார் என்று நீங்கள் கூறுகிறீர்கள், ஆனால் உங்கள் பேச்சின் போது இந்தியத் தரப்பிலும் ஏதும் முன்வைக்கப்படலாம் என்று இலங்கை ஊடகங்களில் எதிர்வு கூறல் பரவியிருந்தது. நான் கேட்க விரும்புவது என்னவென்றால் நேர காலம் தொடர்பாக எதுவும் பேசப்பட்டதா என்பதே''

கிருஷ்ணா கூறினார்; நேர காலம் குறித்து நாங்கள் எதுவும் பேசவில்லை. இந்தப் பிரச்சினையிலுள்ள சிக்கல் காரணமாக ஜனாதிபதிக்கு நேர காலம் குறித்து நான் சொல்வதோ அல்லது அவரிடம் கேட்பதோ நன்றாக இருக்காது. ஜனாதிபதியிடமிருந்தே அவர் 13 ஆவது திருத்தத்தைச் செயல்படுத்துவதில் உறுதியாக இருக்கிறார் என்பதைக் கேட்பதற்கு உற்சாகமாயிருக்கிறது. இந்த நடைமுறை இயற்கையாகவே தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் இதனை விரிவாக விளக்குவாரா என்று ஜீ.எல்.பீரிசிடம் கேட்கப்பட்டது. அவர் கூறியதாவது;

இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியதுபோல் அது ஒரு நடைமுறைதான். அது ஆரம்பிக்கப்பட்டு விட்டது. சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பிரச்சினைகள் தொடர்பான ஆரம்ப விவாதங்கள் தொடங்கியுள்ளன. அவர் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன். பல முன்மொழிவுகள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சில விடயங்களில் இந்த முறை தேவைப்படும் விடயம் இன்னொருமுறை மாறாக இருக்கின்றது. அமுலாக்கத்தில்தான் அழுத்தம் இருக்க வேண்டும் அதனை நோக்கித்தான் நாம் எல்லோரும் முன்னேற வேண்டும்.

சொற்களில் சித்து விளையாடுவதில் திறமைசாலியான பேராசிரியர் பீரிஸ், இரட்டைக் கருத்துக்கு இடமின்றி ''கிருஷ்ணாவின் கருத்துக்களை முழுமையாக அங்கிகரிப்பதாக'' தெரிவித்தார். 13 ஆவது திருத்தம் முழு அளவில் செயற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் அங்கீகரித்துள்ளது மட்டுமல்ல ''பிளஸ்'' என்று குறிக்கப்படுவதான அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளார். ''பிளஸ்'' என்பது இரண்டாவது சபை அல்லது செனட் சபையைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. இந்த யோசனை முதன்முதலில் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஒரு சமயம் இந்தியாவுக்கு இருதரப்பு பேச்சுக்களில் கலந்துகொள்ள சென்றிருந்த போது வெளியிட்டிருந்தார்.

கொழும்பிலும் புதுடில்லியிலுமாக இடம் பெற்ற அந்த மூவர் அடங்கிய பேச்சுவார்த்தைக் குழுவில் பசில் ராஜபக்சவுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் இடம் பெற்றிருந்தனர். கிருஷ்ணா ஜனாதிபதியுடன் அலரிமாளிகையில் நடத்திய பேச்சு வார்த்தையும் மற்றும் வெளியுறவு அமைச்சர் பீரிஸுடன் நடத்திய பேச்சுக்களும் அவரே பின்னர் வெளியிடும் வரையில் இரகசியமாக இருந்தன.

ஜனாதிபதி ராஜபக்ஷ மீண்டும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தையும் அதற்கப்பாலும் சென்று தீர்வு காண்பதற்கு ஆயத்தமாய் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தினார் என்ற விடயத்தை இந்திய அமைச்சர் இலங்கை மண்ணிலேயே வெளியிட்டிருப்பதானது அவர்கள் தரப்பின் சாதகமான ஒரு ராஜதந்திர நடவடிக்கையாகும். இந்தியாவுக்குத் திரும்பிய பின்னர் அதைக் கூறியிருப்பாரானால் தவறாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது என்று வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கலாம்.

அந்த வாக்குறுதி ஓர் இறைமையான கருத்தாகும். அந்தக் கருத்து இறைமையுள்ள ஒரு நாட்டின் இறைமையுள்ள அரசின் தலைவரினால் வழங்கப்பட்ட உறுதி மொழியாகும். மணிக்கூட்டின் ''பென்டுலம்'' போல அங்குமிங்கும் ஆடிய நிலையில்தான் இந்த முடிவுக்கு அரசு வந்துள்ளது. முதலில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை கட்டுப்படுத்திய முறையில் வழங்குவதை எதிர்த்தார்கள். பின்னர் அவைகள் பற்றி ஆலோசிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஒரு வேளை 13 ஆவது திருத்தத்தில் காணப்படும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட சில அம்சங்களை வழங்க முடியாது என்று கிருஷ்ணாவிடம் அரசு விளக்கியிருந்தாலும் அரசாங்கத்தரப்பில் அதனை விளங்கப்படுத்தக் கூடியவர்கள் எவரும் இல்லை.

கிருஷ்ணாவின் பிரகடனம் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அவரது அமைச்சு செயலாளர் கருணதிலக்க ஆகியவர்கள் முன்னிலையிலேயே இடம் பெற்றது. போதாக் குறைக்கு பீரிசும் இலங்கை இந்திய நட்புறவு தொடர்பாக தாங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது நழுவிப் போகக் கூடிய ஒன்றல்ல. குறுகியகாலத்துக் குரியதுமல்ல. அதனைப் பாதுகாத்து

*(18ஆம் பக்கம் பார்க்க).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்துள்ள தமிழர்களும் இலங்கை தலைவர்களின் சித்தாந்தமும்

எஸ்.எம்.கோபலரத்தினம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மீது தான் இப்பொழுது ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்களுக்கு ஆத்திரம் அதிகம். ''இலங்கையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டுமென்று எந்த ஒரு நாடாவது கவலைப்படுமானால் தமது நாடுகளில் தங்கியுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும்'' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.

இதேசமயம் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான கோத்தபாயராஜபக்ச ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றிய போது வெளிநாடுகள் சிலவற்றில் புலம் பெயர் தமிழர்களின் வாக்குகள் ஆட்சிக்கு வருவதற்கும் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்றும் இதனால் புலம்பெயர் தமிழர் வெளிநாடுகள் சிலவற்றின் அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் சக்தியாக விளங்குகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

மொத்தத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிப் பீடம் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மீது கவனம் வைக்கத் தொடங்கி அது வலுப்பெற ஆரம்பித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜனாதிபதி லண்டன் சென்ற போது ஒக்ஸ்போட்டில் உரை நிகழ்த்த முடியாமல் புலம் பெயர் தமிழர் ஆர்ப்பாட்டம் செய்தது முதல் இப்பொழுது காணி, பொலிஸ் அதிகாரங்கள் பற்றிய பிரச்சினை வரை ஆட்சிப்பீடத்திலுள்ளவர்களுக்கு புலம்பெயர் தமிழர் மீது ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழர்களில் புலிகளுக்கு விரோதமானவர்களும் கடும் எதிர்ப்பானவர்களுமாக பலர் இருந்தாலும் கூடப் புலம்பெயர் தமிழர்கள் என்றால் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவானவர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்றே ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்களின் கருத்தாக இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சிலருக்குப் பயப்படுகிறார் போலத் தெரிகிறது. பிரபாகரன் காலத்தில் செயற்பட்டதைப் போன்றே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் செயற்படுகின்றனர்.

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம் பெயர் தமிழர்களாலேயே இயக்கப்படுகிறது. அவர்களுக்கு அமைதியோ அரசியல்த் தீர்வோ தேவையில்லை''

இவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தியாவில் வெளியாகும் 'டெக்கான் குரோனிக் கல்'' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் உதிர்ந்த வார்த்தைகள்.

ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள் யாராக இருந்தாலும் புலம்பெயர் தமிழர்களாகவும் புலம்பெயராத தமிழர்களாக இருந்தாலும் அவர்கள் மீது குற்றச்சாட்டுச் சுமத்தத் தொடங்கினார்கள் என்றால் அவர்கள் அதை நிலை நிறுத்தி பழிவாங்கவே செயல்படுவார்கள்.

> ''அரச பயங்கரவாதத்துக்கும் காடைத்தனத்துக்கும் எதிராக ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் தமது பிரதேசத்துக்கு விடுதலை கிடைத்தாலே தம்மையும் தம் மக்களையும் தம் மண்ணையும் பாதுகாக்கலாம் எனக் கருதினர். ஆயுதம் ஏந்திய குழுக்களுக்குள் கருத்து வேறுபாடுகளும் இந்திய உறவுப் பிரிவின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட வேற்றுமைகளும் விரிவடைந்து மோதல்கள் ஏற்பட்டன.

அது மட்டுமல்ல தாம் சுமத்திய குற்றச்சாட்டுகளை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவும் வழிவகுப்பார்கள்.

சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடங்கிய காலம் முதல் பிரிவினைக்கு எதிரான கட்சி என்பதனை தெளிவாகவே எடுத்துக் கூறிவந்தது. சிறிமா அம்மையார் பிரதம மந்திரியாக 1970 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றபோது இடதுசாரிக்கட்சிகளையும் சேர்த்து ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்திருந்தார். இதற்காக நடந்த தேர்தலில் வாக்களித்தபடி நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணயசபை அமைத்து புதிய குடியரசு அரசியல் அமைப்பு தயாரிக்கப்பட்டது. அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்ட அன்று அதில் கலந்து கொண்ட கட்சித் தலைவர்கள் அல்லது கட்சிகளின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் உரையாற்றினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கலந்து கொண்ட கோப்பாய் பிரதிநிதி தமிழரசுக்கட்சியின் சார்பில் உரை நிகழ்த்துகையில் பிரிவினையைத் தமது கட்சி கடுமையாக எதிர்ப்பதாகச் சொன்னார். இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சியே தங்கள் கொள்கை என்று அவர் தெளிவாகச் சொன்னார்.

சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. இணைப்பாட்சி முறைதான் என்பதை உலக நாடுகள் பலவற்றை உதாரணமாக எடுத்துக் காட்டி தலைவர் தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் முதல் அடிமட்டத் தொண்டர் வரை பொதுக்கூட்டங்கள், மாநாடுகளிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் சபை வரை எடுத்துக் கூறிய போதிலும் நாட்டைப் பிரிக்கத் திட்டமிட்டுச் சதி செய்கிறார்களென்றும் சமஷ்டிப் பிரிவினை வாதிகள் என்றும் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்த பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் டட்லிசேனாநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டி போட்டு இனவாதத்தைப் பரப்பி நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கலகங்களைத் தொடக்கி இன அழிப்புக்கு வழி வகுத்தனர்.

### தந்தை செல்வாவின் உண்ணா விரதம்

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் ஜூன் ஐந்தாம் திகதி கொண்டு வரப்பட்டது. இதற்கு காந்திய வழியில் சாத்விகமாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக நாடாளுமன்றக் கட்டடத்தின் படிக்கட்டுகளில் அன்றைய கூட்டம் முடியும் வரை பட்டினி கிடக்கப் போவதாக அறிவித்து செல்வநாயகம் தலைமையில் 200 கட்சித் தொண்டர்களுடன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காலி முகத் திடலில் இறங்கினர். தந்தை செல்வாவின் அறிவித்தலை ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்ததுடன் பட்டினி கிடக்க வருபவர்களை ஒரு கை பார்த்து விடவும் காடையர்களை ஏற்பாடு செய்தனர்.

சிங்களம் மட்டும் சட்டத்துக்கு ஜனநாயக நீதியாக சில மணி நேரம் நாடாளுமன்றப் படிக்கட்டுகளில் மௌனமாக இருந்து பட்டினிகிடக்கச் சென்ற தமிழ் தலைவர்களும் தொண்டர்களும் ஜனநாயகத்தின் சின்னமாக விளங்கும் நாடாளுமன்றக் கட்டடம் அமைந்த சூழலில் ஜனநாயக ஆட்சியின் பிரதிநிதிகளாக பிரதம மந்திரியும் அமைச்சர்களும் பிரதி நிதிகளும் பார்க்கக் கூடியதாக காடையர்களினால் கல்லாலும் பொல்லாலும் தாக்கிக் காயப்படுத்தப்பட்டனர். இந்த ஜனநாயக விரோத பயங்கரவாதச் செயலை பொலிஸார் கைகட்டி வாய் புதைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். இதில் பொலிஸார் தலையிடக் கூடாதென அரசு உத்தரவிட்டிருந்ததாம்.

காலிமுகத்திடலில் நடந்த இச்சம்பவத்தின் பிரதிபலிப்பாக கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்டிருந்த பெரும்பான்மைச் சிங்களவர்கள் அங்கு சிறுபான்மையிராகக் குடியேற்றப்பட்டிருந்த தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்கள் தேடியிருந்த சொத்துக்களை கொள்ளையடித்தும் சேதப்படுத்தியும் அவர்களை அங்கிருந்து விரட்டியடித்தனர்.

### பேரினவாதிகளின் பயங்கரவாதம்

இது தான் இலங்கையில் தொடங்கிய பயங்கரவாதம். ஆட்சியிலிருந்தவர்களின் ஆதரவில் நடந்த அரச பயங்கரவாதம் என்பதால் அது தேசியத்துக்குள் அடங்கி விட்டது. கல்லோயாவிலிருந்து தமிழர்களை விரட்டியடித்ததால் தென்னிலங்கையிலிருந்தும் தமிழர்களை விரட்டியடிக்கலாமென இனவெறியர்கள் தீர்மானித்தனர். இதனைத் தொடர்ந்து 1958 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் இனக்கலவரம் ஏற்படக் காரணமானது. 1956 கல்லோயாக் கலவரத்தை வைத்து தென்னிலங்கையிலிருந்து தமிழர்களை விரட்டியடிப்பதற்கு ஆட்சிபீடத்திலிருந்தவர்களின் அனுசரணையுடன் தமிழர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டும் தமிழர்கள் கொலை செய்யப்பட்டும் கலவரம் பரவியது.

இதனைத் தொடர்ந்து பன்னீராயிரம் தமிழர் கப்பல்களில் வடக்கே சென்றனர். இதே முறையில் 1977 ஆம் ஆண்டிலும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இடையிடையேயும் தமிழர்கள் தாக்குதலுக்குள்ளானார்கள்.

1974 ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசார் அத்து மீறி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது பேர் மாண்டனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பின்னர்தான் தமிழ் இளைஞர்கள் தங்களையும் தம்மக்களையும் மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதம் ஏந்தத் தொடங்கினர்.

1974 முதல் இலங்கையிலிருந்து தமிழ் இளைஞர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்தியா இவர்களுக்குத் தஞ்சம் அளித்ததுடன் ஆயுதங்கள் வழங்கி பயிற்சியளித்தது. ஆனால் தமிழ் இளைஞர்கள் ஒன்றுசேராமல் பிரித்து வைத்து பயிற்சியும் ஆயுதமும் வழங்கியது.

அரச பயங்கரவாதத்துக்கும் காடைத்தனத்துக்கும் எதிராக ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் தமது பிரதேசத்துக்கு விடுதலை கிடைத்தாலே தம்மையும் தம் மக்களையும் தம் மண்ணையும் பாதுகாக்கலாம் எனக் கருதினர்.

ஆயுதம் ஏந்திய குழுக்களுக்குள் கருத்து வேறுபாடுகளும் இந்திய உறவுப் பிரிவின் செயற்பாடுகளினால் ஏற்பட்ட வேற்றுமைகளும் விரிவடைந்து மோதல்கள் ஏற்பட்டன.

இந்த நிலையில் இளைஞர் பலர் புலம்பெயர்ந்து சென்றனர். புலம்பெயர்ந்து சென்றவர்களில் தமது குடும்ப வாழ்க்கை என்று ஒதுங்கிக் கொண்டவர்களுண்டு. கருத்து வேறுபாடுகளும் இங்கு ஏற்பட்ட மோதல், முறுகல்களும் அதனோடு அங்கேபோய் தொடர்ந்து செயல்படுபவர்களும், காட்டிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள்.

### ஒற்றுமை இல்லாத தமிழ் இனம்

உலகிலேயே எத்தனை அழிவுகள் ஏற்பட்டாலும் எந்த விஷயத்திலும் ஒற்றுமைப்படாமல் பிரிந்து, காட்டிக் கொடுப்பதும் மோதுவதும் நீங்காமல் தொடரும் ஒரே இனம் தமிழினம் மட்டுமே என்பது உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மீது ஜனாதிபதி மகிந்தவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் வெளிப் படையாகத் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாக்கவும் விழிப்புடனிருக்கவும் எச்சரிப்பதாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

இணைப்பாட்சி எப்படிப் பிரிவினை வாதமாக்கப்பட்டதோ தற்காப்புக்காக ஏந்திய ஆயுதம் எப்படி பயங்கரவாதமானதோ அதேபோல் தமிழர்களின் செயற்பாடுகளும் அந்த நாடுகளில் எதிர்வினைகளாக்கப்படக்கூடும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

இதில் சிங்களத் தலைமைகள் சிறந்த ராஜதந்திரிகளாக செயல்படுகின்றனர் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

தந்தை செல்வா தலைமையில் காந்திய வழியில் சாத்விகப் போராட்டம் நடந்த காலத்திலேயே நிராயுதபாணிகளான தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்து சிறையிலடைத்து சித்திரவதை செய்தனர்.

தமது பிள்ளைகள் காரணமில்லாமல் கைதாவதைத் தவிர்ப்பதற்காக பெற்றோர் பலர், தமது பிள்ளைகள் தொல்லையில்லாமல் வெளிநாடுகளுக்குப் போய் தப்பிப் பிழைக்கட்டும் என்று புலம்பெயர்ந்து செல்வதற்கு வழி வகுத்தனர்.

சாத்வீக போராட்ட காலத்தில் ஆயுதம் ஏந்த நினைக்காமல் ஆர்ப்பாட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொண்டவர்கள் கூட கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குள்ளாகினர். இவர்கள் தப்பிவந்ததும் இவர்களையும் பெற்றோர் பாதுகாப்புக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

போராளிக் குழுக்கள் தமது இயக்கத்துக்கு ஆள் திரட்டிய போது அதிலிருந்தும் தம் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கும் பெற்றோர் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினர்.

சிங்களச் சட்டத்தினால் அரச வேலை கிடைப்பதற்கு வாய்ப்பில்லாதவர்களும், படித்த இளைஞர்களும் குடியேற்றத்தில் மிளகாய், வெங்காயம், உளுந்து, பயறு ஆகிய உணவுத் தானியங்களை உற்பத்தி செய்து வருமானம் பெற்ற இளைஞர்கள் என்றும் பெரேரா விதித்த உணவு தானிய இறக்குமதித் தடையை லலித் அத்துலத் முதலி அமைச்சராகப் பொறுப்பேற்றதும் தோட்டச் செய்கையில் வருமானம் இழந்த படித்த இளைஞர்களும் வெளிநாடு சென்றனர்.

உள்நாட்டில் சிறுதொழில்கள், சிறு வியாபாரம் செய்த இளைஞர்களும் உழைப்புக்காகவும், குடும்பத்தைப் பராமரிப்பதற்காகவும் புலம் பெயர்ந்து சென்ற இளைஞர்களும் உள்ளனர்.

இப்படிப் புலம்பெயர்ந்து சென்றவர்கள் எல்லோரையும் புலம் பெயர்ந்துள்ள புலிகள் கூட்டமைப்புக்கு வழிகாட்டுகிறார்கள் என்று ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்கள் முத்திரை குத்துகிறார்கள்.

இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு தேடி நாட்டில் ஒற்றுமையையும் அமைதியையும் காண வேண்டுமென்று ஆட்சி அதிகாரமுள்ளவர்கள் உண்மையிலேயே கருதி வழி தேடினால் புலம் பெயர்ந்தவர்கள் மீதோ உள் நாட்டிலுள்ளவர்கள் மீதோ வீண் பழிசுமத்த அவசியமிருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயத் தொண்டன் அனுமன்

தன்னம்பிக்கை வேறு. ஆணவம் வேறு. பலர் இதை தவறாகப் புரிந்து தாமும் குழப்பிக் கொண்டு பிறரையும் குழப்பி இருக்கிறார்கள். அதாவது தன்னம்பிக்கை உள்ளவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பது தவறு என்று நாத்திகர்கள் நினைக்கிறார்கள். ஒருவன் தன்னம்பிக்கையுடனும், அதே சமயம் கடவுள் நம்பிக்கையுடனும் வாழ முடியும் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆணவம் உள்ளவர்கள்தான் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள். இந்த நுட்பத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

''என்னால் பல காரியங்களைச் செய்ய முடியும். எவர் உதவியும் தயவும் இன்றி ஆயிரக்கணக்கான செயல்களைத் தவறின்றிச் செய்ய முடியும்''. ''இப்படி வாழ்வது தன்னம்பிக்கை. ஆனால் என்னால் என்னைச் செய்ய முடியுமா? என்னை என் தாய் தகப்பன் தான் செய்தார்கள். அவர்களிடம் யாரோ கொடுத்த பஞ்ச பூதங்களையும் உயிரையும் கொண்டு என்னை உருவாக்கினார்கள் என்னால் செய்ய முடியாது. அது கடவளால் மட்டுமே முடியும்'' என்கிற போது அங்குதான் கடவுள் நம்பிக்கை உருவாகிறது.

என்னால் பலகாரியங்களைச் செய்ய முடிவது தன்னம்பிக்கை. என்னால் என்னைச் செய்ய முடியாது. அது பெற்றோரால் நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் அறிவு காரணமாக உண்டாவது கடவுள் நம்பிக்கை. எனவே இரண்டு நம்பிக்கையும் அவசியம் என்பதே இங்கு உணரப்பட வேண்டியது.

தன்னம்பிக்கை தாரம் மாதிரி. கடவுள் நம்பிக்கை தாய் மாதிரி. இரண்டோடும் இருப்பதுதான் சரியான வாழ்க்கை. தன்னம்பிக்கை ஆணவமாகி கடவுள் எதிர்ப்பு என்ற பிதற்றலாக மாறுகிறபோது தாரத்திற்காகத் தாயைக் கொல்கின்ற பாதகர்களாக நாம் மாறுகிறோம். நாம் செய்ய வேண்டிய வேலையைக் கூடச் செய்யாமல் கடவுள் செய்யட்டும் என்றும் சோம்பிக் கிடப்பது கட்டிய மனைவியைக் கட்டிலில் பட்டினி போடும் அலித்தனம். பேடித்தனம். எனவே தன்னம்பிக்கை, கடவுள் நம்பிக்கை என்ற இரண்டும் அவசியம் என்கிறேன்.

தன்னம்பிக்கை உடல் மாதிரி. கடவுள் நம்பிக்கை உயிர் மாதிரி. எந்த எல்லைவரை தன்னம்பிக்கை இருக்கலாம். எந்த எல்லையில் அது கடவுள் நம்பிக்கையாக மாறவேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்டால் நமது வாழ்க்கை இனிமையாகவும் இருக்கும், விவேகமாகவும் இருக்கும். இதற்கு மிகச் சரியான உதாரணம் அனுமன்.

அவனால் முடிந்த எல்லாவற்றையும் அவன் செய்தான். முடியாத போது ராமநாமத்தின் மூலம் செய்து முடிக்கிறான். அது மட்டுமல்ல அந்தத் தலைவன் மீது அளவு கடந்த பக்தி விசுவாசத்துடன் தன் வாழ்வை அமைத்துக் கொள்கிறான் என்கிற அர்ப்பணிப்பு அவனிடம் அபரிமிதமாக இருக்கிறது....! ஓர் உதாரணக் கதை உண்டு.

வடநாட்டில் அனுமன் கோயில்களில் சிலை முழுவதும் செந்தூரம் என்கிற சிவப்பு நிறம் பூசப்பட்டிருக்கும். பக்தர்கள் அதைத் தொட்டு நெற்றியில் இட்டுக்கொள்வார்கள். போர்க்களத்தில் இராமனுக்காகப் போர் செய்தபோது ஏற்பட்ட ரத்தப் பெருக்கு அது. அவனது தியாகத்தைக் கொண்டாடும் வகையில் அந்த ரத்தம் செந்தூரமாக மதிக்கப்படுகிறது என்பார்கள்.

அதைவிட சுவாரஸ்யமான கதை ஒன்றும் சொல்வதுண்டு. இராமனுடைய வெற்றிச் செய்தியை சிறையில் இருந்த சீதையிடம் சொல்லப் போனார் ஆஞ்சநேயர். பிராட்டி தலையில் நேர்வகிடு எடுத்துச் சுமங்கலிப் பெண்கள் பாணியில் நெற்றியின் நடுவில் செந்தூரம் வைத்திருந்தாள். இதுவரை அப்படிப் பார்த்திராத அனுமார் ''ஆகா பிராட்டிக்கு ஏதோ ரத்தக் காயம்'' என்று பதறிப்போய் விசாரித்தாராம்.

சுமங்கலிகள் செந்தூரத்தை நெற்றியில் இப்படி இட்டுக் கொண்டால் அவர்களது தலைவனுக்கு (கணவனுக்கு) வெற்றி உண்டாகும் என்று கூறினாள் பிராட்டி. இராமனது வெற்றிக்காகத்தான் செந்தூர் திலகம் இட்டுக் கொண்டதை விளக்கி, அது இரத்தமல்ல என்று புரியவைக்க செந்தூரத்தையும் அனுமன் கையில் கொடுத்தாராம் சீதை.


''இவ்வளவு குறைவாக நெற்றியில் வைத்தாலேயே தலைவனுக்கு நல்லது என்றால் என் தலைவன் இராமன் நன்மைக்காக என் உடம்பெல்லாம் பூசிக் கொள்வேன்'' என்று அனுமார் உடல் முழுவதும் செந்தூரம் அப்பிக்கொண்டார் என்பார்கள். தலைவன் மீது அன்பு அப்படியல்லவா இருக்க வேண்டும்.

இன்று பல தொண்டர்கள் தலைவர் பின்னால் போவது எதற்காக? பின்னால் போனால்தான் தலைவரை அறியாமல் கவிழ்க்க முடியும் என்கிறார்கள். இராமனைப் போலத் தலைவனும், அனுமனைப் போலத் தொண்டனும் அமைந்தால் நாட்டுக்கு நல்லது.



சுகி. சிவம்

# பசுவின் களைப்பை போக்கிய சத்திரச்சந்தி



''வந்தாரை வாழ வைத்த மண் எங்கள் மண்'' என்பதை எடுத்துக் காட்டுவதற்கு யாழ். மாவட்டத்தில் பாரம்பரியமாக பல்வேறு இடங்கள் பழைமை தாங்கியதாகவும் குறித்த இடத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாகவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பாதுகாக்கப்பட்டுவரும் இடங்கள் இன்று எமது யாழ். மண்ணின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதாகவும் வெளிமாவட்டங்களில் இருந்து வருவோரை ஒரு தடவை நின்று பார்க்கச் செய்யும் இடமாகவும் திகழ்ந்து வருகின்றன.

இவ்வாறான இடங்கள் இன்று கட்டடங்களாலும் மாறுபட்ட வடிவங்களாலும் தோற்றம் அளித்தாலும் அதன் ஞாபகங்களை எடுத்துக்கூறுவதற்கு மரபுவழி வந்தவர்களும் சமயப் பெரியார்களும், சமூக ஆர்வலர்களும் அளப்பரிய சேவையை வழங்கி வருகின்றனர்.

அந்தவகையில் யாழ்.நகரின் மையப் பகுதியில் யாழ்.மத்திய சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ளது ''சத்திரச் சந்தி''. கே.கே.எஸ். வீதிக்கும் யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இந்த வீதியின் பெயரே இன்று மறந்துபோய் விட்டது.

சமயப் பெரியார்களையும், ஞானிகளையும் உருவாக்கிய பெருமை யாழ். மண்ணுக்கு உரித்தான ஒன்றாக உள்ளது. அத்துடன் அவர்களின் சேவைகளையும் ஞாபகங்களையும் பறைசாற்றும் முகமாக அவர்களால் பூஜிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்டுவந்த எமக்காக விட்டுச்சென்ற பாரம்பரியமான சொத்துக்களை அழிய விட்டுக்கொண்டு கைகட்டி நிற்கின்றோம்.

சமுதாய வளர்ச்சி என்பது நாகரிக மாற்றத்தாலும் பண்பாடுகளாலும் வளர்ச்சியடைந்து கொண்டு சென்றாலும் எமக்கான பாரம்பரியங்கள் இருக்கப்போவது எமது பழைமை என்பதை நாம் மறந்துவிட முடியாது.

> வெறும் ஆறறிவு உயிரினம் மட்டும் ஆறுதல் அடைய வேண்டும் என்று கடையிற் சுவாமிகள் நினைக்கவில்லை. ஐந்தறிவு உடைய உயிரினமும் ஆறுதல் பெறவேண்டும் என்று நினைத்தார்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த கடையிற் சுவாமிகள் தனது வாழ்க்கைக் காலத்தில் இந்து மதத்தின் வளர்ச்சிக்காகவும் ஐந்தறிவுகொண்ட உயிரினங்களுக்கும் சேவையாற்றி இறைவனிடம் ஒன்றாகக் கலந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தன் வாழ்நாளில் சேவை வழங்கும் போது இந்த ''சத்திரச் சந்தி'' மிகவும் பிரபல்யமாக இருந்தது. அந்தவகையில் நூற்றாண்டு காலங்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்துக்குப் படையெடுக்கும் வணிகர்கள், நோயாளிகள், உல்லாசப் பயணிகள் என அனைவரது பயணக் களைப்பையும் போக்கும் ஓர் இடமாக இந்தச் சத்திரச் சந்தி காணப்பட்டதால் கடையிற் சுவாமிகளின் சேவை இந்த இடத்துக்கும் கிடைக்கப்பெற்றது.

கடையிற் சுவாமிகள் வெறும் ஆறறிவு உயிரினம் மட்டும் ஆறுதல் அடையவேண்டும் என்று நினைக்கவில்லை. ஐந்தறிவு உடைய உயிரினமும் ஆறுதல் பெறவேண்டும் என்று நினைத்தார். இதன் பயனாக இந்தச் சத்திரச் சந்தியில் மக்களால் ஒரு வைரவர் வைத்து வணங்கப்பட்டு, நிழல் தரும் அரச மரமும் இருந்தபடியால் ஓர் ஆலயமாக வழிபாடு செய்யப்பட்டு வந்தது.

குறிப்பாகப் பிரதேச மக்களால் இந்த ஆலயம் பூஜிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. யாழ் மண்ணுக்கு வந்தோர் தமது களைப்பைப் போக்கவும் ஆறுதல் கிடைக்கும் இடமாகவும் இந்த இடத்தை வழிபாடு செய்து வந்தனர்.

இதன் ஞாபகச் சின்னங்களாக இந்தச் சந்தியில் இன்னும் தண்ணீர் தொட்டி, மாடு உரசிக்கல் என்பன காணப்படுகின்றன.

ஏனெனில் புங்குடுதீவு, நயினாதீவு போன்ற தீவகப் பிரதேசங்களிலும் வெளி மாவட்டங்களிலும் இருந்து வரும் வணிகர்கள் தமது பொருள்களை பாதுகாப்பாக அந்த இடத்தில் வைத்துவிட்டு அங்கு கிடைக்கும் தண்ணீர் தொட்டியில் தண்ணீர் குடித்து பயணக்களைப்பைப் போக்கியதாகவும் முன்னோர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை அலைந்து திரியும் பசுக்கன்றுகள், பசுக்கள் அங்கு கிடக்கும் தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் குடித்துவிட்டு அருகில் இருக்கும் மாடு உரசிக்கல்லில் வாயைத் துடைத்துவிட்டு சூலத்துடன் இருக்கும் அரச மரத்துக்குக் கீழே படுத்துவிடும் என்றும் வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இதனை ஞாபகப்படுத்தும் முகமாகவே இன்று அதே இடத்தில் சேவை வழங்கி வருகின்றது பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம்.

''கோமாதா எங்கள் குலமாதா'' எனும் பாடல் வரிகள் பசுவின் முக்கியத்துவத்தையும் புனிதத் தன்மையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்து மதத்துக்கென ஒரு தனிக் கோட்பாடே அமைந்துள்ளது. அதன் வழிபாட்டுத் தன்மை உண்ணும் உணவுகள் யாவும் இறைவன் விரும்பக்கூடியதாகவும் உடல் புனிதத்துடனும் உளம் சந்தோசமாகவும் நல்ல சிந்தனைகளுடனும் இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றது.

அந்தவகையில் ''மாமிசம் உண்பவன் அரக்கனுக்குச் சமமாவான்'' என்பதை இந்த இணையம் எடுத்துக்கூறி வருகின்றது. குறிப்பாக பசுக்களைக் கொல்வதை எதிர்த்தும் அதனைப் பாதுகாத்து அதன் எச்சங்கள் மூலம் விபூதி தயாரிக்கும் பணியைச் செய்து வருகின்றது.

**சோபனா**

தைப்பொங்கல் தமிழர்களின் பண்டிகை. இது சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகக் கொண்டாடப்படுகிறது. அதனைப்போல் பசுக்களுக்கென மாட்டுப் பொங்கல் அன்று மாபெரும் விழாவினைச் சிறப்பாகச் செய்து வருகின்றது இந்த இணையம்.

யாழ்.நகரில் வீதிவலமாக அண்மையில் நடந்த மாட்டுப்பொங்கல் தினத்தன்று கோமாதா உற்சவம் எனும் விழாவை இந்த இணையமே ஏற்பாடு செய்திருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை மிரட்டல் கும்பல் சிக்கியது

கொழும்பு,ஜன.23

மாத்தறை பிரதேசத்தில் இயங்கிவந்த நிதி நிறுவனம் ஒன்றின் முகாமையாளரிடம் கப்பம் கோரிய எட்டுப் பேர் அடங்கிய குழு ஒன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையின் இரு அதிகாரிகளும் இந்தக் குழுவில் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிதி நிறுவனத்தின் முகாமையாளர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இந்த முகாமையாளருக்கு சந்தேகநபர்கள் தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்து கப்பம் கோரியுள்ளனர்.

இது போன்று கப்பம் கோரப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை தமக்கு அறியத்தருமாறு பொலிஸார் பொதுமக்களை கோரியுள்ளனர். (ச)

# தபால் தொழிற்சங்கம் இன்று சத்தியாக்கிரகம்

கொழும்பு,ஜன.23

கோரிக்கைகள் பலவற்றை முன்வைத்து தபால் தொழிற்சங்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

இன்று திங்கட்கிழமை தபால் தலைமையகத்துக்கு முன்பாக இந்த சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்படும் என்று தபால் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

தபால் மா அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள போதும் தொடர்ந்தும் அவர் தபால் மா அதிபராக செயற்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறுவனத்தை பாதுகாப்பதன் பொருட்டு தாம் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த கோரிக்கைகளை நிராகரித்து செயற்படுவதால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இன்று நண்பகல் 12 மணிக்கு சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பித்து பின்னர் நடைபயணமாகச் சென்று ஜனாதிபதி அலுவலகத்தில் மனு ஒன்றை கையளிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

> நிறுவனத்தை பாதுகாப்பதன் பொருட்டு தாம் தொடர்ச்சியாக முன்வைத்து வந்த கோரிக்கைகளை நிராகரித்து செயற்படுவதால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக தபால் தொழிற் சங்க ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் சிந்தக்க பண்டார குறிப்பிட்டுள்ளார்.



புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெற்றுவந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பில் வைத்து பெற்றோர்களிடம் ஒப்படைக் கப்பட்டனர்.

# போர் விமானங்களை தரமுயர்த்துகிறது இலங்கை

கொழும்பு,ஜன.23

இலங்கை விமானப் படையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று போர் விமானங்களை 6 மில்லியன் டொலர் செலவில் இலங்கை அரசு தரமுயர்த்தவுள்ளது.

கே-8 ரகத்தைச் சேர்ந்த மூன்று போர் விமானங்களே முதற்கட்டமாக தரமுயர்த்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் தேசிய வான் தொழில்நுட்ப ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள விமானங்களைத் தரமுயர்த்தும் உடன்பாட்டுக்காக 6 மில்லியன் 40 ஆயிரத்து 300 டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை கடந்த மாதம் இலங்கை அமைச்சரவை வழங்கியுள்ளது.

ஏனைய நாடுகளால் போர் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் கே-8 போர் விமானங்களை இலங்கை விமானப்படை விமானிகளுக்குப் பயிற்சி வழங்கவே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வெளிநாட்டவர்களை வெளியேறுமாறு உத்தரவு

கொழும்பு,ஜன.23

இலங்கையில் தங்கியிருந்து இஸ்லாம் பற்றி பிரசாரம் செய்துவரும் 161 வெளிநாட்டவர்களைநாட்டில் இருந்து வெளியேறுமாறு குடிவரவு கட்டுப்பாட்டாளர் சூலாநந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர்கள் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக வந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இவர்கள் நாடுமுழுவதும் சென்று இஸ்லாம் பற்றி போதனை செய்து வருகின்றனர். இவர்கள் விசா சட்டங்களை மீறி செயற்படுவதாக கூறியே நாட்டில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நபர்கள் சுற்றுலாவுக்கு இலங்கைக்கு வந்துள்ள நிலையில் வேறு விடயங்களில் ஈடுபடமுடியாது என்று என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# ஜயவர்த்தன பல்கலை. மீண்டும் இன்று திறப்பு

கொழும்பு,ஜன.23

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களும் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் மாணவ பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் பல்கலைக் கழகத்தை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பெற்றோல் குண்டொன்று வீசப்பட்ட பின்னர் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் இந்தப் பல்கலைக்கழகம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# உப பொலிஸ் பரிசோதகர் சேவையில்

கொழும்பு,ஜன.23

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 50 உப பொலிஸ் பரிசோதகர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த பயிலுனர் உப பொலிஸ் பரிசோதகர்கள் நாளைமறுதினம் புதன் கிழமை முதல் களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்றுக்கொள்வர்.

தெரிவு செய்யப்பட்டவர்களில் 31 பேர் வட மாகாணத்தைச் சேர்ந்தவர் எனவும் 19 பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓராண்டு கால பயிற்சியின் பின்னர் இந்த இளைஞர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தபால் கட்டண உயர்வு குறித்த அறிக்கை தயார்

கொழும்பு,ஜன.23

தேசிய தபால் கட்டண உயர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அது தொடர்பிலான பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அறிக்கை தபால் சேவைகள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாக தபால்மா அதிபர் திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த விசேட குழுவில் தபால் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பேர் அங்கத்துவம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தொழு நோயால் சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு,ஜன.23

நாட்டில் பரவிவரும் தொழு நோயால் பாதிக்கப்படுவோரில் 9 சதவீத மானோர் 15 வயதுக்கும் குறைவானவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசியவலயத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் தொழு நோயால் பாதிக்கப்படும் 10 சதவீத மானோரின் வியாதி வெளியில் தெரிவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தொழு நோய்க்கு உள்ளான 30 வீதமானோர் முழுமையாக சிகிச்சைப் பெற்றுக் கொள்ளாததால் அது மற்றையவர்களுக்கும் பரவுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோய்க்குள்ளான 56 சதவீதமானோர் நோய் ஏற்பட்டு 6 மாதங்களின் பின்னரே சிகிச்சை பெற வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதற்கு காரணம் நோய் மற்றும் நோய் அறிகுறி குறித்து மக்களுக்கு தெளிவின்மை காணப்படுதலே என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொழு நோய் குறித்து பொதுமக்களை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது. (ச)

> தொழு நோய்க்கு உள்ளான 30 வீத மானோர் முழுமையாக சிகிச்சைப் பெற்றுக்கொள்ளாததால் அது மற்றையவர்களுக்கும் பரவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 30 வயதுக்கு மேற்பட்டோரே பாடசாலை வானுக்கு சாரதி

கொழும்பு,ஜன.23

கொழும்பு மாநகரின் பிரதான பாடசாலைகளுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களை செலுத்துவதற்காக 30 வயதை கடந்த சாரதிகளை மாத்திரம் பயன்படுத்துவதற்கு வாகன உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டது என்று கொழும்பு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சில் வாகன உரிமையாளர்கள் சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்டனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதனைத் தவிர குறைந்த பட்சம் ஐந்து வருட அனுபவமுள்ள சாரதிகளை மாத்திரம் பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடுத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இளங்ககோனின் ஆலோசனைக்கு அமைய இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார். பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகள் ஒழுக்கமிகு ஆடைகளை அணிந்து சேவையில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (ச)

# செனட் சபையில் புத்தி ஜீவிகளே அங்கம் வகிப்பு

கொழும்பு,ஜன.23

அரசின் உத்தேச செனட் சபையில் புத்திஜீவிகளுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டமைப்பை அவ்வாறே பேணும் அதேவேளை, புத்திஜீவிகளை உள்ளடக்கி செனட் சபை அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

செனட் சபை குறித்து நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பேச்சுகளின் இறுதியில் செனட் சபை அமைப்பது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விப் பத்திரம் கோரல்

NELSIP செயல் திட்டத்தின் கீழ் வட மாகணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் வேலைகளினை மேற்பார்வை செய்யும் பொருட்டு ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்த கூறு விலை கோரப்படுகின்றது. இங்கு கூறப்பட்டிருக்கும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

அ) திணைக்களத்தின் நிரந்தரப் பாவனைக்கான குறைந்தது சாரி செய்யக்கூடிய 6 ஆசனங்களைக் கொண்டதும் குளிரூட்டல் வசதிகளைக் கொண்டதுமான வான் (VAN) ரக வாகனம்.

ஆ) எரிபொருள், சாரதி, சேர்விஸ், பூரணகாப்புறுதி மற்றும் வாகன திருத்தங்கள் உள்ளடங்கலாக கூறுவிலை.

இ) 2009 ஆம் ஆண்டுக்கு பிந்திய பதிவினையுடைய வாகனங்கள் விரும்பத்தக்கது.

ஈ) செயல்திட்ட நடவடிக்கைகளுக்கு ஓடிய கிலோ மீற்றர் அடிப்படையில் மாதாந்தம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படும்.

உ) ஒரு வாகனம் நிரந்தர நாளாந்த பாவனைக்காக வழங்கப்பட வேண்டும்.

இறுதியாக வாகனம் ஓடிய கிலோ மீற்றர் 50,000 ற்கு குறைவாக இருத்தல் விரும்பத்தக்கது. மாதாந்தம் 1500 கிலோ மீற்றருக்கு உட்பட்டது ரூபா........................ மாதாந்தம் 1500 கிலோ மீற் றருக்கு 2500 கிலோ மீற்றருக்கும் இடைப்பட்டது ரூபா.............................. மேலதிகமாக ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் ரூபா............. ........

குறிப்பு:- தேவை ஏற்படும் போது மேலதிக வாகனம் மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் தங்களால் வழங்கப்பட வேண்டும்.

1)இக்கூறுவிலைக்கெனத் தயாரிக்கப்பட்ட கூறுவிலை கோரும் விண்ணப்பப்படிவங்களை ரூபா 500/= செலுத்தி எமது திணைக்களத்தில் 2012.02.03 ஆம் திகதி வரையில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

2)மூடிய கூறுவிலைகள் 2012.02.08 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை எமது அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். தபால் மூலம் அனுப்புவதற்கு திணைக்கள முகவரியை பயன்படுத்துவதுடன் கடித உறையில்'வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை'' எனக் குறிப்பிடப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3)கூறுவிலைகள் 2012.02.08 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பதாரர்களது பிரசன்னம் எதிர் பார்க்கப்படுகின்றது.

கு.விக்ரர் ஜெயசிங்கம்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்
முல்லைத்தீவு.
T.P:-O24 324 8225

அலுவலக முகவரி:- பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு.

(சி-8035)

**கிருஷ்ணாவுக்கான....**

*(14ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வளர்ப்பதிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறிவைத் துள்ளார்.

2010 ஆம் ஆண்டிலும் இந்த சந்தர் ப்பத்திலும் அவர் வருகை தொடர்பாக இரு விடயங்கள் என்னைக் கவர்ந்துள்ளன. இந்த முறை குறுகிய காலத்தில் பல விடயங்களை அவர் கையாண்டுள்ளார். அவை மிகவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளன. சுதந்திர புரட்சியொன்றை கிருஷ்ணா நிகழ்த்தி முடித்துள்ளது மட்டுமல்ல அவரது வருகை மிகவும் பயனுள்ளதாக இருந்துள்ளது என்ற வகையில் பீரிஸின் பாராட்டுதலையும் பெற்று திரும்பியுள்ளார்.

கிருஷ்ணா உள்நாட்டில் இருக்கையிலேயே அவரது கருத்து வெளிப்பாட்டுக்கு ஜனாதிபதியின் பிரதிபலிப்பொன்று வெளியாயிற்று. திருமணவைபவமொன்றில் யு.என்.பி தலைவர்களில் ஒருவரான கரு ஜயசூரியாவுடன் பேசிக்கொண்டிருந்த போது கிருஷ்ணாவை சந்தித்தது தொடர்பாக ஜனாதிபதி அவரிடம் கூறினார். 13 ஆவது திருத்தத்தை செயற்படுத்துவதற்கு தாம் ஒப்புக்கொண்டிருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி பிளஸ் என்று குறிப்பிடப்பட்டது செனட் சபையாகும். அது பற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. 13 ஆவது திருத்தத்தின் கீழ் வரும் பொலிஸ் அதிகாரங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம் என்றார்.

வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வரும் பொலிஸ் அதிகாரங்களாவன நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஆலோசனையின்றி சாத்தியமாகாது என்பதாகும். நிச்சயமாக கிருஷ்ணா தமது பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்த கருத்துக்கு முற்றிலும் மாறானதாகும்.

**ஒத்துமாறல்** வவுனியா நகருக்கு அண்மையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு IT அல்லது ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் ஒத்துமாற விரும்புகிறார். பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0771880631,0215219794

## காணி விற்பனைக்கு

*றக்கா வீதியில் 1 ¾ பரப்பு, கிணறு, தென்னைமரங்களுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.*

தொடர்பு:
0773604636

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் விஞ்ஞான பாட வளவாளரும் யா/ தவாடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியருமாகிய

**சிவஞானசுந்தரம் கணேசகுமார்**

அவர்கள் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராக வலிகாமம் கல்வி வலயத்துக்குப் பதவி உயர்வு பெற்றுச் சென்றமையையிட்டு மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை,
கொக்குவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 17.12.2011 அன்று ஜோன். டி.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற்ற அரச விருது வழங்கும் விழாவில் வில்லிசைத் துறையில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்ட மதிப்புக்குரிய

**இராசையா ஸ்ரீதரன்**

அவர்கள் மேலும் பல விருதுகளையும் சிறப்புக்களையும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
கலாபூஷணம் க.சுந்தரலிங்கம்

122/18, 4ஆம் ஒழுங்கை,
ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம்.

(13407)

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி கோருதல்

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்
யாழ்ப்பாணம்

**பிரதம எந்திரி அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வவுனியாவின் பாவனைக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டுக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினை பெற்று 2012.01.31 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

எந்திரி செ.மோகனதேவன்,
தலைவர்,
பெறுகைக் குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம்,
இல.40, றக்கா லேன்
யாழ்ப்பாணம்,
தொ.பே. இலக்கங்கள் : 021 3202638, 021 222 8091

(சி8025)

## 26 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் கந்தையா இராசதுரை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**மலர்வு: 12-12-1926**
**உதிர்வு: 20 -12-1985**

அப்பா உமைப்பிரிந்து
ஆண்டுகள் இருபத்தாறு ஆகுமுன்பே
பாசமுள்ள மூத்த புதல்வனையும் துணைக்காய்
பாரிலிருந்து அழைத்தீர்களே..!

## 45 ஆம் நாள் நினைவலைகள்



**அமரர் இராசதுரை சுகுமார்**

(பாபு)

**மலர்வு: 07-01-1955**
**உதிர்வு: 10 -12-2011**

அண்ணாவே!
ஊமையாய் வாழ்ந்திட முடியுமா.....?
உணர்வுகளை எரித்திட்டு வாழ்ந்தாயோ!
பாவிகளின் பாவத்தைப் பெற்றதனால்
பரலோகம் போகும் வரை நீயமைதி காத்தாயோ!

**உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.**

'கணேச வாசம்',
கொடிகாமம்.

(13404)

என்றும்
உன் அம்மா, உடன் பிறப்புகள்

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்
23 - 06 - 1980



ஆண்டவன் அடியில்
23 - 01 - 2010

**இராசையா சுதாகரன் (மாஸ்ரர்)**

அன்பின் சுடராய்
அருளின் இருப்பிடமாய்
என் உள்ளத்தில் வீற்றிருக்கும் அன்பு மகனே!
ஆண்டுகள் இரண்டு போனாலும்
ஆறிடுமோ என் மனம்
நீ இல்லாத வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா
துன்பக் கடலில் மூழ்கியே
துவண்டு துடிக்கின்றேன்
என் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்!

151 Glebe Court
Mitcham London Rd.
Cr - 43 Nusurrey
T.P.: 0031643690179

(13402)

உன் பிரிவுத் துயரில் வாடும்:
அம்மா ராதாம்பிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக்கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# தற்செயல் நிவாரண உதவிக் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜன23

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தற்செயல் நிவாரண உதவிகோரி விண்ணப்பித்தவர்களில் ஒன்பது பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவுத் தொகையாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

இதற்கான காசோலையை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் உரிய பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அவிக்கப்பட்டுள்ளது.

மாணிக்கம் செல்வராசா (வெள்ளாம் போக்கட்டி), வெள்ளையன் மகேஸ்வரன் (கரம் பைக் குறிச்சி மேற்கு), உதயகுமார் உதயதீபன் (கரம் பைக்குறிச்சி மேற்கு), வேலுப்பிள்ளை நாகம்மா (கரம்பைக் குறிச்சி மேற்கு), சின்னத்துரை பரிமளா (கரம்பைக் குறிச்சி மேற்கு), ஜெயக் குமார் சாந்தி (உதயநகர், கைதடி), தர்மகுலசிங்கம் புஷ்பமலர் (மட்டுவில் கிழக்கு), சின்னத்தம்பி கணேஸ்வரன் (மீசாலை கிழக்கு), சங்கர் வினுஜா (கச்சாய் தெற்கு) ஆகிய பயனாளிகளுக்கே மேற்படி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(வ-207)

# தமிழினத்தின் அழிப்பை சான்று பகரும் நினைவிடம்

## கனேடியத் தமிழர் தேசிய அவையினர் திட்டம்

தமிழர் இன அழிப்பை சான்று கூறும் நினைவு மண்டபத்தை அமைப்பதற்கான திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கனேடியத் தமிழர் தேசிய அவையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கனேடியத் தமிழர் தேசிய அவையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

ஈழத்தில் வரலாற்று விழுமியங்கள் முற்று முழுதாக சீரழிக்கப்படுகின்ற இந்தக் கொடுமையான காலப் பகுதியில், அதனைத் தடுக்க வேண்டிய கட்டாயத்தில் புலம் பெயர் தமிழர்களாகிய நாம் இருக்கின்றோம்.

இந்த வேலைத் திட்டத்தின் அங்கமாக தமிழர் கலாச்சார நினைவு மண்டபத்தை கனடாவில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தமி ழர்கள்செறிவாகவாழும்ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிறிய கலாசார நினைவு மண்டபங்களையும் அமைக்கவுள்ளோம்.

எமது மக்கள் அனைவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி, எமது வரலாற்றுச் சின்னங்களையும், அதை காக்க உயிர் நீத்த எம் இனிய உறவுகளை நினைவு கூறும் நினைவாலயமாக இந்தத் திட்டம் அமையப் பெறவிருக்கின்றது. எதிர்காலத்தில், தமிழர் கலை, கலாசாரத்தைப் பேணும் காப்பிடமாக இந்த மண்டபம் இருக்கும். இதன் மூலம், எம்மவர் நிகழ்வுகளை பாரம்பரிய முறைப்படி நடத்தும் ஓரிடமாக இந்த கலாச்சர மண்டபம் திகழும்.

இந்த மண்டபத்தின் ஆக்கப்பணிகளும், நிர்வாக அமைப்பும் ஒவ்வொரு தமிழர்களும் அறிந்து கொள்ளத் தக்க வகையில் வெளிப்படையான முறையில் நிர்வகிக்கப்படும். இந்த உயரிய திட்டம், எம் பெரும்பாலான உறுப்பினர்களால் ஜனநாயக முறைப்படி அங்கீகரிக்கப்பட்டு, இதற்கான முதற்கட்டப் பணிகளும்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்க உங்கள் அனைவரினதும், உயரிய பங்களிப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம். தமிழர்களாகிய எமது கலாச்சார மண்டபத்துக்கான உங்கள்அனைத்து பங்களிப்புக்களையும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# மயானத்தை புனரமைக்க கோரிக்கை

மந்திகை, ஜன.23

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சுருக்கம்பன் மயானம் பற்றைக் காடாக காட்சி தருகின்றது. இந்த மயானம் நீண்டகாலமாக எந்த வித புனரமைப்பும் இன்றி பற்றைக் காடாகமாறியுள்ளது. எனவே குறித்த மயானத்தில் விரைவாக துப்புரவுப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-237)

# உயர்தரப் பெறுபேறுகள்

## இடைக்காடு மகா வித்தியாலயம்

**கணிதப் பிரிவு**

பரமேஸ்வரன் கிரிதாஸ்- ஏ2பி, நடராசா சாருசன் -பி2சி,

**உயிரியல் பிரிவு**

மகேந்திரன் பொன்வேல்-பி2சி, தில்லைநாதன் தினேஸ்குமார்- பிசிஎஸ்,

**கலைப்பிரிவு**

திவ்வியா சிவனேசன்- ஏசிஎஸ், கலைச்செல்வி தங்கவேல்- பி2சி, ஜெயக்கொடி ஜெயசுஜீபன்- 3பி, சுயாதிகா அப்புத்துரை- 2பிசி, வனிதா பரமேஸ்வரன்-பி2சி. (வ)

# கட்டாக்காலிகளால் தொல்லை

தென்மராட்சி,ஜன.23

சாவகச்சேரி நகர்ப் பகுதிப் பொதுச்சந்தை மற்றும் வீதிகளில் கட்டாக் காலி நாய்களால்பொது மக்கள்பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் நகரசபை உறுப்பினர்களால் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கூட்டத்தில் முன்மொழியப்பட்டது.

மஹிந்த சிந்தனையின் பிரகாரம் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகள் கடந்த நான்கு வருடங்களாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தச் சுற்றறிக்கை தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக பத்திரிகையில் செய்திகள் வெளியாகியுள்ளதால் புதிய சுற்றறிக்கை வந்ததும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள செயலாளர் க.புத்திசிகாமணி சபை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

புதிய சுற்றறிக்கை கிடைத்ததும் நிலையான நடவடிக்கை மேற்கொள்வதென சபையினால் தீர்மானிக்கப்பட்டது. (வ-207 )

# வீதி புனரமைப்பு

நவாலி, ஜன.23

பண்டத்தரிப்பு பட்டினத்துக்கு உட்பட்ட உந்து பாலக் கட்டை வீதி, பொருளாதார அமைச்சின் நிதி உதவியுடன் நெப்சிப் திட்டத் தினால் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள் ளன.

இதற்கு அந்தப்பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ-100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரைத் திடீரென பார்க்க நேரிடலாம். விசேட நிகழ்ச்சிகளில், இறைவழிபாடுகளில் கலந்து கொள்ளலாம். உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசும் நபர்களை அடையாளம் காண்பீர்கள். நீண்ட நாள்களாக மறைத்து வைத்திருந்த ரகசியம் ஒன்றை வெளிப்படுத்துவீர்கள்.

**இடபம்:** உறவினர்கள் அல்லது பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்க முற்பட்டு அவர்கள் இல்லாமல் திரும்ப நேரிடலாம். செய்ய மறந்த வேலை ஒன்றால் அவதிகளுக்கு ஆள்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப்போக்கு சொல்லிச் சமாளிக்கலாம். எங்காவது வெளியில் செல்லும் போது சரியான நேரத்துக்கு பஸ் கிடைக்காமல் அவதிப்படலாம்

**மிதுனம்:** தேவையற்ற செலவுகளைக் குறைக்க வேண்டிய நாள். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உங்களின் குடும்பப் பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். உறவின்ர்கள் அல்லது நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகலாம்.

**கடகம்:** மற்றவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். குழந்தைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். எதிலும் அவசரப்படாமல் நல்லவர்களின் யோசனைகளைக் கேட்டுச் செயற்படுவது நல்லது. தேக ஆரோக்கிய விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நினைத்தது நடக்கும்.

**சிங்கம்:** உங்களைப் பற்றி மறைமுகமாக விமர்சிப்பவர்களை அறிந்து கொள்வீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். இதுவரை கண்டு கொள்ளாமல் இருந்த சிலர் இப்போது உங்களின் உதவி நாடி வரலாம். பெருமைக்காக சில செலவுகளைச் செய்வீர்கள். இறை வழிபாடுகளில், ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும்.

**கன்னி:** வேண்டா வெறுப்பாகச் சில வேலைகளைச் செய்வீர்கள். பழைய விடயங்களை அசைபோட்டுப் பார்த்து புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். உறவினர்கள் சிலரின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம்.

**துலாம்:** இனம்புரியாத சந்தோஷம் மனதில் குடிகொள்ளும் நாள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலைகளை நீங்கள் வெற்றிகரமாகச் செய்வீர்கள். புதிய காரியம் ஒன்றில் இறங்க முற்படுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். நேரம், காலம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். பெண்களால் நன்மை உண்டு.

**விருச்சிகம்:** அயலாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க நேரிடலாம். சிலர் கேட்ட பண உதவிகளைச் செய்ய முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். திட்டமிட்ட வேலை ஒன்றில் திடீரென மாற்றம் செய்யலாம்.

**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். பதற்றம் இருந்தாலும், சில வேலைகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உறவுப் பெண்கள் வழியில் சிறு உதவிகள் கிடைத்து பெருமைப்படுவீர்கள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்வீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள்.

**மகரம்:** நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். தேக ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் இருக்க கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். நீங்கள் செய்த தவறு ஒன்றை மறைக்க மற்றவர்களிடம் சண்டை போடுவீர்கள். உங்களின் உறவினர் அல்லது நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுடன் முக்கிய விடயமாகப் பேசலாம்.

**கும்பம்:** சுறுசுறுப்பு, உற்சாகமாகச் செயற்படும் நாள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சக ஊழியர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சண்டை போட்ட ஒருவருடன் சமாதானமாகச் செல்வீர்கள். வாகனங்களில் செல்லும்போது வேகத்தைத் தவிர்க்கவும்.

**மீனம்:** பல நாள்களாக நடக்காமல் இருந்த காரியம் ஒன்று, இன்று திடீரென நடக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனைகளைக் கேட்டுச் செயற்படுவர். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். மலைபோல் வந்த பிரச்சினை பனி போல விலகி விடும்.

**நாளை**

தை 10 செவ்வாய்க்கிழமை 24.01.2012
திதி: பிரதமை பி.ப. 01.20 வரை
நட்சத்திரம்: திருவோணம் பி.ப. 04.29 வரை
சுபநேரம்: 11.06 - 12.36 வரை,
ராகு காலம்: 03.36- 05.06 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 5 | 3 | | 1 | | 9 | |
| 1 | 3 | 6 | | | | | | 7 |
| | | | | 6 | | 3 | | 5 |
| | | | 5 | | | 9 | 3 | |
| | 8 | | 9 | 4 | 7 | | 2 | |
| | 5 | 4 | | | 3 | | | |
| 2 | | 8 | | 7 | | | | |
| 3 | | | | | | 8 | 5 | 2 |
| | 4 | | 8 | | 2 | 7 | | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ASIAN UNIVERSITY FOR WOMEN

The Asian University for Women, located in Chittagong, Bangladesh, is a unique institution of higher learning offering an innovative curriculum combining the best of the liberal arts tradition with professional training. The Office of Admissions at AUW seeks promising, talented and dynamic students from South and South East Asia who aim to make a difference.

**Eligibility Criteria**

- Be a female between the ages of 17-21 years
- Have completed GCE Advanced Level
- Receive an average of 60% equivalent grades in her final examinations and she should pass both English and mathematics (minimum scores of 60%) exams in her Ordinary Level Examination.
- Have demonstrate leadership potential, commitment, and the ability to work for positive social change

Applicants will be evaluated for admission based on the entrance exam, personal interview, academic achievement, community commitment and leadership intent.

While all applicants are initially considered for the undergraduate program, if a promising applicant's performance on the entrance exam shows the need for additional academic preparation, she will be admitted to the Access Academy. Access Academy Program is One year pre-university program which is designed to build and develop the requisite English, Mathematics, and Computer skills in young women so that they are adequately prepared for AUW's Undergraduate Program.

AUW offers Bachelor of Arts (BA) or Bachelor of Sciences (BS) degrees in the following Concentrations

1. Politics, Philosophy and Economics
2. Environmental Sciences
3. Public Health Studies
4. Biological Sciences
5. Asian Studies

AUW is on track to be accredited by the New England Association of /schools & colleges, who also accredits Harvard and many other major universities in the United States.

AUW prepares the students to apply and compete for scholarships to the best graduate programs around the world in Public Health (MPH) if they choose either Public Health Studies or Biology as their majors.

**Application forms may be obtained from the recruitment coordinator Prof.A.Navaratnarajah**
Vice Chairman
Sewa Lanka Foundation
432 A, 1st Floor, Colombo Road,
Boralesgamuwa
Tel: 0113166334,0113166335 Mobile: 0777739261
Fax: 0112516240Email:anavaloga22@gmail.com

**For more information**
Director of admissions
20/ A M M Ali Road
Chittagong, Bangladesh
Tel: +880.31.2854980
Fax: +880.31.2854988
Web: http://asian-university.org

**For more information/ forms: http://asian-university.org**
**Applications are due on 29th of February 2012**
*We encourage you to consider the Asian University for Women for your higher studies and discover your potential at this exciting new educational institution!*

பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்





தெல்லிப்பழைப் பிரதேச செயலராக அரும்பெரும் சேவையாற்றி
சண்டிலிப்பாய் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் செல்லும்
**சுப்பிரமணியம் முரளிதரன்**
அவர்கள் மாவிட்டபுரம் J/231 உயர் பாதுகாப்பு வலய மக்களை மீளக்குடியமர்த்தும் செயற்பாட்டிலும், இப் பிரிவுக்கான கிராம அலுவலகம் அமைக்கும் செயற்பாட்டிலும் மிகவும் அக்கறையோடு செயற்பட்டவர். மக்களுடன் அன்பாகப் பேசி சேவையாற்றி எல்லோரது மனதிலும் இடம் பிடித்தவர். அவரது சேவையை மனதாரப்பாராட்டி வாழ்த்தி எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்
சண்டிலிப்பாய் பிரதேச செயலராக அரும் பணியாற்றி
தெல்லிப்பழைப் பிரதேச செயலராக சேவையாற்ற வந்துள்ள
**திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம்**
அவர்களை வருக வருக என வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இப் பிரிவின் வளர்ச்சிக்காக இவரது சேவையை தொடர்ந்து எதிர்பார்க்கும்
J/ 231 மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,
மாவைக்கந்தன் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்
மாவை பாரதி சனசமூக நிலையம்
மாவை மத்திய சனசமூக நிலையம்

வாழ்த்துக்கள் என்றென்றும்



கலாபூசணம் **வல்லிபுரம் செல்லத்துரை**
எமது கலைமன்றத்தின் ஸ்தாபகரும், பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசார பேரவை உறுப்பினருமான திரு. வல்லிபுரம் செல்லத்துரை ஐயா அவர்கள் 2011ஆம் ஆண்டுக்கான கலாபூசணம் விருது பெற்றதையிட்டு பெருமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து கலைப்பணியாற்ற இறையருள் வேண்டும்.
பச்சிலைப்பள்ளி, பளை.
கலைமகள் கலைமன்றமும் புலோப்பளை மக்களும்
(6-7-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 463 பயனாளிகளுக்கு ரூபா 41.15 மில்லியன்

### வாழ்வாதார கடன் வழங்கும் இந்தியன் வங்கி

யாழ்ப்பாணம்,ஜன.23

இரண்டு ஆண்டுகளை இலக்காக வைத்து 463 பயனாளிகளுக்கு 41.15 மில்லியன் ரூபா வாழ்வாதாரக் கடன் உதவியை இந்தியன் வங்கியின் யாழ். கிளை வழங்கவுள்ளது.

இதன் முதற் கட்டமாக வட்டு.மேற்கு கிராமத்தில் 101 பயனாளிகளுக்கு 7.64 மில்லியன் ரூபாவை வாழ்வாதாரக் கடனாக வழங்கியுள்ளது-என்று இந்தியன் வங்கியின் யாழ்.கிளை சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் யாழ்.கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் முன்மாதிரிக் கிராம அபிவிருத்தித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று சனிக்கிழமை கிளை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கவுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

சமூகத்தில் பொருளாதாரத்தை மேம்படச் செய்யும் நோக்குடன் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

கல்வி, வீடு, சுகாதாரம் இதர தேவைகளை இலக்கு வைத்து இரண்டு ஆண்டுகளுக்கிடையில் ஓர் மாதிரிக் கிராமத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

விவசாயிகளின் பயிர் வளர்ப்பு, நல்லிணக்க உற்பத்தி, நவீன விவசாய வளர்ச்சி போன்றவற்றை ஊக்குவிக்க 3ஆண்டுகளை இலக்கு வைத்து கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் குறித்த கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து பல சீரிய சுயதொழில் வேலை வாய்ப்புக்களும் வழங்கப் படவுள்ளன.

இந்தியாவில் 105 வருடங்களும் இலங்கையில் 80 வருடங்களும் சேவை வழங்கும் இந்தியன் வங்கி மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தை ஏனைய பிரதேசங்களிலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார். (ம-313)

## அச்சுவேலி முழங்கன் மயானத்தில் கொட்டப்படும் கழிவுகளால் சிரமம்

அச்சுவேலி,ஜன.23

அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்தில் பொலிதீன் கழிவுகள், பழைய பொருள்கள், தகரங்கள், போத்தல் ஓடுகள் கணிசமான அளவு கொட்டப்பட்டு சிதறப்பட்டு இருப்பதால் இறுதிக்கிரியைகளுக்கு செல்லும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

டெங்கு ஒழிப்பு தொடர்பான கழிவுகளை அப்புறப் படுத்துவதற்கு முழங்கன் பகுதியும் குறித்து ஒதுக்கப்பட்ட பகுதியாக வலி. கிழக்கு பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொதுமக்கள் சிலர் தனிப்பட்ட முறையில் கழிவுப்பொருள்களைக் கொண்டு சென்று இறுதிக்கிரியை நடைபெறும் பகுதியில் கொட்டியுள்ளனர். அவை காற்றால் சிதறுண்டும் கட்டாக்காலி நாய்களால் இழுத்துச் செல்லப்பட்டு மயானப்பகுதி முழுவதும் சிதறப்பட்டுள்ளது.

**புனிதமான இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட்டுவதால் அந்தப்பகுதிகள் அசிங்கமாகி வருகின்றன.**

புனிதமான இடமாக இருக்க வேண்டிய மயானங்கள் கழிவுப்பொருள்களால் அசிங்கப் பட்டிருப்பது தொடர்பாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். இந்த விடயத்தில் பிரதேச சபை நிர்வாகம் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதோடு மயானங்களை உரிய முறையில் பேணிப் பராமரிக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (ம-11)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 23

வேலணைப் பிரதேச சபையின் 6ஆவது மாதாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபையின் தலைவர் சி.தவராசா தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் ஆளணி உருவாக்கம், நெல்சிப் அபிவிருத்தித்திட்டம், வீதிப் புனரமைப்பு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பன குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## மூக்குக் கண்ணாடிக் கொள்வனவில் கட்டாயப்படுத்தப்படும் நோயாளிகள்

### வர்த்தக சங்கக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் கண் வைத்தியர்களில் சிலர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நோயாளிகளுக்கு கண் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் தனிப்பட்ட மற்றும் தங்களுடைய வர்த்தக நிறுவனங்களில் கண்ணாடி மற்றும் கண்ணாடிவில்லைகளை கொள்வனவு செய்யுமாறு கட்டாயப் படுத்துவதாக கண் சிகிச்சை பெறச் செல்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அரச மற்றும் பொதுச் சேவைக்கு அப்பால் சுயலாபத்துக்காக தொழில் புரியும் இந்தச் செயற்பாட்டால் குடாநாட்டு கண்ணாடி மற்றும் கண்ணாடி வில்லைகளின் வர்த்தகர்களின் வியாபாரம் பாதிப்படைந்துள்ளதுடன் கண் சிகிச்சை பெறச் செல்லும் வசதி குறைந்தவர்களும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த மூக்குக் கண்ணாடி வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களினால் யாழ்.வர்த்தக சங்கத்துக்கு வழங்கிய முறைப்பாட்டை அடுத்து கண்ணாடி விற்பனையாளர்களுக்கான கலந்துரையாடல் சனிக்கிழமை யாழ்.வர்த்தக நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த காலங்களைவிட அண்மைக் காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் கண் பரிசோதகர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கண் பரிசோதனைகளின் பின்னர் தங்களுடைய விருப்பத்துக்குரிய வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தங்களுடைய வர்த்தக நிறுவனங்களின் அறிமுக அட்டைகளை மருந்துச் சிட்டையுடன் இணைத்து கண்ணாடிகள் மற்றும் கண்ணாடி வில்லைகளை வாங்கும்படி நோயாளிகளைக் கட்டாயப் படுத்தி அனுப்புகிறார்கள். அத்துடன் வேறு இடங்களில் பொருள்களை வாங்கினால் அடுத்த சிகிச்சைக்கு அனுமதிக்க மாட்டோம் என கூறிவிடுகிறார்கள்.இந்தச் செயற்பாட்டால் குடாநாட்டு மூக்குக் கண்ணாடி மற்றும் கண்ணாடி வில்லைகளின் வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணாடிகளை தரமானதாகவும் குறைந்த விலையிலும் விற்பனை செய்ய முன்வந்துள்ள கண்ணாடி விற்பனை நிலையங்கள் உள்ளபோதும் அரச உத்தியோகத்தர்களின் இத்தகைய செயற்பாட்டால் நோயாளிகள் அதிக விலை கொடுத்து குறிக்கப்பட்ட கடைகளில் கண்ணாடிகளை வாங்குகின்றனர். இதை தாம் கண்டறிந்துள்ளதாக குடாநாட்டு கண்ணாடி விற்பனை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் தெரிவிக்கும்போது:

சில கண் வைத்தியர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இந்தச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும். நோயாளிகள் தமது விருப்பத்துக்கு ஏற்றாற்போல் வெளி இடங்களில் பொருள்களை வாங்க அனுமதிக்க வேண்டும்.

இது தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம். பணிப்பாளர் உடனடி நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு முறைப்பாடுகள் வழங்கவுள்ளோம்-என்றார். (ம-313)

கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் (26.01.2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு:-

நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை,நல்லூர், யாழ். 021-2226944

நல்லூர் பாம் சென்றர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077-6225944

சுட்டி பாம் சென்றர், வட்டுக்கோட்டை. 077-8996085

(39-13302)

HSBC Galle Literary Festival 2012

Galle Literary Festival

Which brings in world famous authors for a literary fiesta in Galle takes a fresh direction in the extension of its programme to Jaffna.

With the support of Magic, Cargills it conducts a Teacher Training (TOT) workshop by popular authors, Jeeva Raghunath (India) on story telling Performance and Robert Crowther (UK) on Pop-up paper engineering for the selected teachers by the Provincial Ministry of Education.

**Venue:- Jaffna Collage Institute of Technology, Vaddukoddai.**

**Date:- 23rd January and 24th January, 2012.**

**Time:- From 1.30pm-5.00pm**

It also conducts a children's programme at Jaffna College on 24th January from 8.30 am to 12.30pm.

GLF - " The most companionable of all festivals"

Miss. Riophilla Alfred.
The Co - ordinator,
GLF- Jaffna Programme.
(0778575216)

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.பாலசிங்கம் குணபாலன்

(ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்-முல்லைத்தீவு)

எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றி முல்லைத்தீவு கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வுபெற்றுச் செல்லும் பாலசிங்கம் குணபாலன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
மு/உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், அளம்பில், முல்லைத்தீவு.

(39-சி/8054)

பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.கந்தசாமி அஜந்தன் (B.A)

(ஆசிரியர் மு/உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்)

அவர்கள் 21.11.2011 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற கந்தசாமி அஜந்தன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவர் பல பட்டங்களைப்பெற இறைஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
மு/உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், அளம்பில், முல்லைத்தீவு.

(39-சி/8054)

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

10 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் UK 625/= Germany 710/= France 765/=

மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பொதிகளை உங்கள் வீட்டிலிருந்தவாறே அனுப்பிக்கொள்ளலாம்.

குறிப்பு :- 25Kg - 100 Kg வரையான பொதிகளுக்கு 550/= மட்டுமே

சகல நாடுகளிற்குமான விமான பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

இல.1 பிறவுன் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்

Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் குண்டுவெடிப்பு சந்தேகநபருக்கு சிவப்பு அறிவிப்பு

மாலைதீவில் குண்டை வெடிக்கச் செய்து விட்டு இலங்கையில் தலை மறைவாகியிருந்தவருக்கு சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாலைதீவில் குண்டு ஒன்றை வெடிக்க வைத்து விட்டு, இலங்கைக்குச் சென்று தலைமறைவாகியிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட மாலைதீவு நபர் சர்வதேசப் பொலிஸாரால் சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக என்று குற்றப் புலனாய்வு பிரிவினர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து தமது வாதங்களை முன்வைத்த குற்றப் புலனாய்வு பிரிவினர், சந்தேக நபர் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெறவுள்ளதாகத் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணையின் போது, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாலைதீவு நபரான அமீன் மொஹமட் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் தொடர்ந்து தமது கருத்துக்களை முன்வைத்த குற்றப்புலனாய்வு பிரிவினர், சந்தேக நபர் கடந்த ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி பயாகல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகவும் சந்தேக நபர் தொடர்பில் மாலைத்தீவு பொலிஸாரிடம் இருந்து மேலதிக அறிக்கையைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபர் பயங்கரவாத செயற்பாடுகள் தொடர்பில் சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டு வருபவர் என்றும் அவருக்கு எதிராக சர்வதேச பொலிஸ் தலைமையகம் சிவப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதால், அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் புலனாய்வுப் பிரிவினர் கேட்டுக்கொண்டனர்.

முன்வைக்கப்பட்ட வாதங்களை கவனத்தில் கொண்ட நீதவான் ரஷ்மி சிங்கப்புலி, சந்தேக நபரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் சந்தேக நபர் தொடர்பாக மேற்கொண்டு வரும் விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

## ச.ச. நிலையத்துக்கு சபைச் செலவில் பத்திரிகை

தென்மராட்சி, ஜன.23

சாவகச்சேரி நகரசபைத் தொழிலாளர் குடியிருப்பில் அமைந்துள்ள உதயசூரியன் சனசமூக நிலையத்துக்கு சபையின் செலவில் புதினப் பத்திரிகையை தினசரி கொள்வனவு செய்துவழங்குவதென நகர சபையால் தீர்மானிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட இந்த சனசமூக நிலையத்துக்கு நீண்டகாலமாக தினசரி பத்திரிகைகள் நகர சபை யால் வழங்கப்பட்டு வந்த தாக வும், 2000 ஆம் ஆண்டு யுத்த வேளையில் நிலையக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்து நகர சபையினரால் புனரமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தவிசாளர் இ.தேவ சகாயம்பிள்ளை, தொழிலாளர்களின் நலன் கருதி மீண்டும் தினசரி புதினப் பத்திரிகை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து அடுத்த மாதம் முதலாம்திகதிதொடக்கம்தினசரி பத்திரிகை சபையின் செலவில் வழங்குவதென சபையால் தீர்மானிக்கப்பட்டது.(வ-207)

# சாவகச்சேரி நகரசபையால் வீதிகள் விரைவில் புனரமைப்பு

தென்மராட்சி, ஜன.23

சாவகச்சேரி நகர சபையினரால் இந்த வருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்வதாக அறி வித்த வீதிகளில் முன்னுரிமை அடிப்படையில் இரு வீதி வேலைகளை விரைவில் ஆரம்பிக்க வுள்ளனர்.

இதன் அடிப்படையில் சபையின் ஐந்தாம் வட்டாரத்தில் உள்ள நுணாவில் மேற்கு சேகண்டி வாய்க்கால் வீதியையும், ஏழாம் வட்டாரத்தில் உள்ள நுணாவில் கிழக்கு கல்லடி மூட்டு வீதியையும் புனரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மேற்கொள்வதென உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏனைய 10 வீதிகளும் எதிர்வரும் மாதங்களுக்கு கிடைக்கும் வருமானங்களின் அடிப்படையில் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தவிசாளர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு யுத்த வேளையில் நகரசபை எல்லைக்குட்பட்ட பெருமளவு வீதிகள் சேதமடைந்த போதிலும் பல வீதிகள் இன்னும் புனரமைக்கப்படாமல் உள்ளதால் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வீதி திருத்த விண்ணப்பங்களின் பிரகாரம் முன்னுரிமை அடிப்படையில் மிக அவசியமெனக் கருதப்பட்டு தெரிவு செய்யப்பட்ட 12 வீதிகளில் அதிகூடிய மதிப்பீட்டுத் தொகையைக் கொண்ட இரு வீதிகள் புனரமைக்கப் படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(வ-207)

# வீடமைப்பு அதிகார சபை ஊழியருக்குப் பதவியுயர்வு

கொழும்பு,ஜன.23

வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையில் சேவையாற்றுவோரில் 10வருட சேவைக்கு ஒரு பதவி உயர்வு என்ற அடிப்படையில் சகலருக்கும் பதவி உயர்வு வழங்குவதற்கு அமைச்சர் விமல்வீரவன்ச நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய 1505 பேர் இப் பதவியுயர்வை பெறவுள்ளார். நாளை செவ்வாய்க்கிழமை மஹரகம தேசிய இளைஞர் சேவை மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வின்போது அமைச்சரினால் இப்பதவி உயர்வு வழங்கி வைக்கப்படவுள்ளது. இவ்வாறு ஒரே தடவையில் 1505 ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது இதுவே முதற்தடவையாகும் என்று பிரதிப்பொது முகாமையாளர் தகவல் பிரசாரப்பிரிவு தர்மசிரி காரியவசம் தெரிவித்தார்.

இதனால் அதிகார சபையில் கடமையாற்றும் சாதாரண ஊழியர்கள் தமது பதவி உயர்வின் மூலம் அதிக சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

அதிகாரசபையின் ஊழியர்களின் வேண்டு கோள் இல்லாமலேயே அமைச்சர் விமல் வீரவன்சவின் பணிப்பின் பேரில் அதிகாரசபையின் தலைவர் ஜயந்த சமரவீர இப்பதவி உயர்வை வழங்குவதற்கு நட வடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

# நீரிழிவு நோயாளிகளுக்கு காசநோய் பீடிக்கும் அபாயம்

**நோயளர்களை இனங்காண்பதற்கு விசேட திட்டம் விரைவில்.**

கொழும்பு,ஜன.23

நீரிழிவு நோயாளர்கள் காசநோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளது என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.


இத்தகைய நோயாளர்களை இனங்காண்பதற்கான திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதாக காசநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் தடுப்பு தேசிய செயற்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் சினில். டி.அல் விஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மூன்று நிலையங்களிலும் கண்டியில் இரண்டு நிலையங்களிலும் இதனுடன் தொடர்புடைய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்று அவர் தெரிவித்தார்.

இதற்கமைய நீரிழிவு நோயாளர்கள் காசநோய் பரிசோதனைக்கும் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நீரிழிவு நோய் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இலகுவாக காசநோயால் பீடிக்கப்படுவ தற்கான சாத்தியம் உள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

# மின் விளக்குகளை பொருத்துமாறு மக்கள் கோரிக்கை



அல்வாய் வீதிக்கு மின் விளக்குகளைப் பொருத்துமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை தனது எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில்மின்விளக்குகளை பொருத்தும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

ஆனால் இந்தப் பகுதியின் பிரபலமான ஆலயமான அல் வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வீதிக்கு வீதி விளக்குகள் பொருத்தவில்லை.

எனவே வீதிக்கும் விளக்குகளைப் பொருத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(வ-237)

## வீதி புனரமைப்பு

நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் இருந்த கைதடி குமரநகர் வீதி தமிழக்கூட்டமைப்பின் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் நிதிமூலம் அண்மையில் குமரநகர் சனசமூக நிலையத்தினரால் திருத்தப் பட்டது.

மேற்படி பிரதேச சபை உறுப்பினரால் ஒதுக்கீடு செய்யப் பட்ட ரூபா இரண்ட லட்சம் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேடு பள்ளமாக இருந்த இந்த வீதிக்கு மண் போடப்பட்டு மக்கள் போக்கு வரத்துக்கு ஏற்றவாறு குமரநகர் சனசமூக நிலையத்தினர் தமது ஆளணி உதவியுடன் மேற்கொண்டுள்ளனர். மேற்படி வீதி திருத் தியதன் மூலம் தமது போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளதாக இந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (வ-288)




யாழ்ப்பாணம், ஜன.23

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தின் வருடாந்த லட்சார்ச்சனை இன்று திங்கட் கிழமை பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறும்.

அதனைத்தொடர்ந்து அடுத்தமாதம் 2 ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு 1008 சங்குகளோடு கூடிய வருடாந்த மகா சங்காபிஷேகம் இடம்பெறும். (வ)

மீசாலை வேம்பிராய் சத்தியஞானக் கோட்டத்தின் தைப்பூச விழா எதிர்வரும் 27 ஆம்திகதிதொடக்கம்பெப்ரவரி 8 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-207)

# மரண அறிவித்தல்

## துரைச்சாமி தர்மலிங்கம்



யாழ்ப்பாணம், நயினாதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல் வேலியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி) நேற்று (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மரு மகனும், குணவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், சாம்பசிவம் ஆகியோரின் சகோதர ரும், விக்னராஜா, வரதராஜா, Dr. ராஜினி, Dr. இரட்ன ராஜா, Dr. பாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவாஜினி, Dr. மனோகரன், Dr. மாதினி, Dr. பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனும், சுகனி, துவாரகா, ஹேசன், அதீஸ்வர், மேராலஷ்மி, கேசிகன், ஷேசானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (23.01.2012) திங்கட்கிழமை காலை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (591, Galle Road, Mt. lavinia.) வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

T. P. 0044 208 550 5324





ஃபுபே செட்

ரூபா 3950/-மிலிருந்து

www.titusstores.com

டைடஸ் ஸ்டோர்ஸ்

புறக்கோட்டை, லிபர்டி பிளாசா

2439422


## தவறிவிட்டது

60/3, சொலமன் லேன், பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த பொன்னுச்சாமி நவரத்தினம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (472910256 V), சாரதி அனுமதிப்பத்திரம், யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் பண்டத்தரிப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

த. பவனாசா

முல்லைவெளி, பண்டத்தரிப்பு

T. P.077 735 3581

# கட்டுத்துவக்கு வெடித்து சிறுமி பலி

கொழும்பு,ஜன.23

மிஹிந்தலை பிரதேசத்தில் கட்டுத்துவக்கு ஒன்று வெடித்ததில் பாடசாலை சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நாமல்வெவ பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற சம்பவத்தில் 12 வயதுடைய பாடசாலை சிறுமி உயிரிழந்துள்ளார்.

கட்டுத்துவக்கில் உள்ள மருந்துகளை தந்தை அகற்றிக் கொண்டிருந்தபோது அது திடீரென வெடித்ததில் அருகில் இருந்த மகள் பலியாகியுள்ளார்.

சம்பவத்தின் போது படுகாயமடைந்த சிறுமியை காப்பாற்றும் வகையில் அவசரமாக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றபோது வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சிறுமியின் தந்தை மிஹிந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 வயது கிரிக்கெட்டில் வென்றது சென்.ஜோன்ஸ்

யாழ்ப்பாணம்,ஜன.23

அகில இலங்கை பாடசாலைகளுக்குமிடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளிடையே பிரிவு 3 இற்கு நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள்கடந்த வாரம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின.

இதில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

யாழ்.இந்துக் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் தனது முதலாவது இனிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி 40.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களை பெற்றது.

இதில் கல்கோபன் 39 ஓட்டங்களையும் வாமணன் 19 ஓட்டங்களையும் றுக்ஸ்மன் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களனா துவாரகசீலன் 13 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் அமிர்தயன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வித்தரகன் 5 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரிந்தாபன் 7 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் 78.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் துவாரகசீலன் 54 ஓட்டங்களையும் றஜீத்தன் 50 ஓட்டங்களையும் அன்ரியன் 45 ஓட்டங்களையும் கபில்ராஜ் 28 ஓட்டங்களையும் அமிர்நேயன் 22 ஓட்டங்களையும் சயன் ஆட்டம் இழக்காமல் 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்கள் சார்பாக மதுஷன் 24 ஓவர்களில் 62 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் சிந்துஷன் 11.4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் றுக்ஸ்மன் 12 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வாமணன் 11 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்குஒரு விக்கெட்டையும் டன்சன் 8 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இனிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் 56.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் கல்கோபன் 109 ஓட்டங்களையும் யஸ்மினன் 85 ஓட்டங்களையும் வாமணன் 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.


பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான வித்தகரன் 12 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட் டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் றஜீத்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் லோகதீஸ்வர் 5 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் அமிர்தேயன் 7 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

94 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென தனது இரண்டாவது இனிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 19 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றஜீத்தன் 8 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் துவாரகசீலன் 41 ஓட்டங்களையும், கிரிந்தசீரன் 27 ஓட் டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரன் யஸ்மினன் 7 ஓவர்களில் 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.(ம-23)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஓர் அங்கமாக மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றது. அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு. பி.பிரசாந் (லிள்ஸ் இல்லம்), ந.தினேஸ்குமார் (றொமைன் இல்லம்),சி.சுசிகரன்(பேர்சிவல் இல்லம்), அ.கனோஜன்(பேர்சிவல் இல்லம்),இ.மதுசன்(றொமைன் இல்லம்) இவர்களுக்கான பரிசில்களை யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன், பாடசாலை அதிபர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (38)

# வடமராட்சி வலய மேசைப்பந்து முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.23

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இரு பாலாருக்குமான மேசைப் பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வை மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் வெற்றி பெற்றோர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**ஆண்கள் பிரிவு**

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**


வல்வை மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலை,வட இந்து மகளிர் கல்லூரி.

(ம-23)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் வெற்றி அதிரடி வெற்றியானது


சங்கக்கார

**சங்காவின் சிறப்பான துடுப்பாட்டமும் இறுதிக் கட்டத்தில் சேனநாயக்காவின் அதிரடியும் கைகொடுக்க இலங்கை அணி, தென்னாபிரிக்காவை 2 இலக்குகளால் இறுதி, ஒரு நாள் ஆட்டத்தில் வெற்றி கொண்டது.**


டில்ஷான்

தென்னாபிரிக்க அணி நிர்ணயித்த 300 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடி வரும் இலங்கை அணி டில்ஷானின் சிறப்பான ஆரம்பத்துடன் 33 பந்து பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வெற்றிக்கு இன்னும் 112 ஓட்டங்கள் 102 பந்துகளில் பெறப்பட வேண்டியுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இலங்கை அணி விளையாடி வருகின்றது. அங்கு டெஸ்ட் தொடர், ஒரு நாள் தொடரை 3 -1 என்று இழந்த நிலையில் இறுதி ஆட்டத்தில் ஆறுதல் வெற்றி தேடி நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி களமிறங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி, தென்னாபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஸ்மித், அல்வ்ரோ பீற்றர்ஸன் களமிறங்கினர். இலங்கையின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்களைக் குவிக்க இந்த ஜோடி திணறியது. முதலாவது இலக்கு இலங்கை அணியினால் 3.4 பந்து பரிமாற்றங்களில் 10 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சரிக்கப்பட்டது. மலிங்கவின் பந்து வீச்சில் பீற்றர்ஸன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பிளஸிஸ் நுழைந்து ஸ்மித்துடன் இணைந்து துடுப்பெடுத்தாடினார். இருவரும் நிதானமாகவே ஓட்டச் சேகரிப்பில் ஈடுபட்டனர். மேலதிக இலக்கு இழப்பை தவிர்ப்பதிலேயே இந்த ஜோடி முனைப்பாக ஆடியது.

இரண்டாவது இலக்குக்காக 60 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பிளஸிஸ் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 17.1 பந்து பரிமாற்றங்களில் 70 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையிலேயே பிளஸிஸின் இலக்கு வீழ்த்தப்பட்டது.

இதன் பின்னர்தான் இலங்கை அணிக்கு ஏழரைச் சனியன் பிடித்தது. கடந்த நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கையை போட்டு புரட்டி எடுத்த ஸ்மித் - டீ வில்லியர்ஸ் ஜோடி இணைந்தது. அமர்முடுகலுடன் பயணித்த தென்னாபிரிக்கா அணியின் ஓட்ட வேகம் அதிரடியாக ஆர்முடுகலுடன் எகிறியது. ஸ்மித் இலங்கை மீது பரிதாபப்பட்டு அளவோடு போட்டுத் தாக்கினார். இருப்பினும் மறுமுனையில் டீ வில்லியர்ஸ் இம்மை வறுமையின்றி வெளுத்து வாங்கினார்.

கடந்த நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் டீ வில்லியர்ஸை 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்த திஸ்ஸர பெரேராவின் பந்து வீச்சை வில்லியர்ஸ் நல்ல கவனிப்பு கவனித்தார். பொறுமையுடன் வெளுத்து வாங்கிய ஸ்மித் 129 பந்துகளில் தனது 9 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். மூன்றாவது இலக்குக்காக 146 பந்துகளில் 150 ஓட்டங்கள் எட்டப்பட்டது.

அதிரடியில் கலக்கிய வில்லியர்ஸ் 88 பந்துகளில் தனது 14 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். மூன்றாவது இலக்குக்காக இணைப்பாட்டமாக 168 பந்துகளில் 186 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஸ்மித் ஆட்டமிழந்தார். ஸ்மித் 143 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 125 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் சரிந்தார். தொடர்ந்து நுழைந்த அல்பின் மோர்கல் இறுதிக் கட்ட தாக்குதலை டீ வில்லியர்ஸுடன் இணைந்து நடத்தினார். ஓட்டம் எடுப்பதில் அவசரம் காட்டிய மோர்கல் 11 பந்துகளில் 18 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டானார்'.

இறுதிக் கட்டத்தை டீ வில்லியர்ஸும், டுமினியும் முடித்து வைத்தனர். 50 பந்து பரிமாற்றங்களின் நிறைவில் தென்னாபிரிக்க அணி 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது. அணித்தலைவர் டீ வில்லியர்ஸ் 98 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 10 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 125 ஓட்டங்களையும், டுமினி 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் இலங்கை சார்பில் மலிங்க 2, சேனநாயக்க ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு கடினமான இலக்கான 313 ஓட்டங்களை விரட்ட தரங்க, டில்ஷான் ஜோடி களமிறங்கியது. ஆபிரிக்காவுக்கு சற்றும் சளைத்தவர்கள் நாமில்லை என்பதை நிரூபிப்பது போல அதிரடி காட்டினர். இவர்களது போட்டுத் தாக்கலினால் இலங்கை 78 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டியது. 7.1 பந்து பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் சிறிது நேரம் இடைநிறுத்தப்பட்டது.

ஆட்டம் மீண்டும் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் இலங்கையின் முதலாவது இலக்கு பறிக்கப்பட்டது. பத்து பரிமாற்றங்களில் அணி 72 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தரங்க 39 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்பு இலங்கையின் ஸ்ருதி மெல்லக் குறைந்தது.

டில்ஷானுடன் இணைந்து சங்கா மெதுவான ஓட்டச் சேகரிப்பில் ஈடுபட்டனர். 54 பந்துகளில் 47 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக இருவரும் பகிர்ந்த நிலையில் டில்ஷான் 41 ஓட்டங்களுடன் வெளியேறினார். சந்திமால் நான்காவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கினார். சந்திமால் நிதான ஆட்டத்தை வெளிபடுத்த சங்கா பந்துக்கு ஏற்றவகையில் அணியின் ஓட்ட எண்ணிக்கையை நகர்த்தினார். ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய சங்கா 54 பந்துகளில் தனது 68 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மூன்றாவது இலக்குக்காக 56 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சந்திமால் 39 பந்துகளில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 29.5 பந்து பரிமாற்றங்களில் 175 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே மூன்றாவது இலக்கு சரிக்கப்பட்டது.

அதன் பின்னர் நுழைந்த திரிமன்னே, சங்காவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்தார். தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை இலகுவாக பந்தாடி இந்த ஜோடி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. 44 பந்துகளில் இந்த ஜோடி இணைப்பாட்டமாக 50 ஓட்டங்களைப் பகிர்ந்தது. தென்னாபிரிக்காவுக்கு சிம்மசொப்பனமாகத் துடுப்பெடுத்தாடிய சங்கக்கார 96 பந்துகளில் தனது 12 ஆவது சதத்தை கடந்தார். ஒரு நாள் கிரிக்கெட்டில் சங்கக்கார தென்னாபிரிக்காவுக்கு எதிராக பெற்ற முதலாவது சதமாகும்.

சதமடித்த அடுத்த பந்திலேயே சங்கக்கார ஆட்டமிழந்தார். நான்காவது இலக்குக்காக 86 பந்துகளில் 100 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையிலேயே சங்கக்கார 97 பந்துகளில் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய திரிமன்னே 49 பந்துகளில் தனது முதலாவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். சங்காவின் ஆட்டமிழப்பை தொடர்ந்து களமிறங்கிய மத்தியூஸ் அதிரடியாக ஆட்டத்தை ஆரம்பித்த போதும் 5 பந்துகளில் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 46.2 பந்து பரிமாற்றங்களில் 294 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது. தொடர்ந்து நுழைந்த திஸ்ஸர பெரேராவும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி இறுதி 6 பந்துகளில் 6 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இறுதிப் பந்து பரிமாற்றத்தை றொபின் பீற்றர்ஸன் வீச முதலாவது பந்திலேயே குலசேகர 'போல்டானார்'. தொடர்ந்து ஹேரத் நுழைந்தார். ஹேரத் முதலாவது பந்தில் ஓர் ஓட்டத்தை பெற்றுக் கொடுக்க மூன்றாவது பந்தை எதிர் கொண்ட திரிமன்னே 63 பந்துகளில் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து நுழைந்த சேனநாயக்க நான்காவது பந்தில் ஓட்டமெதனையும் பெறவில்லை. ஆட்டத்தின் பரபரப்பு உச்சமான நிலையில் ஐந்தாவது பந்தை வீச ஆறு ஓட்டங்களுக்கு விளாசி இலங்கையின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இறுதியில் இலங்கை அணி 49.5 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் றொஸ்ரோபே, டுமினி, பீற்றர்ஸன், பார்னெல், தலா 2 இலக்குகளை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இலங்கையின் சங்கக்காரவும், தொடர் நாயகனாக தென்னாபிரிக்காவின் டீ வில்லியர்ஸும் தெரிவானார்கள். (15)

## இவர் அடிப்பாரா? அடிபடுவாரா?



அன்னிய மண்ணில் சேவாக்கின் மோசமான ஆட்டம் தொடர்கிறது. கடந்த 21 இன்னிங்ஸில் இரு முறை மட்டுமே அரைசதம் அடித்துள்ள இவர், அடிலெய்டு டெஸ்டில் மானம் காப்பாரா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

சமீபகாலமாக அன்னிய மண்ணில் இந்திய டெஸ்ட் அணியின் தொடக்கம் மோசமாக உள்ளது. இதனால் பின் வரிசை வீரர்கள் நெருக்கடிக்கு ஆளாகி, எளிதில் ஆட்டமிழக்க, தொடர் தோல்வியை அணி சந்திக்கிறது. இதில் அதிரடி வீரர் சேவாக், நான்கு ஆண்டுகளாக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். நியுசிலாந்து, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய தொடரில், இவரது சராசரி ஒருமுறை கூட 30 ஓட்டங்களை தொடவில்லை. இத்தனைக்கும் இங்கிலாந்து மற்றும் தற்போதைய தொடரை தவிர, மற்ற மூன்று தொடர்களில் நல்ல 'போர்மில்' தான் இருந்தார்.

இந்த ஆட்டங்களின் 21 இன்னிங்ஸில், சேவாக் எடுத்த ஓட்டங்கள் 500 ஐ எட்டவில்லை. இரு முறை மட்டும் தான் அரைசதம் அடித்தார். இது அன்னிய மண்ணில் ஹர்பஜன் சிங் எடுத்த ஓட்டங்களை விட மோசமான சராசரி. இதில் 16 முறை வேகப்பந்து வீச்சாளர்களிடம் ஒரே மாதிரியாக ஆட்டமிழந்தார். அதாவது சரியான அளவில், பந்தை லேசாக 'ஸ்விங்' செய்து வீசினால், இலக்குக் காப்பாளர் அல்லது 'சிலிப்' பகுதியில் பிடிகொடுத்து ஆட்டமிழந்து விடுவார்.

தற்போது அணியின் தலைவராக வேறு பொறுப்பேற்றுள்ளார். இதற்கு முன் மூன்றுமுறை டெஸ்ட் அணிக்கு தலைவராக இருந்த ஆட்டங்களில், ஒன்றில் கூட தோற்றதில்லை. இந்த ஆட்டங்களில் 173 ஓட்டங்கள் தான் எடுத்தார். இதன் சராசரி 28.33 ஆகும். பொதுவாக அணித்தலைவர் பணி இவரது துடுப்பாட்டத்திற்கு கைகொடுக்கப் போவதில்லை. மாறாக நெருக்கடி தான் தரும்.

2008 இல் அடிலெய்டு டெஸ்டில் சேவாக் முதல் இன்னிங்ஸில் 63, இரண்டாவது இன்னிங்ஸில் 151 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் இந்த முறையும் இந்திய அணியின் தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து மானம் காக்க உதவுவார் என்று நம்பப்படுகிறது. இந்த டெஸ்டில் முதல் இரண்டு மணி நேரம் களத்தில் இருந்து விட்டால், அணியின் ஓட்ட எண்ணிக்கை 300 அல்லது அதற்கு மேல் செல்வது உறுதி.

ஒருவேளை மீண்டும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தால், கடந்த 26 மாதங்களில் பங்கேற்ற 25 டெஸ்டில், இதுவரை இல்லாத அளவுக்கு, இவரது சராசரி 50க்கும் கீழாகச் சென்றுவிடும். (15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோல்டன் பிரதர்ஸ் அணி அரையிறுதி ஆட்டத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜன.23

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம், யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெறுகின்றன.

அதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

காலிறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

தத்தமது அணி வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் இரண்டு அணியினரும் களம் புகுந்ததால் முதல் பாதி ஆட்டம் ரசிகர்களுக்கு விருந்தாக அமைத்தது.

ஆட்டம் ஆரம்பித்த உடனேயே இரண்டு அணியினரும் தத்தமது ஆட்டத்தை வேகப்படுத்தி கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் தமக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கோல்டன்பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றனர்.

இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியினர் பதிலுக்குத் தமது அணிக்கான கோல்கள் பெறப் பல பல முறைகளிலும் முயன்றும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது 1:0 என்ற கோல் அடிப்படையில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு



அணியினரும் ஆட்டத்தில் சில மாற்றங்கள் செய்து களம் இறங்கினர்.

இதனால் எந்த அணி வெற்றி பெறும் என்று ரசிகர்கள் இடையே பரபரப்பு காணப்பட்டது.

இரண்டு அணி வீரர்களும் தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து எப்படியாவது தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் மோதிக் கொண்டனர்.

இதன்போது கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்கான இரண்டாவது கோலைப் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் தமது அணிக்கான கோல்கள் பெறுவதற்கு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரர்களால் தடுக்கப்பட்டன.

எதிர் அணியினருடைய தடுப்பு ஆட்டத்தையும் மீறி யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டது.

இதனால் ஆட்ட முடி வில் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 2:0 என்ற கோல் கணக்கில் யங்ஸ்ரார் விளையாட் டுக்கழக அணியை வெற்றி கொண்டு அரை இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## இன்றைய ஆட்டம்

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சாந்தன், யூட்சன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் நடைபெற்று வருகின்றன.

அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் காலிறுதி ஆட்டத்தில் ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## கபடியில் வென்றது ஜேம்ஸ் வி.க. அணி

யாழ்ப்பாணம்,ஜன.23

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான கபடிப் போட்டியில் ஊர்காவற்றுறை ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சனிக்கிழமை இடம் பெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் றேஞ்சல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணி 40:31 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (ம-23)

## இன்றும் நாளையும் மோதும் அணிகள்

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு 3 இற்கான முதற் சுற்றுக் கிரிக்கெட் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்றும் நாளையும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக்கல்லூரிஅணியைஎதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## மரதன் ஓட்ட வெற்றியாளர்



நெடுங்கேணி மகாவித்தியாலயம் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்திய மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டி நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகித் தண்டு வான் பாடசாலையை அடைந்து மீண்டும் நெடுங்கேணி மகாவித்தியாலயத்தை வந்தடைந்தது. இதில் ஆண்கள் பிரிவில் நிர்மல், நவகீதன், கீர்த்திகன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெண்கள் பிரிவில் டிலக்சனா, மஞ்சுளா, கஜந்தா ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றனர். (ம-435)

## மெய்வன்மைப் போட்டி

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா கல்வி வலயத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதில் இல்லங்கள் ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு பதக்கங்களும் சான்றிதல்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ம-421)

## பூப்பந்தாட்டம்

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டி 25 ஆம், 26 ஆம் திகதிகளில் ஹாட்லிக் கல்லூரி வை.எம். சி. ஏ.மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் இடம்பெற வுள்ளது. (ம-23)


## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலக உதவி நூலகர் த. பீதாம்பரம் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னப்பா தம்பிராசா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், பிரதேச சபை ஊழியர் நலன்புரி சங்கம்.

சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

### இராமநாதன் கனகநாதன்



மண்டைதீவு, 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கனகநாதன் கடந்த வெள்ளிக்கிழமை (20.01.2012) இறைபதம் அடைந்தார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன்-விசாலாட்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகசபாபதி (விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்), இரத்தினகுமாரன் (கனடா, முன்னாள் கிராம சேவையாளர்), விஜயகுமாரன், ஜெயக்குமார் (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவிகா (கனடா), கார்த்திகா (நோர்வே), காஞ்சனா, கல்பனா (இந்தியா), காலஞ்சென்ற ஜனகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறீதரன் (கனடா), வேல்மைந்தன் (நோர்வே), சுதன் ஆகியோரின் பாசமிகு மாமனும், சிந்துஜா (கனடா), சாதுஜன் (கனடா), விதுசன் (கனடா), சுடரினி, கேதாரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

106, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடு விற்பனைக்கு

கருவேப்பிலம் வீதி, கொக்குவில் கிழக்கில் நல்லூர் பிரதேசசபை தலைமைக் காரியாலயத்துக்கும், விவசாய வீடத்துக்கும் மருத்துவ பீடத்துக்கும் அருகில் இரண்டு பரப்பு காணியில் நான்கு பக்க சுற்று மதில், குளியல் அறை மற்றும் சகலவசதி களுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 5427158

## பதவிவெற்றிடம்

தனியார் கல்வி நிறுவனத்துக்கு பெண் எழுதுவினைஞர் தேவை. யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
இல. 139, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
By- ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி. வகுப்புகள்- யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை
தொடர்பு- 0776751649

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட உயர் இன 4 மாதம் நிரம்பிய (லபிரடோ, பொக்ஷர் கறுப்பு வரியன்) நாய்க்குட்டிகள் சகல தடுப்பூசிகள் போடப்பட்டு பூச்சி நீக்கப்பட்டு புத்தகத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு- V.S.சற்குணன்,
25, பொன்னம்பலம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0212227535

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி இ.மயில்வாகனசிங்கம் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னப்பா தம்பிராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யாழ். சாவகச்சேரி
றோ.க.த.க பாடசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா கந்தையா



இருபாலை, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், சங்கானை குளத்தடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (22.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், லக்சல உரிமையாளர், மணிமகால் பல்பொருள் வாணிபம், சந்தைச் சதுக்கம்- சங்கானை), சிவஞானம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கனகசபை (முன்னைநாள் லிகிதர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், உரிமையாளர்-கலாஜோதி புத்தகநிலையம்- சங்கானை), கனகரத்தினம் (ஓய்வுபெற்ற போதனாசிரியர், இலங்கை கைப்பணிப் பொருள்கள் சபை), கமலராணி ஆகியோரின் அன்புத் தாயும், குலமணிதேவி, சறோஜினிதேவி, மலர்விழி (உதவிக் கல்விப்பணிப்பாளர் அழகியல்- தீவக கல்வி வலயம்), புஸ்பமலர், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், சுதாஜினி, விமலநாதன் (ஜேர்மனி), சுஜிதா, சுபாஸ், சுஜந்தன், சிவகஜனி, சிவகஜன், சுரேஷியா (ஆசிரியை, அடம்பன் மகா வித்தியாலயம்), கஸ்தூரி, ஞானவேள், லக்சனா, அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2012) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் சங்கானை குளத்தடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளத்தடி வீதி, சங்கானை.

தகவல்:
க.சுப்பிரமணியம் (மகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களும் நண்டு வளர்க்கிறோம்...!





யாழ்ப்பாணம், ஜன.23 புனர்வாழ்வு அழிக்கப்பட்ட முன்னாள் போராளிகளும் இராணுவத்தினரும் இணைந்து நண்டு வளர்ப்பிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

ஊர்காவற்றுறையில் 3 மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் நன்னீர் நண்டு வளர்ப்புக்கான சிறிய குளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் 1.6 மில்லியன் ரூபா நிதி யொதுக்கீட்டின் கீழ், ஒவ்வொன்றும் தலா 50, 40 அடி அளவுள்ள 16 நண்டு வளர்ப்புத் தடாகங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இதனோடு தொடர்புடைய நண்டு பதனிடல், சந்தைப்படுத்தல் தொழில்வாய்ப்புக்களும் கிடைக்கும் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் முன்மொழிவின்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதியின் உத்தரவின்படி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

# போர்க்குற்றம் பற்றி விசாரிக்க சர்வதேச பொறிமுறை தேவை

## குடியரசுக் கட்சியின் உறுப்பினர் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணை அவசியமென அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் சட்டசபை உறுப்பினர் ஹோவர்ட் பெர்மன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு இருக்கின்றது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

செனட்சபையின் வெளிநாட்டு விவகாரச் செயற்குழுவில் இடம்பெறும் உயர்நிலை குடியரசுக் கட்சியின் சட்டசபை உறுப்பினராக விளங்குகின்ற ஹோவர்ட் பெர்மன் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டதை வரவேற்கும் அதே வேளையில், அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கம், மொழிக் கொள்கை, ஆளுமைச் சட்டம், பேச்சுச் சுதந்திரம் போன்றவற்றை உடனடியாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்துகிறார் எனவும் -

அதேவேளை, ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான குற்றச் சாட்டுகள் விசாரிக்கப்படாததையிட்டு கவலை கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்தமுப்பது வருடகொந்தளிப்பின்போது நடந்ததாகச் சொல்லப்பட்டுள்ள போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கு தனிப்பட்ட சுயாதீன பன்னாட்டு பொறிமுறை ஒன்றை அனுமதிக்க வேண்டுமென்றுதான் இலங்கை அரசைக் கேட்டுக் கொள்கிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். பல்கலைக்கு இந்தியா வழங்கவிருந்த ரூ.227 மில்லியன் அரசால் நிறுத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீடத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கூடுதலான பயிற்சி வசதிகளை ஏற்படுத்துவதற்கும் இந்தியா வழங்க முன்வந்த 2 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 227 மில்லியன் ரூபா) திட்டத்தை அரசு நிறுத்திவைத்துள்ளது.

திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் மாப்பா பத்திரண இந்தத் தகவலை ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.


மேலும், இலங்கை அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களும் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் பணியகத்திற்கூடாகவே வழங்கப்பட வேண்டுமெனவும் இப்புலமைப் பரிசிலை பெறுவோருக்கு நேரடியாக அவை வழங்கப்படக்கூடாது எனவும் இந்தியாவிடம் இலங்கை தெரிவித்துள்ளது என்றும்,

வெளிவிவகார அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் இலங்கையின் இந்நிலைப்பாடு இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் நேரடி கொடுக்கல் வாங்கல்களை வைத்துக்கொள்ளக்கூடாது என திறைசேரி தமக்கு அறிவித்துள்ளது என யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.அரசரட்ணம் தெரிவித்தார் என்றும்-

எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரிலேயே யாழ். பல்கலைக்கழகம் இவ்வுதவியை பெறுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தது என்றும் அவர் கூறியதாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான கல்விசார் உதவிகளை இந்தியா அதிகரித்துள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தனது இலங்கை விஜயத்தின் போது தெரிவித்திருந்தார்.



இலங்கை வந்துள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர். இந்த நிகழ்வில் அமைச்சர் திஸ்ஸ விதாரண மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஜ.ம.முன்னணியின் கொழும்பு அமைப்பாளராக பிலிப் நேரிஸ் ஜெனிபர்

ஜனநாயக மக்கள் முன்னணியின் மத்திய கொழும்பின் முதலாம் வலய பிரதம அமைப்பாளராக பிலிப் நேரிஸ் ஜெனிபர் பெர்ணாந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுக்கூட்டத்தின்போதே அக்கட்சியின் தலைவர் மனோ கணேசனால் இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடையைப் பிறப்பிடமாகவும் ஜிந்துப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெனிபர் பெர்ணாந்து, கொச்சிக்கடை புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும், வித்தியாலய அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கத்தின் செயலாளராகவும் செயல்பட்டவர். அகில இலங்கை பரத சங்கத்தின் செயலாளராகவும் செயல்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 5 ரூபாவுக்கு கடிதத்தை அனுப்புவதில் சிக்கல்

ஐந்து ரூபா கட்டணத்திற்கு சாதாரண கடிதமொன்றை அனுப்புவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிலர் வர்த்தக கடிதங்களையும் சாதாரண கடிதங்களாக இரகசியமான முறையில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றமையே இதற்குக் காரணம் என பிரதி தபால் மாஅதிபர் ஆர்.பி.டி.காமினி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சாதாரண கடிதமொன்றை விநியோகிப்பதற்காக தபால் திணைக்களம் சுமார் 19 ரூபாவை செலவிட நேரிட்டுள்ளது எனவும், இதனால் திணைக்களம் நஷ்டத்தை எதிர்நோக்குகிறது எனவும் பிரதி தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-சி)


# DUMBARA WATER MARKETING LTD இற்கு விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர், பழச்சாறு, தக்காளி சோஸ், மிளகாய் சோஸ், சோயா சோஸ், விநாகிரி, லைமிக்ஸ் இன்னும் பல பொருள்கள் அடங்கிய எமது நிறுவனத்துக்கு (COMPANY) வடக்கு, கிழக்குக்கான விற்பனை முகவர்கள் (Agency), விற்பனைப் பிரதிநிதிகள்(Sales Rep)மாவட்ட அடிப்படையில் உடனடியாகத் தேவை

(SLS 894/CFA/BW/92/2008/01)

தொடர்புகளுக்கு :-077 6424393


# மரண அறிவித்தல்

## பொன்னையா இராசமணி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மத்தி நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசமணி நேற்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை பொன்னையாவின் அன்பு மனைவியும், கனகலிங்கம் (சாமி), கனகநாயகம் (பப்பு, சுவிஸ்), கமலாதேவி(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான இராசதுரை, கனகசபை (குஞ்சு), சோதிதவமலர், கனகசுந்தரம் (பொத்தப்பா) ஆகியோரின் அன்புத் தாயும், பரமேஸ்வரி (இந்திரா), கமலாதேவி, உமாபதி, சிவராசா ஆகியோரின் அன்பு மாமியும், ராதிகா- ரிஷிகேசன், பிரசாந்தி, சிவசங்கர், றஜீவன், லரிசா, றஜீனா, அரவிந்தன், பிரவீன், பிரதீப், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஷாளி, ஏரியானா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி காலயன் புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. பொ.கனகலிங்கம் (சாமி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வளங்களை கொள்ளையிடும் இந்தியா

## குற்றம் சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.23

தமிழர்களின் பிரச்சினையை பகடைக்காயாகப் பயன்படுத்தி இலங்கையிலுள்ள வளங்களைக் கொள்ளையடிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி., புரியாத புதிராகவுள்ள 13 பிளஸ், செனட்சபை ஆகியன தொடர்பாக அரசு நாட்டு மக்களுக்கு உடனடியாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசிடமுள்ள தீர்வுத்திட்டம் என்னவென்பதை அது பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்திக் கூறியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு செனட்சபை அமைக்கப்படும் என்றும், இதற்கு இந்தியா அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அரசு அறிவித்துள்ளது.

செனட்சபை அமைக்கும் அரசின் திட்டம் குறித்து 'உதயனு'க்குக் கருத்து வெளியிடும்போதே ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர்மேலும்கூறியவைவருமாறு-

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து அரசு பல்வேறு கோணங்களில் கருத்து வெளியிட்டுவருகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி இந்தியாவிடம் மீண்டும் உறுதியளித்துள்ளார். 13 பிளஸ் கதை பரவலாகப் பேசப்படும் இவ்வேளையில், செனட்சபை அமைப்பது குறித்தும் அரசு பேசுகின்றது.

13 பிளஸ் என்றால் எவ்வாறானதொரு தீர்வு? அதன் உள்ளடக்கங்கள் என்ன? அதன் வரையறைகள் உட்பட அவை குறித்து முக்கியமான சில அம்சங்களை அரசு தெளிவுபடுத்தவேண்டும். அதுமட்டுமன்றி, செனட்சபை எவ்வாறான முறையில் அமைக்கப்படும்? வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு அது எவ்வாறானதொரு தீர்வை வழங்கும்? அதில் பேசப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்தும் அரசு, நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதைவிடுத்து, 13 பிளஸ், செனட்சபை என வெறுமனே கூறித் திரிவதால் பிரச்சினைகள் தீரப் போவதில்லை.

இலங்கைப் பிரச்சினைக் குறித்து இந்தியாவிடம் தீர்வைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அதனை எமது நாட்டு மக்களுக்கே அறிவிக்கவேண்டும்.

தமிழர் பிரச்சினைகளை முக்கிய காரணியாகப் பயன்படுத்தி, தமிழர்களின் வளங்களைக் கொள்ளையடிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. வடக்கு, கிழக்குக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடிக்கின்றனர். இதனால், தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இலங்கையின் காணிகளையும் இந்தியா ஆக்கிரமித்துவிடும் நிலையே இன்று ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களுக்கு இன்று உடனடியாகத் தேவைப்படும் சேவைகளை அரசு வழங்கவேண்டும். மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தல், காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது போன்ற அடிப் படைப் பிரச்சினைகளை அரசு தீர்த்து வைத்துவிட்டே அப்பால் என்ற பதத்தை பயன்படுத்த வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண இதுவே சிறந்த வழிமுறையாகும் - எனக் கூறினார் ரில்வின் சில்வா. (ஒ-சி)

# இஸ்லாமியப் பிரசாரப் பணிக்காக வருவோருக்கு விசேட விசா

இஸ்லாமிய பிரசாரப் பணிக்காக இலங்கை வருபவர்களுக்கு விசேட விசா நடைமுறையொன்றை அமுல்படுத்துவது குறித்து ஆராயப்படவுள்ளது என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தெரிவித்தார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தலைமையில் இன்று இதுதொடர்பாக ஆராயும் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் பௌஸி குறிப்பிட்டார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள 161 தப்லீக் பிரசாரகர்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக வினவிய போதே அமைச்சர் பௌஸி மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இஸ்லாமிய பிரசாரகர்கள் சுற்றுலா விசாவிலேயே இலங்கை வந்துள்ளனர். சுற்றுலா விசாவில் வந்தவர்கள் இலங்கையில் பிரசாரத்தில் ஈடுபடமுடியாது.

தப்லீக் ஜமாஅத்துக்கு எதிரானவர்கள் செய்த முறைப்பாட்டையடுத்தே, இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க கட்டுப்பாட்டாளர் தீர்மானித்துள்ளார்.

**இஸ்லாமிய பிரசாரகர்கள் சுற்றுலா விசாவிலேயே இலங்கை வருகின்றனர். சுற்றுலா விசாவில் வருபவர்கள் இலங்கையில் பிரசாரத்தில் ஈடுபடமுடியாது.**

கட்டுப்பாட்டாளருடன் நான் இதுதொடர்பாக உரையாடியதற்கிணங்க, ஒருவார கால அவகாசம் இவர்களுக்கு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இப்பிரச்சினை ஏற்படாதிருக்க, தப்லீக் ஜமாஅத்தினர் உட்பட ஏனைய இஸ்லாமிய பிரசாரப் பணிக்கென இலங்கை வருபவர்களுக்கு விசேட விசா வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.- என்றார் அமைச்சர். (ஒ-சி) (முன்னர் வந்த செய்தி 17ஆம் பக்கத்தில்)

## சன்னார் கிராமத்தில் அரச தரப்பினர் அத்துமீறிப் புகுந்து வீதிகள் அமைப்பு

1 »

உத்தரவிட்டுள்ளனர்.

''இந்தப் பகுதி உங்களுக்கானதல்ல. ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரிலே முஸ்லிம் மக்களைக் குடியமர்த்துவதற்காக இந்தப் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவே நீங்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்" எனக் கடுந்தொனியில் மிரட்டி வீதி அமைப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

சன்னார் கிராமத்தில் வெளி மருதமடு குளத்தின் கீழ் 4000 ஏக்கர் வயற்காணிகள் உள்ளன. இவற்றைக் கையகப்படுத்தும் நோக்கில் அரசின் ஆதரவுச் சக்திகள் முயற்சிப்பதாகவும் அதன் ஒரு கட்டமாகவே தமது வாழ்விடப் பரப்பை அபகரிக்கும் முயற்சியில் அவர்கள் இப்போது ஈடுபட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தினதும் பிரதேச சபையினதும் இந்தச் சட்டபூர்வமற்ற நடவடிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றைய தினம் மன்னார் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாகவும், இதே போன்று கொழும்பு நீதிமன்றில் மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்கொன்றைப் பதிவு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றையதினம் சட்டபூர்வமான முறையில் வீதிகள் அமைக்கப்பட்டபோது தமிழ் மக்களின் மூன்று குடிசைகளின் முற்றத்தால் வீதி அமைக்கப்பட்டதாகவும் இதன்போது குறித்த அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் எனினும் பொலிஸார் அதனைக் கட்டுப் படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாதிக்கப்பட்ட சன்னார் பிரதேச வாசி ஒருவர், ''நாங்கள் பதினைந்து ஏக்கர் காணியைப் பொது இடமாகத் தெரிவு செய்து துப்புரவு செய்து வருகின்றோம். இதில் விளையாட்டு மைதானம் உட்பட பொதுமக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பை அமைப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம். இந்த நிலையில் சில அரசியல்வாதிகளின் வழிப்படுத்தலின் கீழ் எங்கள் இருப்பிடங்களைக் கையகப்படுத்தும் முயற்சி காரணமாக நாங்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்'' - என்று கவலையுடன் தெரிவித்தார். (ஒ-10-601)

## ஹிக்கடுவை கடலில் மூழ்கி ஜேர்மன் பிரஜை உயிரிழப்பு

ஹிக்கடுவ கடலில் நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை வேளையில் நீரில் மூழ்கிய குறித்த வெளிநாட்டவர் மீட்கப்பட்டு கராபிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 72 வயதுடைய ஜேர்மன் நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை பிரதேச சுற்றுலா விடுதி ஒன்றில் இவர் தங்கியிருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் ஒபாமாவின் உயர்தூதர் இலங்கை வருகை

1 »

மைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பற்றிக் கலந்துரையாடுவதற்கு அனைத்துலக சமூகம் கொடுக்கவுள்ள அழுத்தங்களுக்கான முன்னோடியாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கை தொடர்பாக ஜெனிவாக் கூட்டத்தொடரில் கலந்துரையாடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் இலங்கை அரசு, அடுத்த அமர்வின்போது தமக்கு எதிரான தீர்மானங்கள் ஏதும் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் அதனை முறியடிப்பதற்கான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகிறது.

ஸ்டீபன் ராப்பின் வருகையை எதிர்கொள்வதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும், இவர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசவே இங்கு வருகிறார் எனவும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

இறுதிக்கட்டப் போர் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கலந்துரையாடுவது குறித்த அழுத்தங்கள் இலங்கைக்கு அதிகரித்து வருகின்றன.

ஆனால், இந்த நகர்வுகளுக்கு இலங்கை அரசு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# முன்னாள் போராளிகள் 73 பேர் விடுதலை



1 »

தலை செய்யப்பட்ட இவர்கள் தமது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கடனுதவிகளும் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

இதில் பிரதியமைச்சர் வி.முரளிதரன், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, புனர்வாழ்வு ஆணையாளர் டபிள்யூ. கொடிப்பிலி, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க உட்பட சமயத் தலைவர்கள், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-சி)

## தெரிவுக்குழு தாமதமாவதால் மீண்டும் சர்வகட்சிக் குழு

1 »

நிராகரித்ததன் காரணமாகவே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் என ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது தொடர்பில் மேற்படி கட்சிகள் தமது நிலைப்பாட்டை சாதகமான முறையில் பரிசீலிக்கத் தவறும் பட்சத்தில் விரைவில் இந்த சர்வகட்சிக் குழு அமைக்கப்படும் என்ற அந்த வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்தன.

புதிதாக அமைக்கப்படவுள்ள சர்வகட்சி குழுவினூடாக 13 பிளஸ், செனட்சபை ஆகிய விடயங்கள் குறித்தும் பரிசீலிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. (ஒ-சி)

## அந்தியேட்டிக் கிரியைக்குச் சென்றவர் கீரிமலை கடலில் சாவு

1 »

வும் தெரிவிக்கப்படுகின்றது.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் சடலத்தைப் பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு சடலத்தை அனுப்புமாறு பணித்தார். தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஒ-10-36)

# சிறுபான்மையினரின் பிரச்சினையை செனட் சபை மூலம் தீர்க்க முடியாது

1 »

தற்கு சிறந்த உபாயம் செனட் சபை அல்ல என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

செனட்சபை அமைக்கும் திட்டமானது உதவாக்கரையான திட்டமாகும். இதனால், எதையும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது. செனட் சபையில் அங்கம் வகித்தவன் என்ற அடிப்படையில் இதனை நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். கையாலாகாத ஒரு சபையே செனட்சபை என்பது எனது உறுதியான கருத்தாகும்.

சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளை செனட் சபை மூலம் ஒருபோதும் தீர்த்துவைக்க முடியாது என்பது வரலாறு எமக்கு உணர்த்தும் பாடமாகும்.

சர்வதேச அரங்கில் நன்மதிப்பைத் தேடிக்கொள்ளும்பொருட்டே அரசு செனட் சபை என்ற பல்லவியைப் பாட ஆரம்பித்துள்ளது என்பது தெட்டத் தெளிவு.

'யானைப் பசிக்கு சோளப் பொரி' என்பது போலவே இந்த செனட்சபை அமையப்போகிறது. அரசு தனது விசுவாசிகளை அங்கத்தவர்களாக நியமித்து இலக்குகளை அடைந்துகொள்வதற்கே முயற்சிக்கும் - என இடித்துரைத்தார் செனட்டர் மசூர் மௌலானா. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தரப்புக் கருத்துக்களையும் உள்வாங்கியே தீர்வுத் திட்டம்

## இதுவே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு என்கிறார் அமைச்சர் கஜதீர

தேசியப் பிரச்சினைக்கு சகல தரப்பினரினதும் அபிப்பிராயங்களையும் பெற்றுத் தீர்வு காணவேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் - என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசேன கஜதீர தெரிவித்தார். புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை அவர்களின் பெற்றோர், உறவினர்களிடம் ஒப்படைக்கும் வைபவம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு கூறியவை வருமாறு -

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் என்ற ரீதியில் நாட்டிலுள்ள சகல புனர்வாழ்வு முகாம்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் விஜயம் செய்து அங்கு உள்ள வர்களின் எதிர்காலத்தைக் கருதி திட்டங்களை வகுத்தோம். அந்தத் திட்டங்களினூடாக ஏற்பட்ட நட்புறவு காரணமாகவே மிகக்குறுகிய காலத்திற்குள் சுமார் 11 ஆயிரம் இளைஞர் யுவதிகளைப் புனர்வாழ்வளித்து அவர்களை உறவினர்களிடம் ஒப்படைத்தோம்.

அன்று போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்புகள் வித்தியாசமானது. சிலர் விரும்பி அதில் இணைந்திருக்கலாம். இன்னும் சிலர் விரும்பாமலும் இணைந்திருக்கலாம் அல்லது சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக இணைந்திருக்கலாம். ஆனால் அது எவ்வாறாக இருந்தாலும் அவர்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதாகும்.

விரும்பியோ, விரும்பாமலோ அன்று ஆயுதம் ஏந்திப் போராடிய இளைஞர் யுவதிகள் இன்று அபிவிருத்தியிலும் சமாதானத்திலும் இணைக்கப்படவேண்டிய தேவை எமக்கு உள்ளது. இவர்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக புனர்வாழ்வு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக சுய தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் கடன் உதவித் திட்டமொன்று குறைந்த வட்டியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் போராளிகளின் எதிர்கால நலன் கருதி பல முன்னேற்றகரமான திட்டங்களை அரசு முன்னெடுத்து வரும்போது, சில தீய சக்திகள் அதனை திசைதிருப்பி மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு முற்படலாம். இந்த விடயத்தில் விழிப்புடன் இருப்பது அவசியம் - என்றார்.

# இந்து குருமாரைக் கௌரவிக்க முத்திரை வெளியிட ஏற்பாடு

அமரத்துவம் அடைந்த இந்து மதக் குருமார்களைக் கௌரவிக்கும் விதமாக தபால் தலைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்து மத குருமார்களின் பிதாமகராகத் திகழும் அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசாமிக் குருக்கள், சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியத்தின் முதலாவது பீடாதிபதி சாம்பசிவ சிவாச்சாரியார், பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் ஆகியோரின் முத்திரைகளை வெளியிடுவதற்கே ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இதே வேளை நாயன்மார்கட்டில் உள்ள வீதி ஒன்றுக்கும் அமரரான இந்து மதக் குருவும் ஒன்றியத்தின் முதலாவது பீடாதிபதியுமான சாம்பசிவ சிவாச்சாரியாரது நாமத்தைச் சூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் சார்பாக துறைசார்ந்த அனுபவம் மிக்கவர்கள் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்துக்கு உதவ முன்வரவேண்டும் என்று ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது.

(ஒ-14-4)

**AutoCAD**

பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப் பட்ட மாணவர்களே!
உங்களுக்காகவே
Diploma in Eng.Drawing & AutoCAD
ஆரம்பம் :- 28.01.2011
காலை 10.00மணி
அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2831

**கணிதம்**
பிரத்தியேக வகுப்பு
தரம் 6 முதல் O/L வரை
ஆசிரியர் V.N.பத்மநாதன்
10 பேர் கொண்ட குழு
நேரம்-
மு.ப 5.00- 7.00, பி.ப 6.30- 8.30
ஆரம்பம்- 23.01.2012, பி.ப 6.30.
இடம்-
67/5, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

ஆத்மார்த்தப் பிரார்த்தனைக்கு
**அரோஹரா**
தைப்பூச தினத்திலிருந்து...

க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கமைய 100% வரை Scholorship
After A/L O/L
Engineering-USA ICTA Scholorship
BIT University of Colombo
CIMA-UK
Only Rs 14,400 Per Level
University A/L Students } 50% Off
மாணவர்கள் BCS - UK , IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree
Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience
Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing *Hardware *Accounting *DTP *English
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
SMS Your name & Course to 772395895 & Get Scholorship

**மணல் விற்பனைக்குண்டு**
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற மண்கும்பான் மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

உலகத்தரம் வாய்ந்த
பிரித்தானிய பட்டக்கல்வி
edexcel
bcs The Chartered Institute for IT
**HND + BCS**

ஒரே கட்டணத்தில் ஒரே முயற்சியில் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் உலகின் தலைசிறந்த இரு கல்வி நிறுவனங்களின் இரு வேறு தகைமைகளை பெற்றிடும் பொன்னான வாய்ப்பு
எமது நிறுவனத்தில் 2 வருட கால HND கற்கை நெறியினை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு BCS நிறுவனத்தின் முதல் இரண்டு நிலைகளும் விலக்களிக்கப்பட்டு மூன்றாம் நிலைக்கு நேரடியாக தோற்றி பட்டதாரியாக வெளியேறும் வாய்ப்பை எமது நிறுவனம் ஏற்படுத்தி கொடுக்கின்றது.
இவ் அரிய வாய்ப்பை எமது நிறுவனம் மட்டுமே வழங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.
உலகப் புகழ் மிக்க பட்டய நிறுவனமான BCS நிறுவனத்தின் பட்டதாரியாகும் வாய்ப்பை தவற விடாதீர்கள்
IIS CITY CAMPUS
200,Sivan Pannai Road,Jaffna.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk Web : www.iis.edu.lk

**வேலையாள்கள் தேவை**
வவுனியாவில் உள்ள பிரபல்யமான சுவர்க்கா ஹோட்டலுக்கு
★ சமையலாளர் (COOK)
★ காசாளர் (CASHIER- FEMALE)
★ உணவு பரிமாறுபவர் (WAITER)
★ சமையல் உதவியாளர் (HELPER)
உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்,
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தொடர்பு- 0773405396, 07717244?7

**A1 Exam**
Sponsor/Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான
City & Guilds Approved Centre
British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.
DMI COMPUTER EDUCATION
# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.
Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது
IELTS
B1-Exam City & Guilds
A/L, O/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கானது Spoken English
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்
No.113, கன்னாதிட்டி வீதி,
Tel.: 021-222 4403
நெல்லியடி
M.M.V. வீதி,
Tel. : 021-226 2470

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.